www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
පක்கம் 20
ரூபா 11/00
දිනමුරසු වාරමලර්
ஒக்.01-07,1995

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 121

## வடக்கு கிழக்கில் மின்னலும் இடியும்



எக்ஸ்ரே ரிப்போர்ட்

## கயிற்றில் நடக்கும் போர்த் தந்திரம்

லேடீஸ் ஸ்பெசல்



## இராமாயணம் ஆரம்பம்

கூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## தாமதம் நல்லதல்ல

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.
'அன்டநோவ்' விமானம் விழ்ந்ததும்
அதைத்தொடர்ந்து
பல்வேறு வதந்திகள் எழுந்ததும்
அனைவரும் அறிந்ததுதானே!

பாரிய அனர்த்தங்கள்
நடந்து முடிந்தவுடன்
காரணங்கள் கண்டறிய தாமதமாகலாம்.
அந்த தாமதக்கட்டத்தில்
வதந்திகளும்-ஊகங்களும்
வெளிக்கிளம்புவதும் இயல்புதான்!

ஆனால்-விமானி தமிழராக
இருந்தார் என்பதை வைத்து
அவரை ஒரு புலியாக
உருவகப்படுத்திய ஊகங்கள்
பல கேள்விகளை எழுப்பியுள்ளன.

ஒருவருடைய திறமைகள்-
நீண்டகால சேவை வழங்கல்
மூலமாகவே-அதற்குரியவர்களுக்கு
பதவியுயர்வுகள் கிடைக்கின்றன.

திறமையும்-சேவை மூப்பும்
இருந்தும்கூட
இனவாத கண்ணோட்டம் காரணமாக
பதவியுயர்வு பெறமுடியாத
தமிழ் பேசும்
அரச ஊழியர்கள் பலர் உள்ளனர்.

அதேவேளையில்
இனவிகிதாசாரம்கூட
கருத்தில் கொள்ளப்படாமையால்
அரச ஊழியர்கள் நியமனத்தில்
தமிழ் பேசுவோர் தொகை
மேலும் மேலும் குறைந்து வருகிறது.

பொலிஸ் துறையிலும்
முப்படைகளிலும் உள்ள
தமிழர்களை
விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய
நிலமை ஏற்பட்டு வருகிறது.

"தமிழர்களுக்கு எதிரான யுத்தமல்ல;
தமிழர்களை மீட்கும் யுத்தம்"
என்று உரத்துச் சொல்லப்படுகிறது.
யுத்தத்தில் ஈடுபடும்
படையினர் மத்தியில்
தமிழர்களை தேடவேண்டியிருக்கிறது.

இவ்வாறான ஒரு நிலையில்
படைகளில் உள்ள தமிழர்களையும்
சந்தேகக் கண்ணோடு அணுகும்
தவறான போக்கு
தலையெடுத்து வருகிறது.

பாக்கியநாதன் என்னும்
விமானி விமானப்படைக்கு
விசுவாசமாக இருந்து
திறமையால் உயர்ந்தவர்.

வடக்கில் முப்படை நடவடிக்கைகளிலும்
அவர் பங்குகொண்டிருந்தவர்.
ஆனால்-பலியான பின்னர்
அவரையும் ஒரு புலியாக்கிவிட்டார்கள்.

எனினும்-விமானப்படை அதிகாரிகள்
பாக்கியநாதனுக்காக-
வாதிட்டதைப் பாராட்ட வேண்டும்.

ஆனாலும்-இனிவரும் காலங்களில்
முப்படைகளில் தமிழர்கள்
உயர்பதவிகளில் அமர்வது
முயற்கொம்புதானோ என்று
நினைப்பதில் தவறில்லை.

அவ்வாறான நிலை உள்ளபோது
யுத்தத்தின் குணாம்சமும்
இனங்களுக்கிடையிலான யுத்தமாக
மாறிச்செல்லும் அபாயம் நேரும்.

எனவே-முதலில்
இனவாதக் கண்ணோட்டங்களை
தகர்த்தெறியும் போராட்டத்தை
அரசாங்கம் நடத்த வேண்டும்.

பதவியேற்பதற்கு முன்பு
பொது ஜன முன்னணி
இனவாத எதிர்ப்பில் காட்டிய
தீவிர வேகம்
தற்போது தளர்ந்திருக்கிறது.

அதனால்-இனவாதம்
மெல்ல மெல்ல சகலபக்கமும்
வாலை நீட்ட ஆரம்பித்திருக்கிறது.
இதனைக் கவனிக்க
அரச தவறுமானால்-
ஐக்கிய இலங்கை என்பது
கைப்படமுடியாத கனவாகிவிடும்.

சமாதான முழக்கமிடுவோரும்
இனவாதம் வளர்வதையிட்டு
மௌனித்திருப்பது நல்லதல்ல.
இனவாதம் உள்ளவரை
சமாதானம் என்பதும் பகற்கனவு.

□□

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும் வரை-

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## ஜெபிப்போமாக

பிரார்த்தித்தல் அல்லது ஜெபித்தல் என்பது மதப்பற்றுடையவர் எவர் மனத்திலும் எழுகின்ற ஒரு மகத்தான சக்தி. நேரங்காலமில்லாமல் மனத்தில் கடவுள் எண்ணம் எழும்பொழுது நம்மையறியாமலேயே ஜெபிக்கிறோம். எனவே ஜெபம் பண்ணுவதற்குக் காலஎல்லை உண்மையில் இல்லை. உண்மையாகச் சொன்னால் குறிப்பிட்ட இடங்கூட இல்லை. என்றாலும் நாம், இடம், காலம், நேரம், அமைப்பு, ஒழுங்குமுறை, நிலை எல்லாவற்றையும் அமைத்துக்கொண்டு ஜெபித்து வருகிறோம். இவ்வாறு ஜெபம் முக்கிய இடம் வகிப்பதால் நாம் வேதாகமத்தில் ஜெபம் பற்றி காணப்படுபவைகளில் முக்கியமானவைகளைப் பார்ப்போம்.

"ஜெபத்தில் நிலையாயிருங்கள்" (உரோ:12:12) என்று கூறப்படுகிறது." "எப்பொழுதும் மகிழ்ச்சியாயிருங்கள், இடைவிடாது ஜெபியுங்கள், என்ன நேர்ந்தாலும் நன்றிகூறுங்கள்" – (1 தெசலோ: 5:16–18).

மேலும், "நீதிமான் முழு உள்ளத்தோடு செய்யுமன்றாட்டு ஆற்றல் மிக்கது." (யாகப்பர்: 5:16) என்று கூறப்படுகிறது.

"பரமண்டலங்களிலே இருக்கிற எங்கள் பிதாவே" என்று அழைத்து ஜெபம் பண்ணும்படி கூறிய இயேசு சொல்கிறார், "உன் அறைக்குள் சென்று கதவைத் தாழிட்டு, மறைவாயுள்ள உன் தந்தையை நோக்கி ஜெபம்செய்" என்கிறார். ஆம், நாமெல்லாரும் "ஒருவருக்காக ஒருவர் ஜெபியுங்கள், அப்போது குணமடைவீர்கள்"– (யாக்: 5:16) என்பதால் நம் நாட்டின், வீட்டின் எல்லாருடைய உடல், உள நோய்களுக்காக ஜெபிப்போமாக. எப்பொழுதும், என்றும், எந்நேரத்திலும் ஜெபிப்போமாக...

- ஏ.பி.வி.கோமஸ் -

## ஆன்மீகம்



### தொழுகையை விடுவதன் கேடுகள்

1. ஒரு அடியாரிடம் மறுமையில் முதன் முதலில் தொழுகையைப் பற்றியே கேட்கப்படும். அது சீர்பெற்றிருந்தால் அவரது எல்லா அமல்களும் சீர்பெற்றுவிடும். அது சீர்கெட்டிருந்தால் எல்லா அமல்களும் சீர் கெட்டதாகிவிடும்.

2. ஒரு முஸ்லிமுக்கும் முஸ்லிம் அல்லாதவர்க்கும் உள்ள வித்தியாசம் தொழுகைதான்.

3. தொழாதவரை இறைவன் மறுமையில் மிக்க கோபத்தோடு நோக்குவான்.

4. தொழுகையை அறிந்திருந்தும் எவர் தொழவில்லையோ அவர் இஸ்லாத்தை விட்டும் வெளிப்பட்டவராகிறார்.

5. எவருக்கு ஒரு நேரத் தொழுகை தவறிவிடுகிறதோ அவருக்கு அவரின் மனைவி, மக்கள், செல்வங்கள் யாவும் தவறிவிட்டால் எவ்வளவு நஷ்டமும், கஷ்டமும் உண்டாகுமோ அவ்வளவு கஷ்டமும், நஷ்டமும் உண்டாகும்.

6. எவர் ஐவேளை தொழுகைகளையும் பேணித் தொழவில்லையோ அவருக்கு மறுமையில் ஈடேற்றம் கிடைக்காது. ஈடேற்றம் பெறுவதற்குரிய ஆதாரமும் ஏற்படாது. அவரிடம் எத்தகைய பிரகாசமும் இராது.

தொழுகையை விட்டவர்கள் மறுமையில் இறைவனிடம் எப்படியும் தப்பமுடியாது என்பதை உணர்ந்து ஐவேளை தொழுகைகளையும் பேணுதலாக, இதயசுத்தியுடன் தொழவேண்டும்.

இர்பானா நியால்

## கவிதைப்போட்டி இல – 118

### பரிசுக்குரிய கவிதை

### கால் விலங்கு

வேலியே பயிரை மேய்ந்தால்
விலங்குகள் தானே வரும்!
பாதியில் முடியும் வாழ்க்கை
பகலிலும் வேலி மேயும்!
காலிலோர் கால் விலங்கு
கைகளில் முள் விலங்கு!
நீரிலும் மூழ்கி யங்கு
நிலையற்ற உடலும் கண்டேன்.

-காரைதீவூர் சிவம், குருக்கள்மடம்-

### இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

**யாரென்று இனம்காண?**

பிறந்தகத்துப் போருக் கஞ்சி
சிறந்த வாழ்வு தன்னைத்தேடி
ஊரு விட்டு இங்கு வந்து
உருச் சிதைந்த உடலுடனே
அநாதரவாய் ஆற்றினிலே
அமிழ்கின்ற சடலமிதை
யாரென்று இனம்காண...?

எம்.ஏச்.யுனைதீன், ஏறாவூர்-6.

**யுத்தத்தின் தாண்டவம்**

"கொடிய யுத்தத் தாண்டவத்தில்
கொதித் தெழுந்த தீப்பிழம்பு
காரணங்கள் ஏதுமின்றி
கோரமுடன் தாக்கியதால்
பாதங்கள் வெந்துருகி
பதமான தோல் கருகி
வேதனையில் உடலோடு
விழுந்திருக்கும் நிலையன்றோ".

முஸ்தபா-இஸ்ஸத், ஏறாவூர்-01

**உறங்குகின்றேன்...!**

காலுண்டு தலையில்லை
உடலுண்டு உயிரில்லை
உறங்குகின்றேன் உறங்குகின்றேன்
உயிர்விட்டு - நான் உறங்குகின்றேன்.

அ.தேவலோகிதன்-செட்டிபாளையம்.

**சருகு!**

யுத்தப் புயலால்
தூக்கியெறியப்பட்ட
மனிதச்சருகு!

ந.ரதீஸ்வரன், தம்பிலுவில்-02.

**சோர்ந்த கால்கள்**

வடபுலத்து ஓர் அகதி,
உயிருக்குப் பயந்து இங்கு,
ஓடோடி வந்துவிட்டான்!
அல்லும் பகலும் அவன்,
அலைந்து திரிந்து விட்டு,
பாதங்கள் தெரிய இங்கு,
பற்றைக்குள் விழ்ந்து விட்டான்!

அ.முஹம்மது-முஸ்அப்ரஸீன், நிந்தவூர்-03.



**பட்ட கதை சொல்லும்**

பாரும் ஐயா இந்தப்
பாதத்தை...!
பேசும் சக்தி இதற்கு
இருந்தால்
கண்களைக் கடத்தும்
கயவர்கள் கதை சொல்லும்!
சிறுநீர்ப்பை கடத்தும்
தீயவர் கதை சொல்லும்!
பாழும் இந்தப் பூமியில்
பட்ட கதை சொல்லும்!

ஏ.விஜி-ரொரொண்டோ-கனடா

**மறப்பு**

நடந்து போன கால்கள்-இங்கே
நலிந்து போனதோ-இல்லை
படரும் போரின் நிலையால்-மேலும்
போக மறுத்ததோ?

திருமதி.மல்லிகா பத்மநாதன், பசறை.

**நிகழ்கால நிஜங்கள்**

துப்பாக்கி ரவைகளுக்கு
துடிதுடித்து மரணித்து
மீளாத்துயில் கொள்ளும்
இளம் மைந்தன் யார் மகனோ?


செல்வி.மு.ஹா. றுசைனா, அக்கரைப்பற்று-03.

**கண்டுபிடியுங்கள்...**

இதுவும்
தியவன்னா ஓயாவில்
கண்டுபிடிக்கப்பட்டதோ?
எங்களின் முகங்கள் தான்
முற்றாகச் சிதைக்கப்பட்டுள்ளதே!
முடியுமானால் பாதங்களிலாவது
கண்டு பிடியுங்களேன்...!

எச்.எம்.அனஸ் றஹ்மான், சிலாபம்.

## கவிதைப் போட்டி இல-121



### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 07.10.1995

-முகவரி-

கவிதைப் போட்டி இல: 120
தினமுரசு வாரமலர்
த.பெ.இல–1772,
கொழும்பு.

**மீதமும், மிடுக்கும்**

குண்டுகள் துளைத்து இங்கு,
குருதி கொட்ட விழ்ந்துவிட்டான்.
மீதமுள்ள பாதமிங்கே
மிடுக்காக தெரிகிறதே!

நஸபியா பஹார்தீன்,புத்தளம்.

**யார்?**

நடக்கின்ற பாதமிது!
வெடிக்கின்ற குண்டாலே
மடிந்து விட்ட பாவமிது!
யார் செய்த கோரமிது.

ராணி சாந்தலிங்கம்,
மட்/ குருக்கள்மடம்.

**சிதைவுகள்**

அங்கமெல்லாம்
சிதைக்கப்பட்டு,
அதனாலே,
முகவரியும்
தொலைக்கப்பட்டு,
எந்தக்குளத்தில்
கண்டெடுக்கப்பட்டதோ,
இனம்தெரியாத
இந்தக்காலிரண்டும்.

பூ.இதயரெத்தினம், ஆரையம்பதி-03.

**அநாதரவாகிய கால்கள்**

காலமாற்றம் தீயோரை வளர்த்தது
அவர் இலட்சியம் பணமானபோது.
அதை அடையும் வழி? சிந்தனையில் வெற்றி
இரக்கமற்றோர் கசாப்புக் கடைக்காரர்களாகினர்.

மனித உயிர்தானே பெறுமதியற்றது. ஆனால்
தலையைப் பிடுங்கின் கண் விலைபெறும்.
உடல் கிடந்தால் 'கிட்னி' விலைபேசும்.
மோதிரம் கிடந்தால் கையும் போய்விடும்.
மிகுதியாய் கால்கள் அனாதரவாகின...!

சாய்ந்தமருது-எம்.ஐ.எம்.அஸ்ரப்.

**மீதி**

வாவி காவி வந்து
கரை சேர்த்த போது
கால் மட்டும் மீதி.

வ.ஆதவன், களுவன்கேணி.

## வாசகர் சாலை

பட்டுக்கோட்டையாரின் நாவல் முதல்வாரத்திலேயே திகில் வாரங்களுக்கு அத்திவாரமிட்டுவிட்டது. சபாஷ்!

சி.சுலோசனா, கொழும்பு-11.

• •

பிரபாகரின் நடையோ தனிப்பாணி. முரசின் பாணியோடு கலப்பதிலே சுவை ஜாஸ்தி.

எம்.பர்ஹானா, பாணந்துறை.

• •

'விலை உயர்ந்த குற்றம்' முதல்வாரமே நம்மையெல்லாம் தன்பக்கம் இழுத்துவிட்டது.

கா. பானுமதி, கண்டி.

• •

பக்கச்சார்பில்லாமல் தவறுகளைச் சுட்டிக்காட்டும் நாரதருக்குப் பாராட்டுக்கள்.

வி.திருமாவளவன், மாத்தளை.

• •

கார்லோஸ் பற்றிய செய்திகளை மட்டுமே அறிந்த எமக்கு, கார்லோஸின் சாகசங்களை படம்பிடித்துக் காட்டும் புதிய தொடர் வரவேற்கத்தக்கது.

ஆ.பகீரதன், நுவரெலியா.

• •

கார்லோஸின் அறிமுகமே சூப்பர். நிஜக்கதை என்பதால் பிரமிப்பு நிச்சயம். ரசிகனுக்குப் பாராட்டு.

வி.என்.சம்சுதீன், புதிய காத்தான்குடி.

• •

தற்போது தமிழில்வரும் அரசியல் விமர்சனங்கள் பல முரசின் பாணியைப் பின்பற்றியோ, அல்லது முரசை படித்துவிட்டோதான் எழுதப்படுவதுபோல தெரிகிறது. அதனால் நம்முரசுக்கு பெருமைதானே!

எம்.முரளீதரன், சுவிற்ஸர்லாந்து.

முரசோடு கைகுலுக்கியவர்களில் இங்கு இடம் பிடித்துக்கொள்பவர்கள்:

எம்.ஐ.எம். ஜெலீம், காத்தான்குடி-06.
எல்.சத்தியதேவன், திருமலை.
சிவானந்தன், வெள்ளவத்தை.
வீ.ரவிச்சந்திரன், முறக்கொட்டாஞ்சேனை.
மகேஸ்வரி ராமதாஸ், வரகாஸ்தென்ன-வத்தேகம.
செல்வி சகிந்தா சதாசிவம், உன்னஸ்கிரிய-எல்கடுவ.
எல்.எச்.பனீல், ஹொறவ்பொத்தானை.
ஐா.றாணிமுஹம்மத், அக்கரைப்பற்று.
தி.ரகுராஜா, பேசாலை.
பரதலிங்கம் ஜனந்தினி, பூந்தோட்டம்-வவுனியா.
மயால், புத்தளம்.
கா.ஜ்வரத்தினம், ஃபிரான்ஸ்.
எல்.சுதாகர், ஃபிரான்ஸ்.
மு.நம்பிராஜன், கனடா.

முரசில் வெளியான 'சொந்தபூமி' எனும் தலைப்பிலான ஒரு முஸ்லிம் அகதியின் உண்மைக்கதை மிகவும் சிறப்பாக அமைந்து இருந்தது. வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு 5வது வருடம் ஆகும் இவ்வேளை இவ்வாறான காலத்தின் தேவையை உணர்ந்து பிரசுரித்த முரசுக்கு பல நன்றிகள்.

கே.சி.எம். அஸ்ஹர், இஸ்மாயில்புரம்.



கப்பல் கப்பல் என்று
எல்லோரும் கத்தியபோது
அமைதியாய் இருந்தோம்.
உன்னைக் கண்டதும்
அறிந்து கொண்டோம்.

சுபா வரன், கண்டி.

நெத்தியடியான சூப்பர் தொடர் சூப்பராகவே...! சுரக்கும் என.. எதிர் பார்க்கிறேன்.

மற்றும் அதிரடியாக அசரவைக்கிறார் அதிரடி அய்யாத்துரை.

கின்னியாவீர், கின்னியா-04.

இனிப்பான தேன்கிண்ணத்தில், குறிப்பாக "கொஞ்சம் இருங்க மச்சான்" சிறப்பாக இருந்தது. தொடர் முடிவு மகாபிரமாதம். கூடவே, "நெத்தியடித்" தொடருக்கு, "பூச்செண்டுகளோடு!..."

வாஹிட் ஏ. குத்தூஸ்

அற்புதன் தரும் "அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை" அரசியல் தொடர் கட்டுரை பிரமாதம். வித்தியாசமான சிறுகதைகளைத் தரும் முரசின் பணி மேலும் தொடர எனது வாழ்த்துக்கள்.

எவ்.ரிபாயா ராசிக், மாதிப் பொளை.



படிப்பகம்

www.padippakam.com

# வெளிநாட்டில் புலிகள் அவசர நிதி திரட்டல்

## வட்டி கொடுத்து கடன் வாங்கும் திட்டம் அறிமுகம்

**வடபகுதியில் புலிகள் அமைப்பினரின் தமிழீழ பாதுகாப்பு நிதிக்கு பணம் செலுத்த முடியாதவர்கள் தமது குடும்பத்தில் ஒருவரையாவது இயக்கத்திற்கு அனுப்ப வேண்டும் என்று புலிகள் அமைப்பினர் கண்டிப்பான அறிவித்தல் வெளியிட்டுள்ளனர். இதேவேளை வெளிநாடுகளில் கடன் அடிப்படையில் நிதி தருமாறு புலிகள் அமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர். பெரியளவில் ஆயுதக் கொள்வனவு ஒன்றுக்காகவே பெருந்தொகைப் பணம் உடனடியாக தேவைப்படுவதாக நம்பப்படுகிறது.**

### வீட்டுக்கொருவர்

வடபகுதியில் புலிகள் அமைப்பினர் நிதி திரட்டலிலும், ஆள் திரட்டலிலும் தொடர்ந்து தீவிரம் காட்டி வருகின்றனர்.

கடந்த காலங்களில் வறிய குடும்பத்தினருக்கு நிதி செலுத்துவதில் புலிகள் அமைப்பினர் விலக்களித்திருந்தனர். தற்போது வறிய குடும்பத்தினராக இருந்தாலும் நிதி செலுத்தியேயாக வேண்டும் என்று புலிகள் கூறியுள்ளனர். வறிய குடும்பத்தினராக இருந்தால் ஐயாயிரம் ரூபாய் செலுத்தினால் போதுமானது. ஆனால் கட்டாயமாக செலுத்த வேண்டும்.

அவ்வாறு நிதி செலுத்த வசதியில்லை என்றால், குடும்பத்திலிருந்து ஒருவரையாவது இயக்கத்திற்குத் தரவேண்டும் என்று புலிகள் கோரியுள்ளனர். குடும்பத்தில் வயதானவர்கள் இருந்தால் அவர்களை தமது துணைப்படையில் புலிகள் சேர்த்துக் கொள்கின்றனர்.

'சென்றி' பார்ப்பது, உணவு, தேநீர் தயாரிப்பது, மற்றும் உதவிகரமான வேலைகளில் துணைப்படையினர் ஈடுபடுத்தப்படுகின்றனர். அவர்களுக்கும் அடிப்படைப் பயிற்சி வழங்கப்படுகிறது.

வெளிநாடுகளில் உறவினர்கள், மற்றும் பிள்ளைகள் உள்ள குடும்பத்தினரைப் பொறுத்தவைர அவர்களின் வசதியைக் கணக்கிட்டு புலிகள் அமைப்பினர் ஒரு தொகையை நிர்ணயிப்பார்கள். எந்த நாடுகளில் உறவினர்கள் இருக்கிறார்கள், எத்தனைபேர் இருக்கிறார்கள் என்பதைப் பொறுத்து நிதித் தொகை நிர்ணயிக்கப்படும்.

ஆள்பலம், பணபலம் இரண்டையும் தாருங்கள். மீதியை நாம் பார்த்துக் கொள்கிறோம் என்று புலிகள் கூறிவருகின்றனர்.

### கடன் திட்டம்

இதேவேளையில் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தமிழர்களிடம் புலிகளின் கிளையினர் மாதாந்தம் நிதி பெற்று வருகின்றனர். அந்த நிதிதிரட்டல் ஒரு புறமிருக்க, தற்போது கடன் திட்டமொன்றை புலிகள் ஆரம்பித்துள்ளனர்.

சுவிற்சர்லாந்தில் கடன்திட்டப்படி நிதி சேர்ப்பு நடவடிக்கை புலிகளால் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

சுவிற்சர்லாந்தில் குடியுரிமை பெற்றுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு 10 ஆயிரம் சுவிஸ் பிராங் வங்கியில் கடனாகப் பெறமுடியும். கிட்டத்தட்ட நமது நாட்டு பெறுமதிப்படி 4 இலட்சம் ரூபாய். குறைந்த வட்டியில் இக் கடன் வசதியை வங்கி வழங்கும்.

எனவே - சுவிஸில் குடியுரிமை பெற்ற இலங்கைத் தமிழர்கள் ஒவ்வொருவரும் 5 ஆயிரம் சுவிஸ் பிராங் வங்கியில் கடனாகப்

(அலுவலக நிருபர்)

பெற்றுப் புலிகளுக்குத் தரவேண்டும். அதற்காக வங்கியால் அறவிடப்படும் வட்டியைப் புலிகள் அமைப்பினர் செலுத்துவார்கள். கடனாகப் பெற்ற தொகையை மாதாந்த ரீதியில் புலிகள் திருப்பிச் செலுத்துவார்கள். இதுதான் புலிகள் வெளிநாடுகளில் அறிமுகப்படுத்தியுள்ள கடன் திட்டமாகும்.

உடனடியாகப் பெருந்தொகை நிதி தேவைப்பட்டதாலேயே புலிகள் கடன் திட்டத்தை முன்வைத்துள்ளதாகக் கருதப்படுகிறது.

வடக்கிலும் நிதி திரட்டப்படுவதால் அங்கு பணம் அனுப்ப வேண்டிய அவசர தேவை ஏற்பட்டிருக்காது. எனவே- வேறொரு தேவைக்காகவே அவசர நிதி தேவைப்படுகிறது என்று நம்ப இடமிருக்கிறது.

### யாழ்ப்பாணத்தில்

யாழ் - குடாநாட்டில் பதிலுக்குப் பதிலான ஷெல் தாக்குதல்களையே கூடுதலாகப் புலிகள் பிரயோகித்து வருகின்றனர்.

இதேவேளை தரைமூல படை நகர்வை விட ஆகாயமார்க்க தாக்குதலே வடக்கில் நடைபெறுவதைப் பாதுகாப்பு அமைச்சு 26.09.95ல் வெளியிட்டுள்ள அறிக்கை தெளிவுபடுத்துகின்றது. புலிகளது இலக்குகள் மீதே விமானப்படையினர் தாக்குதல் நடத்துவதாகவும், வல்வெட்டித்துறையில் கடற்புலிகளின் இலக்குகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. புலிகளது தாக்குதல்களுக்கு முன்னதாக இவ்வாறான தாக்குதல்கள் அவசியம் என்று பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

வெள்ளிக்கிழமை 29.09.95 அன்று யாழ்ப்பாணத்தில் பொது மக்களால் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடத்தப்படுகிறது. பொதுமக்களது பாதிப்புக்கள் தவிர்க்கப்பட வேண்டியதை வலியுறுத்துவதே ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் நோக்கமாகும்.

# பலியானவர்கள் நினைவாக துக்கம் அனுஷ்டிப்பு

(ஏறாவூர் நிருபர்)

**க**டந்த 1990ம் ஆண்டு ஏறாவூர் தளவாயிலில் கொல்லப்பட்ட 40 பொது மக்களின் நினைவை அவர்களது உறவினர்களும், ஊரவர்களும் துக்கமாக அனுஷ்டித்தனர். அன்றைய தினம் தமது தொழில்களுக்குச் செல்லாமலும், வேறு அலுவல்களுக்குச் செல்லாமலும் கோயில்களில் அமுது வழங்கிக் கொல்லப்பட்டோரை நினைவு கூர்ந்தனர்.

இதேவேளை பொதுமக்களின் இந்த ஏற்பாட்டுக்கு ஆதரவாக அன்றைய தினம் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்வோரைப் புலிகள் தடுத்திருந்தனர் என்று பொதுமக்கள் தெரிவிக்கிறார்கள்.

1990ம் ஆண்டு கிழக்கில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களின் போது பல நூற்றுக்கணக்கான தமிழ் முஸ்லிம் மக்கள் பலியானார்கள் நினைவிருக்கலாம்.

இது ஒருபுறமிருக்க மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்கள் வாழும் பகுதியில் தமிழ் மக்களும், தமிழ் மக்கள் வாழும் பகுதியில் முஸ்லிம்களும் எதுவித அச்சமுமின்றி முன்னர் போன்று பரஸ்பர சிநேகிதத்துடன் வாழும் சூழ்நிலை ஏற்பட்டு வரும் இவ்வேளையில் இந்த அந்நியோன்ய உறவைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் சில தீய சக்திகள் இறங்கியுள்ளதை அவதானிக்க முடிவதாகத் தமிழ் முஸ்லிம் ஐக்கியத்திற்காகப் பாடுபடுவோர் வேதனைப்படுகிறார்கள். இத்தகைய விஷம சக்திகள் மீது விழிப்பாயிருக்குமாறும் அவர்கள் வேண்டுகோள் விடுகிறார்கள். குழப்பத்தைத் தூண்டும் நடவடிக்கைக்கான சில ஆயத்தங்கள் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# யாழ்–குடாநாட்டில் மட்டும் 10 கோடி

## சாவகச்சேரி தொகுதியில் 68 இலட்சம்

**யாழ்**-குடாநாட்டில் புலிகளது நிதி திரட்டல் நடவடிக்கை முன்னெப்போதும் இல்லாதவாறு தீவிரமடைந்துள்ளது.

இதுவரை குறைந்தது 10 கோடி ரூபாய் திரட்டப்பட்டிருப்பதைப் புலிகள் வெளியிட்டு வரும் செய்திகளே உறுதிப்படுத்தியுள்ளன.

31.08.95 அன்று யாழ்-குடாநாட்டில் சாவகச்சேரித் தொகுதியில் நிதி வழங்கும் கூட்டம் ஒன்று நடைபெற்றது. புலிகளது நிதிப்பொறுப்பாளர் தமிழேந்தியிடம் 50 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா ஒப்படைக்கப் பட்டது.

இந் நிகழ்ச்சியில் சரசாலை சனசமூக நிலையத் தலைவர் சபாநாயகம் 50 ஆயிரம் ரூபாவையும், மட்டுவில் வளர்மதி சனசமூகநிலையத் தலைவர் கிருஷ்ணன் 50 ஆயிரம் ரூபாவையும் தமிழேந்தியிடம் கையளித்தனர்.

சாவகச்சேரியில் உள்ள பொது ஸ்தாபனங்கள் சேகரித்து வழங்கிய நிதியின் தொகையே 50 இலட்சத்து 25 ஆயிரம் ஆகும்.

இதுவரை தொகுதி ரீதியாகத் திரட்டிய மொத்தத் தொகை குறித்துப் புலிகள் திட்டவட்டமாக எதுவும் தெரிவிக்கவில்லை. 10 கோடிக்கு மேல் சேர்ந்துள்ளதென்று மட்டுமே தெரிவிக்கப்பட்டு வருகிறது.

சாவகச்சேரியில் கைதடியில் நடைபெற்ற மற்றொரு நிதிக்கை யளிப்புக் கூட்டத்தில் 18 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாவை நாவற்குழி பகுதி மக்கள் புலிகளது நிதிப்பொறுப்பாளரிடம் கையளித்தனர்.

கைதடியில் நடைபெற்ற நிதி வழங்கும் நிகழ்ச்சியில் சின்னத்தம்பி சரவணமுத்து என்பவர் ஒரு இலட்சம் ரூபாவை வழங்கினார். புலிகளுக்கு நான் கொடுப்பது போதாது. அவர்கள் 100 கோடியைத்தான் கேட்கிறார்கள். நாம் வாரி வழங்க வேண்டுமென்று சின்னத்தம்பி சரவணமுத்து கூட்டத்தில் உரையாற்றினார்.

நிதிக்கையளிப்பு நிகழ்ச்சிகளை பெரும் பிரசாரக் கூட்டங்களாகப் புலிகள் நடத்தி வருகின்றனர். அதன் மூலம் எந்தப் பகுதியில் இருந்து அதிக தொகை வழங்குவது என்ற போட்டியை உருவாக்கி, நிதி திரட்டலை சுறுசுறுப்பாக்குவதே புலிகளது நோக்கமாகும்.

# இடம்பெயர்ந்தோர் வீடுகளில் கைவரிசை

## உள்ளூர் திருடர்கள் பாடு கொண்டாட்டம்

**யாழ்** குடாநாட்டில் வலிகாமம் மேற்கிலிருந்து பொதுமக்கள் இடம் பெயர்ந்து சென்றுள்ள வீடுகளில் திருட்டுக்கள் நடைபெற்று வருகின்றன.

உள்ளூர் திருடர்களின் கைவரிசையே அத்திருட்டுக்கள் என்று ஈழநாதம் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

திருட்டுக்கள் குறித்து மேலும் தெரிவிக்கப் படுவதாவது:

மக்களற்ற வீடுகளின் கூரைஓடுகள் இரவோடு இரவாகத் திருட்டுப்போய் விடுகின்றன. தொல்புரம் பகுதியில் உள்ள வீடொன்றில் இரவோடு இரவாக முழுக் கூரை ஓடும் காணாமல் போயிருந்தது.

இதேபோல சுழிபுரத்திலுள்ள சத்தியக்காடு பொதுச் சந்தைக் கட்டிடத்தின் கூரை ஓடுகளும் திருடர்களால் சுருட்டிச் செல்லப் பட்டுவிட்டன. இதனால் வியாபாரிகள் நிலை பரிதாபமாக இருக்கிறது.

பல வீடுகள் உடைக்கப்பட்டு பெறுமதியான பொருட்கள் கொள்ளையிடப் பட்டுள்ளன. மழைக் காலத்திற்காக வீடுகள் பலவற்றில் சேர்த்து வைத்திருந்த விறகுகள் கூடக் களவாடப்பட்டுள்ளன.

மக்கள் இடம்பெயர்ந்து சென்றுள்ள போதும் திருட்டுக்கள் நடைபெற்றுள்ள பகுதிகள் புலிகளது கட்டுப்பாட்டிலேயே இருக்கும் பகுதிகளாகும். புலிகளது கண்காணிப்பையும் மீறித் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி வருகிறார்கள்.

# இடம் பெயர்ந்த பாடசாலைகள்

**யாழ்**-குடாநாட்டில் சில பாடசாலைகளும் இடம் பெயர்ந்துள்ளன.

அளவெட்டி தெற்கு றோ.க.த.க. பாடசாலை, கோப்பாய் வடக்கு சி.த.க. பாடசாலையில் இயங்கி வருகிறது.

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மருதனாமடத்தில் செயற்பட்டு வருகிறது.

எனினும் மாணவர்கள் வரவு குறைவாகவே இருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது. பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அனுப்ப பெற்றோர்கள் தயங்குவதே மாணவர் வரவு வீழ்ச்சியடைந்துள்ளமைக்கு காரணமாகும்.

# புலிகளால் மரணதண்டனை

**வ**லிகாமம் பகுதியைச் சேர்ந்த 65 வயது நிரம்பிய விநாயகமூர்த்தி என்பவருக்கு புலிகளது நீதிமன்றம் மரணதண்டனை விதித்துள்ளது. வயது குறைந்த பெண்மீது பலாத்கார பாலுறவு வைத்துக்கொண்ட குற்றத்திற்காகவே மரணதண்டனை விதிக்கப் பட்டது.

இவ்வாறான குற்றங்களுக்கு தொடர்ந்தும் சாவொறுப்பு (மரணதண்டனை) தண்டனை வழங்கப்படும் என்றும் புலிகளது நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

# தப்பிவந்த கரும் புலி பலியானார்

**ஜூ**லை மாதம் 16ம் திகதி (16.07.95) காங்கேசன்துறையில் நடைபெற்ற கடற் சண்டையின்போது கரும்புலித் தாக்குதலும் இடம்பெற்றதல்லவா. அந்த சண்டையில் கடலில் குதித்த பெண் கடற்புலிகள் இருவர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர். ரூபவாஹினி தொலைக்காட்சியில் அவர்களது பேட்டியும் ஒளிபரப்பாகியிருந்தது.

அதே சண்டையில் தரையிறக்க கப்பலை தாக்கும் முயற்சி தோல்வியடைந்தமையால் உயிர்தப்பி புலிகளிடம் சென்றடைந்தவர் பெண் கடற்கரும்புலி செவ்வானம். (இது தொடர்பாக முரசில் விபரமான தகவல் வெளியாகியிருந்தது)

கடந்த 20.09.95 அன்று காங்கேசன் துறையில் நடைபெற்ற கடற்சண்டையில் செவ்வானம் மீண்டும் கரும்புலியாக அனுப்பி வைக்கப்பட்டார். அதில் அவர் பலியாகியுள்ளார். அவர் மூளாய் தெற்கு சுழிபுரத்தைச் சேர்ந்தவர். கிருஷ்ணபிள்ளை சுமதி என்பது சொந்தப் பெயராகும்.

# ஆங்கிலத்தில் விபரம் கேட்கிறாங்கள்

**ம**ட்டக்களப்பு நகரில் குடியிருப்போர், தங்கியுள்ளோர் விபரங்கள் தற்போது சேகரிக்கப்பட்டு வருவது தெரிந்ததே.

வீடுகள் தோறும் படிவங்கள் வழங்கப் பட்டு, வீடுகளில் உள்ளோரின் முழு விபரங்களும் குறிப்பிடுமாறு கேட்கப் பட்டுள்ளது.

கிராம சேவையாளர்களால் வழங்கப் படும் அந்தப் படிவங்கள் ஆங்கிலத்தில் உள்ளதால் அவற்றைப் பூர்த்தி செய்வதற்கு பலரும் சிரமப்படுகின்றனர்.

தமிழ் பேசும் மக்கள் வாழும் மட்டுநகரில் தமிழில் படிவங்கள் வழங்கப்படாமல் ஆங்கிலத்தில் மட்டுமே வழங்கப்பட்டமை ஏன் என்று புரியவில்லை.

மட்டக்களப்பு மாநகர மேயர் செழியன் பேரின்பநாயகம் இது தொடர்பாக சம்பந்தப் பட்ட அதிகாரிகளோடு பேசியுள்ளார். ஆங்கிலம் தெரியாதவர்கள் பலர் பணம் கொடுத்து படிவங்களை நிரப்ப வேண்டியுள்ளது. தமிழில் படிவங்கள் வழங்குவதே உகந்தது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# வங்கிகளில் பணப் பற்றாக்குறை

**யாழ்**-குடாநாட்டிலுள்ள அரச-தனியார் வங்கிகளில் பணக் கொடுப்பனவு மட்டுப் படுத்தப்பட்டுள்ளது. இதனால் வங்கிகளில் பணத்தை சேமித்தவர்கள் அவற்றை மீளப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வங்கிகளில் கையிருப்பு பற்றாக் குறையாக இருப்பதும், நீண்டகாலமாக கொழும்பில் இருந்து பண நோட்டுக்கள் குடாநாட்டு வங்கிக் கிளைகளுக்கு எடுத்துச் செல்லப்படாமையுமே கொடுப்பனவுகள் மட்டுப்படுத்தப்படக் காரணம் என்று கூறப்படுகிறது.

இதேவேளை, யாழ்-குடாநாட்டில் பணத்தை சேமிக்க தமது 'தமிழீழ வைப்பகத்தை' நாடுமாறு புலிகள் கோரியுள்ளனர். சமீபத்தில் யாழ்ப்பாணம் நெல்லியடியில் புலிகளது வங்கியின் மூன்றாவது கிளை திறந்து வைக்கப்பட்டமை தெரிந்ததே.

# தீபாவளியில் ஆர்வமில்லை?

**யா**ழ்-குடாநாட்டில் எதிர்வரும் தீபாவளிக் கொண்டாட்டங்கள் களைகட்டும் என்று தான் நம்பவில்லையென்று வடபகுதியில் இருந்து வந்த பயணி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்-குடாநாட்டிலுள்ளவர்கள் கொழும்பில் உள்ள தமது உறவினர்களுக்கு எழுதியுள்ள கடிதங்களில் தீபாவளிக்காக ஆடை, அணிகளை அதிகம் கொள்வனவு செய்ய வேண்டாம். அவற்றையும் கட்டிக் காவித் திரிவதும், பாதுகாப்பதும் கஷ்டமானது என்று தெரிவித்துள்ளனராம்.

பழைய உடுப்புக்கள் என்றால் இடம் பெயரும்போது கைவிட்டுச் செல்ல முடியும். புதிய உடுப்புக்கள் என்றால் கைவிட்டுச் செல்ல மனம் வராது. காவித்திரியவும் இயலாது. அதுதான் அவ்வாறு தெரிவித்துள்ளனர் என்று அந்தப் பயணி தெரிவித்தார்.

# புலிகளும் செய்தித் தடை

**யா**ழ் குடாநாட்டில் வெளியாகும் பத்திரிகைகளில் ஏனைய தமிழ் கட்சிகளின் செய்திகள் தணிக்கை செய்யப்பட்டே வெளியாகின்றன.

வடக்கு நிலவரம் குறித்து கொழும்பில் தமிழ்கட்சிகளின் தலைவர்கள் அறிக்கை வெளியிட்டால் அவர்களது பெயர்கள் தணிக்கை செய்யப்பட்டே செய்திகள் வெளியிடப்படுகின்றன.

பாராளுமன்றத்தில் தமிழ்கட்சிப் பிரதிநிதிகள் உரையாற்றிய விடயங்களில் அரசுக்கெதிரான அம்சங்களை மட்டுமே யாழ் குடாநாட்டுப் பத்திரிகைகள் வெளியிடுகின்றன. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார் என்று குறிப்பிட்டு மட்டுமே அந்த விடயங்களும் பிரசுரமாகின்றன.

# அமெரிக்காவின் போக்கு இந்தியா அறிய ஆவல்

விடுதலைப் புலிகள் தொடர்பாக அமெரிக்கா கொண்டுள்ள கண்ணோட்டம் குறித்து இந்திய மத்திய அரசு ஆராய்ந்து வருவதாக 'யுக்திய' சிங்கள வார இதழ் தெரிவித்துள்ளது.

புலிகளின் செயற்பாடுகள் இந்திய அரசியலில் தாக்கத்தை உருவாக்கும் என்பதால், புலிகள் தொடர்பான அமெரிக்காவின் மனப்போக்கு இந்தியாவுக்கு ஒரு முக்கிய விடயமாகும் என்று 'யுக்திய' தெரிவித்துள்ளது.

அமெரிக்க ராஜாங்க அமைச்சின் தென் ஆசியப் பிரதிநிதி அண்மையில் கொழும்பில் தெரிவித்த கருத்துக்களும் இந்தியாவுக்கு திருப்தியானதாக இருக்கவில்லை என்று 'யுக்திய' மேலும் தெரிவித்துள்ளது.

அரசும்-புலிகளும் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்று அமெரிக்க மக்கள் காங்கிரசில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

# நினைவு தின உண்ணாவிரதங்கள்

**இ**ந்திய அமைதிப்படையினருக்கு எதிராக உண்ணாவிரதமிருந்து உயிர் துறந்தவர் திலீபன். திலீபனின் எட்டாவது நினைவு தினத்தை முன்னிட்டு வடபகுதியில் அடையாள உண்ணாவிரத நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

26.09.95 அன்று யாழ்ப்பாணத்தில் திலீபன் நினைவுதினக் கூட்டங்கள் நடைபெற்றன. 1987ம் ஆண்டு செப்டம்பர் 26ம் திகதி முற்பகல் 10 மணிக்கு திலீபன் உயிர்துறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. 15.09.95 முதல் 26.09.95 வரை நினைவுதின நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.



படிப்பகம்

# பிரதேச சபையில் மோசடி

# உதவித் தலைவர் பதவி விலகல்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆலையடிவேம்பு பிரதேச சபையில் மோசடிகள் அதிகமாகிவிட்டதாம். வெற்றி பொறுப்பில் உள்ள சுயேச்சைக் குழு சொந்தக் காரியத்தில் குறியாக இருக்கிறதாம். இப்படிச் சொல்லியிருக்கிறார் அப்பிரதேச சபையில் உதவித் தலைவராக இருந்த பொடியப்பு பியசேனா தனது பதவியை இராஜினாமாச் செய்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

நான் சென்றவருடம் 1994.03.04 அன்று நடைபெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் சந்தர்ப்பவசமாகப் போட்டியிட்ட எனக்கு எனது மக்களாகிய நீங்கள் பெரும்பான்மையான விருப்பு வாக்குகளை வழங்கி வெற்றிபெறச் செய்தீர்கள். அதிகப்படியான விருப்பு வாக்கு கிடைத்த எனக்கு கிடைத்ததோ உபதவிசாளர் பதவி. இந்த நிலையிலும் எனது மக்களுக்கு சேவை செய்ய எண்ணி 1994.04.04 அன்று பதவியேற்றேன்!

சபையில் புகுந்த ஒரு சில மாதங்கள் சென்றதும் சபையின் நிலைப்பாடும், ஊழலும் எனக்கு தெரியவந்தது. சபையில் பிரச்சனை எழுந்தது.

* முதன் முதலாக சபைக்கு வந்த மின்விசிறிகள் பதினொன்றில் ஒன்று மாயமாகியது.

* சபைக்குள் அலுமாரிக்குக் கண்ணாடி பொருத்தும் வேலை வெளிநாட்டில் இருக்கும் கொந்தராத்துக்காரரின் பெயரில் செய்யப்பட்டு காசோலையில் வெளிநாட்டில் இருப்பவரின் கையொப்பம் இடப்பட்டு. பணம் எடுக்கப்பட்டு மோசடி செய்யப்பட்டது.

* சபை வளவில் கிணறு அமைக்கும் பணியிலும் பெருத்த மோசடி ஏற்பட்டது. இவைகள் பற்றி பல உயர் அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

எனது நோக்கம் கொள்கை யாவும் களங்கமற்ற சேவையே செய்ய வேண்டும் என்பதாகும். ஆனால் எந்தச் சந்தர்ப்பத்திலும் அவ்வாறான சேவையை செய்யக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. எனது பொது வாழ்வில் இதுவரை கள்ளம் இல்லை, கபடு இல்லை, சூது இல்லை, சூழ்ச்சியும் இல்லை. ஆனால் இது மலிந்து காணப்படும் இச்சபையில் நான் தொடர்ந்து உப தலைவராக இருந்து மக்களை ஏமாற்ற விரும்பவில்லை.

எனது அன்பான ஆலையடிவேம்பு பிரதேச மக்களான; அக்கரைப்பற்று 8ம் குறிச்சி, 7ம் குறிச்சி, பெரியதம்பிரான் பகுதி, பொற்கொல்லர் பகுதி, மருத்துவர் பகுதி, கோளாவில், பனங்காடு, ரெச்சகபுரம், கோளவில் 3, பெரிய குளம், சின்னக்குளம், வாச்சிக்குடா, தீவுக்காலை, கவடாப்பிட்டி, கண்ணகிபுரம், ஆலையடிவேம்பு மக்களுக்கு எனது களங்கமற்ற சேவையை வழங்க முடியாமல் போனதையிட்டு மன வருத்தத்துடன் மக்களுக்கு சேவை செய்ய முடியாத எனது உதவித்தவிசாளர் (வைஸ் செயார்மன்) பதவியை உடன் இராஜினாமாச் செய்கிறேன்.

# கார்ட்டூன் மூலை




# ஒலிபரப்புப் பயிற்சிகள்

## விரைவில் ஆரம்பிக்க உத்தேசம்

ஒளி-ஒலிபரப்பு ஆகிய பொதுத் தொடர்புச் சாதனங்கள் நம் நாட்டில் மிகவும் மலிந்துவிட்டன. ஆனால் இவற்றைப் பயன்படுத்துவதில் போதுமான பயிற்சி பெற்றவர்கள் அரிதாகவுள்ளமையினால் நிகழ்ச்சிகளின் தரம் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியடைந்திருப்பதாகத் தெரியவில்லை. ஒளிபரப்பிலும்- ஒலிபரப்பிலும் சம்பந்தப்பட்டவர்கள் தகுந்த முறையில் பயிற்றப்படுவார்களானால் நிகழ்ச்சிகள் மேலும் சிறப்படையவே செய்யும் என்பதனை மறுக்க முடியாது.

ஒலிபரப்புத்துறையில் முன்னோடிகளாக விளங்கி கடந்த காலத்தில் அரிய சாதனைகள் பலவற்றைப் படைத்தவர்கள் ஒன்று சேர்ந்து, இந்த எலத்திரோன் தொடர்பு சாதனங்களில் தம்மை ஈடுபடுத்த விரும்புவோருக்கு முறையான பயிற்சிகளை வழங்க முன்வந்திருப்பது பாராட்டுக்குரியதே.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில் பல தசாப்தங்கள் பணியாற்றியவர்களான– 'உண்டா' (UNDA) விருது பெற்றவரான திரு.எஸ்.கே.பரராஜசிங்கம், திரு.எஸ்.அதிகாரி, திரு.ஜிம்மி பரூச்சா, திரு.எஸ்.வைமன் ஆகியோர், சமுதாய மற்றும் சமயங்களுக்கான மையத்துடன் இணைந்து ஒலிபரப் பாளர்களுக்கான ஆறு மாதகாலப் பயிற்சியினை அளிப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். ஒளி-ஒலிபரப்புத் துறைகளில் ஈடுபடவிரும்புவோருக்குரிய சகல அம்சங்களிலும் தேர்ந்த பயிற்சி அளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இத்துறைகளில் நன்கு பரிச்சயமுடைய திரு.சில்லையூர் செல்வராஜன், திரு.காலலூர் இராஜதுரை, திரு.எச்.எம்.குணசேகர, திருமதி.மேள் வில்லியம்ஸ் மற்றும் திரு.ஈ.கே.பெரேரா ஆகியோரும் பயிற்சியாளர்களுக்கு சிறப்புப் பயிற்சிகளையும் வழங்கவிருக்கின்றனர்.

தற்போது இத்துறைகளில் போதுமான பயிற்சிகள் எவருக்கும் அளிப்பதற்கு வாய்ப்பு வசதிகள் இருக்கவில்லை. உயர்தரப் பாடசாலைகளிலோ,பல்கலைக்கழக மட்டத்திலோ ஒளி-ஒலிபரப்பாளர்கள் பயிற்சி பெறுவதற்கேற்ற வசதிகள் இல்லாமையினால் இத்தகைய முயற்சி பெரும் பயனை அளிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

# இடமாற்றத்தில் தலையீடு

## மலையகக் கல்விக்கு இடையூறு

தற்போது அரசால் அறிவிக்கப்பட்டுள்ள 'தேசிய இடமாற்றக் கொள்கை'க்கமைய இடமாற்றம் கோரும் ஆசிரியர்களுக்காவது இடமாற்றங்கள் கிடைக்குமா?

நுவரெலியா மாவட்டத்தில் பல வருடங்களாக மிகக்கஷ்டப்பிரதேசப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்குவதில் தொழிற்சங்கப் பழிவாங்கல்கள் நடைபெறுகின்றன. காலத்திற்கு காலம் தங்கள் ஆதரவை மாற்றிக் கொள்ளும் சில அதிகாரிகள் தாம் சார்ந்துள்ள தொழிற்சங்க ஆதரவாளர்களான ஆசிரியர்களுக்கு மட்டுமே இடமாற்றம் வழங்குகிறார்கள். ஆசிரியர்கள் விண்ணப்பிக்காமலேயே இடமாற்றம் வழங்கப்படுகிறது. ஆனால் சட்டதிட்டங்களுக்கமைய ஒரு சில ஆசிரியர்கள் இடமாற்றம் கோரினாலும் தொழிற்சங்க ஆதரவு காரணமாக அவர்களின் இடமாற்றம் பின்தள்ளப்பட்டுக் கொண்டே வருகிறது.

இதனால் ஆசிரியர்கள் உளரீதியாகவே பாதிப்பிற்குள்ளாகி வருகிறார்கள். அவ்வாறு பாதிப்பிற்குள்ளாவோரால் எப்படி நல்ல கல்வியை மாணவர்களுக்கு வழங்க முடியும்!

எனவே அதிகாரிகள் இனியாவது அரசாங்கத்தின் கொள்கைக்கமைய செயற்படுவார்களா? மலையகத்தின் கல்வியை முன்னேற்றியே தீருவோம் என்று மேடைகளில் மட்டுமே முழங்கிவிட்டு முடங்கிக் கிடக்கும் அரசியல்வாதிகள் இனியாவது சிந்திப்பார்களா?

மலையகத்தின் கல்வித்துறையில் பெரும்பங்கு வகிக்கும்- மலையகத்தை பிறப்பிடமாகக் கொண்ட ஆசிரியர்கள், இனியாவது இப்படியான அதிகாரிகள், தொழிற் சங்கவாதிகள், அரசியல்வாதிகள் ஆகியோரின் பிடியிலிருந்து விடுவிக்கப்படுவார்களா?

உண்மையாகவே இந்நிலை மாறுமாயின் மலையகத்தின் கல்வி வளர்ச்சி நல்ல முன்னேற்றத்தை அடையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

இரா.மலர்வேந்தன், தலவாக்கலை.

# 50 இலட்சம் ரூபாய் செலவில் பயணிகள் விடுதி

(திருமலை நிருபர்)

வெளியூர்களிலிருந்து வரும் பயணிகள் தங்கிச் செல்வதற்கு வசதியான விடுதியொன்று திருக்கோணமலை மாநகரசபையால் அமைக்கப்பட்டு வருகிறது.

50 இலட்சம் ரூபா செலவில் தபாற் கந்தோர் வீதியில் அமைக்கப்பட்டு வரும் இவ்விடுதி குறைந்த வாடகையில் கூடிய வசதிகளை இன்னும் இரண்டு மாதங்களுக்குள் வழங்கத் தொடங்கிவிடும் என நகரசபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நூலக வசதியும், உணவு வசதியும் கொண்டதாக அமையும் இவ்விடுதியில் பயணிகள் ஆண்கள் வேறாகவும் பெண்கள் வேறாகவும் தங்க அனுமதிக்கப்படுவார்கள்.

இரண்டு மாடிகள் கொண்டதாக இது அமைக்கப்பட இருக்கின்றபோதிலும் உடனடியாக கீழ்த்தளம் பூர்த்தி செய்யப்பட்டு பயணிகளுக்கு சேவை வழங்கப்பட உள்ளது.

இவ்விடுதியில் மூதூர் பயணிகளும், வேறு தூர இடங்களுக்குச் செல்லும் பயணிகளும் நன்மை பெறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.


## விளம்பரப்பகுதி

### நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு ரூபா | 557/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் ரூபா | 284/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் ரூபா | 145/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுய முகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

THINAMURASU VARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO

என்ற முகவரிக்கு கடிதம் அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

### 95, O/L Maths, Science Paper Class

உங்கள் வீட்டிற்கு வந்து தனிப்பட்ட முறையிலோ அன்றி குழுவாகவோ வகுப்புக்கள் நடாத்தப்படும்.

Contact: T.P 714921


# செய்தியால் செயலான பணிகள்

பொகவந்தலாவை நகர பிரதான நெடுஞ்சாலையின் குறைபாடுகள் பற்றி முன்னர் தினமுரசில் புகார் பெட்டிப் பகுதியில் பிரசுரமானது நாமறிந்ததே! இச் செய்தியின் பலனாய் நெடுஞ்சாலைகள் புனரமைப்பு அதிகாரசபையால் பொகவந்தலாவை நகர பிரதான வீதியை புனரமைப்புச் செய்வதற்கு ரூபாய் ஒன்பது இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இவ்வீதி புனரமைப்பில் நகர நுழைவாயிலின் பாலமும், இப்பாலத்திலிருந்து தபால் நிலையம் வரையுள்ள பிரதான வீதியும் புனரமைக்கப்படவுள்ளது. இது வரவேற்கக்கூடியதொன்றாகும். இருந்தும் நகரத்து மத்தியிலிருந்து செல்லும் பொதுமயான வீதியையும், பன்சலை வீதியையும், வைத்திய சாலை வீதியையும் இத்திட்டத்தினுள் கொண்டுவந்து இவ்வீதிகளையும் புனரமைக்க நெடுஞ்சாலைகள் புனரமைப்பு அதிகாரசபை நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்நகர வாழ் மக்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

பொகவந்தலாவை தபால் நிலையம் சம்பந்தமாக தினமுரசில் வந்த செய்தியினாலும் பலன் ஏற்பட்டுள்ளது. இத் தபால் நிலையத்திற்கு புதிதாய் ஒரு தபால் அதிகாரி நியமிக்கப்படவுள்ளார். மேலும் தமிழ் தெரிந்த இரு ஊழியர்கள் புதிதாக இத் தபால் நிலையத்திற்கு நியமிக்கப் படவுள்ளனர். மேலும் இருவர் நியமிக்கப்படவுள்ளனர். தபால் பட்டுவாடா செய்தலும் நேரத்திற்கு நடைபெறுகின்றது. மேலும் இத் தபால் நிலைய அபிவிருத்திக்கு தபால் தந்தி தொலைத்தொடர்பு அமைச்சு பெக்ஸ் வசதிகளை பெற்றுத்தர வேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர்.




### அற்புத மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக ஆவி உச்சாட்டங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் நடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்ஷ்மி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்ஷ்மி இயந்திரம் தேவையா? ஞான திருஷ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464,434831,344832.
FAX 00941342463 EXT 25

தலைமையகம்

மளையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.)
P.K. SAAMY ASSOCIATE (PVT)LTD
இல 31.32,33
தினச்சந்தை கட்டிடம்
நுவெரலியா.
T.P. 052 2508 3093,3336,3570.
FAX 0094523093 EXT 28

### தபால் மூலம் வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

G.A.Q., B.A., B. Com., B.B.A.
G.S.Q. B.Sc (Bio & Stats)

புதிய மாணவர்கள் அனுமதி - 1996

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் மேற்படி பட்டங்களை வீட்டிலிருந்தவாறே படித்துப் பட்டம் பெறுவதற்கான எமது தபால் மூலம் பட்டப்படிப்புகள் பயிற்சித் திட்டத்திற்கு மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

இப்பாடநெறிகள் பற்றிய முழுவிபரங்கள் அடங்கிய கையேட்டின் விலை ரூபா 50/-. Kotahena தபாற் கந்தோரில் பணம் பெறக்கூடியவாறு, Registrar, External Studies Academy என்ற பெயருக்கு பெற்ற ரூபா 50/- இற்கான மணியோடரையும் இரண்டு ரூபா முத்திரை ஒட்டப்பட்ட, சுயமுகவரி எழுதப்பட்ட நீள கடிதவுறையையும் இணைத்து பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைத்து தபால் மூலமும் அல்லது நேரில் 50/- செலுத்தியும் கையேட்டையும், விண்ணப்பப்படிவத்தையும் பெற்றுக் கொள்ளலாம்,

முக்கிய குறிப்பு:- விண்ணப்ப முடிவு திகதி 1995 டிசம்பர் 31 ஆம் திகதியாகும். இத் திகதிக்குள் எமது நிலையத்தில் தம்மைப் பதிவு செய்யும் மாணவர்களுக்கு பல்கலைக் கழகங்களில் வெளிவாரி மாணவராகப் பதிவு செய்வதற்கான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

EXTERNAL STUDIES ACADEMY
P.O. Box : 660, No. 32, 3rd Floor,
Colombo Central Super Market,
Reclamation Road, Colombo–11.

### சுவிஸ் வாழ் திரையுலகக் கலை நெஞ்சங்களே!

இன்னும் சில தினங்களில் சுவிற்ஸர்லாந்தின் அனைத்து மாநில வெண்திரைகளிலும் உங்கள் கண்களுக்கு விருந்தளிக்கவென்றே வெளிவந்திருக்கும் திரைப்படைப்பு-

சுவிற்ஸர்லாந்தின், சூரிச் நகரின் மாபெரும் வர்த்தக நிலையமான லங்கா ரேடேர்ஸ் ஸ்தாபனத்தின் எம்.எம். பிறதேர்ஸ் தயாரித்து வழங்கும்

"எங்கள் தங்க மகன்"

எஸ்.வி. சேகர், ரோகினி, ராஜீவ், ரேகா, சந்திர சேகர், வைஷ்ணவி, மாஸ்ரர் அருண், ஜுனியர் பாலையா மற்றும் பல நட்சத்திரங்களின் நடிப்பில் உருவான குடும்பச்சித்திரம் இது.

வாலியின் கற்பனையில் உருவான பாடல்களுக்கு இசையமைத்திருக்கிறார்கள் இளைய தலைமுறையின் இன்னிசை இரட்டையர்கள்- முகேஸ்-மூர்த்தி.

டைரக்ஷன்-தினகரன். தயாரிப்பு-எம். மகேந்திரன் (சுவிஸ்)

ஈழத்தமிழராகிய எமது கலைப்படைப்பின் முதல் முயற்சியை உங்களுக்காக உங்கள் முன் ஒப்படைக்கிறோம். உங்கள் அதரவு கண்டு எமது முயற்சிகள் மேலும் முன்வளரும்.

LANKA TRADERS
Wordstrasse 2
8004 Zurich
Tel. 01/291 22 01

(Adv)




படிப்பகம்

www.padippakam.com

எதிர்வரும் மழைக் காலத்திற்கு முன்னராக யாழ்-குடாநாட்டுக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை அனுப்பிவைப்பதில் தாமதங்கள் நேரக் கூடும்.

ஜரிஸ்மோனா மாலுமிகளை புலிகள் தொடர்ந்தும் தடுத்துவைத்திருக்கிறார்கள்.

மாலுமிகள் விடுதலை குறித்து புலிகள் முன்வைத்த ஒரே ஒரு நிபந்தனையும் அடிபட்டுப் போய்விட்டது.

புலிகள் விடுவிக்கக் கோரிய இரண்டு பெண் கடற்புலிகளும் தம்மை திருப்பி அனுப்ப வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஜரிஸ்மோனா கப்பல் மாலுமிகள் விடயத்தில் புலிகள் அடுத்தடுத்து தவறுகள் செய்துள்ளார்கள்.

பயணிகள் கப்பலுக்கு மாலுமிகளாகச் சென்றவர்களைப் பணயக் கைதிகளாக்கியது முதல் தவறு.

மாலுமிகளை விடுவிப்பதாயின் கைதிகள் பரிமாற்றத்திற்கு அரசு தயாராக இருக்கிறதா என்று கண்டறியாமல், விடுவிக்கப்பட வேண்டியவர்களது பெயர்களை புலிகள் தெரிவித்தது இரண்டாவது தவறு.

தமது உறுப்பினர்களை விடுவிக்க அரசு முன்வந்தால் மட்டுமே மாலுமிகளை விடுவிப்போம் என்று பொதுப்படையாக அறிவித்துவிட்டு புலிகள் இருந்திருந்தால் அது புத்திசாலித்தனமாக இருந்திருக்கும்.

கைதிகள் பரிமாற்றத்திற்கு தயார் என்றால் அரசு அறிவித்திருக்கும். யாரை விடுதலை செய்ய வேண்டும் என்று புலிகளிடம் அரசாங்கம் கேட்டிருக்கும். அப்போது விடுவிக்கப்பட வேண்டியவர்களது பெயர்களை புலிகள் அறிவித்திருக்கலாம்.

ஆனால், கைதிகள் பரிமாற்றத்திற்கு அரசு தயாராகவே இல்லாதபோது புலிகள் பெயர்களை அறிவித்துவிட்டதால் அரசாங்கம் புத்திசாலித்தனமாக காய்களை நகர்த்தியது. புலிகளின் நிபந்தனையை புலிகள் கேட்ட உறுப்பினர்களை வைத்தே வெட்டியாடிவிட்டது.

இது புலிகளே எதிர்பார்க்காத ஒரு விடயம். ஆனால், அரசை யாரும் குறை சொல்லவும் முடியாது. கைதிகள் பரிமாற்றத்திற்கு தயார் என்று அறிவித்துவிட்டு பின்வாங்கியிருந்தால் குற்றம் சாட்டியிருக்க முடியும்.

இப்போது புலிகள் பாடு தர்மசங்கடம். அந்த இரண்டு பெண் புலிகளும் வேண்டாம். நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். வேறு உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களை விடுதலை செய்யுங்கள் என்று புலிகள் கேட்க முடியாது. அது புலிகளைப் பொறுத்தவரை வெட்கமாகிவிடும்.

ஆக, மாலுமிகள் விவகாரமும், விடுதலையும் தாமதமாவதால் பாதிக்கப்படப் போவது யாழ்-குடா நாட்டு மக்கள் தான்.

நிபந்தனையெல்லாவற்றையும் ஒரு ஓரத்தில் போட்டுவிட்டு மாலுமிகளை புலிகள் விடுவித்தால் ஒரு வழிபிறக்கலாம்.

ஜரிஸ்மோனா கப்பலில் வைத்து பயணி ஒருவர் தம்மால் கொல்லப்பட்டதற்கு புலிகள் துளியும்வருந்தவில்லை.

சுட்டது புலிகள் என்பதால் மனித உரிமை அமைப்புக்களும் சரி, தமிழ் அரசியல் கட்சிகளும் சரி ஒரு கண்டனம் கூடத் தெரிவிக்கவில்லை.

புலிகள் செய்தால் குற்றமில்லை என்று நினைக்கிறார்களோ? மாலுமிகள் விடயத்திலும் கூட அவர்களை விடுதலை செய்யுமாறு புலிகளைக் கோர யாரும் முன்வரவில்லை.

போர் நடவடிக்கைகளில் பொது மக்கள் எந்தத் தரப்பின் நடவடிக்கையால் பாதிக்கப்பட்டாலும் குரல் கொடுப்பதுதான் நியாயமாக அமையும்.

போரில் ஈடுபடும் இரு தரப்புமே அதனை விரும்பவில்லை என்பதற்காக கண்டிக்க வேண்டியவர்கள் மௌனம் சாதிக்கலாமோ?

எதிர்வரும் மழைகாலத்திற்கு முன் யாழ் -குடாநாட்டுக்கு அரசாங்கம் உணவுக் கப்பலை அனுப்பிவைக்க வேண்டியது அவசியம். கப்பலை செலுத்த மாலுமிகள் முன்வராவிட்டால் என்ன செய்வது?

அகதி முகாம்களில் இடம்பெயரும் மக்களின் தொகை நாளுக்கு நாள் கூடி வருகிறது.

வலிகாமம் பகுதியில் இருந்தும், வடமராட்சியில் இருந்தும் இடம்பெயர்ந்துள்ள மக்கள் தான் அதிகம். அவர்களின் நலன்கள் கவனிக்கப்பட வேண்டும். நிவாரணங்கள் போதியளவில் வழங்கப்பட வேண்டுமானால், உணவுப் பொருட்கள் சென்றாக வேண்டும்.

குறிப்பாக மருந்துப் பொருட்கள் பற்றாக்குறை பெருமளவில் நிலவுகிறது.

மந்திகை வைத்தியசாலை நிரம்பி வழிகிறது என்று செய்திகள் வருகின்றன.

மருத்துவர்கள் போதாதநிலை ஒருபக்கம் இருந்தாலும், மருந்துகள் பற்றாக்குறைதான் பெரிய பிரச்சனை.

போதியளவு மருந்துப் பொருட்களை அரசாங்கம் அனுப்பிவைத்து வருகிறது என்று சொல்வதற்கில்லை.

ஆனால், மருந்துக்கு வலியோ, புண்ணுக்கு வலியோ என்பதுதான் முக்கியம்.

தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் தாங்களே என்று புலிகள் கூறுகிறார்கள். தமிழ் மக்களின் அன்றாட அவலங்களை குறைப்பதே முதல் கட்டப் பணி என்றே கடந்தகால பேச்சுவார்த்தையில் புலிகள் சொன்னார்கள்.



அன்றாடப் பிரச்சனைகள் முழுதாக தீர்க்கப்படாவிட்டாலும், ஓரளவு தீர்வதற்காயினும் இருக்கக்கூடிய வழிகளை புலிகளது நடவடிக்கைகளே மூடிவிடுகின்றன.

மன்னார் -கற்பிட்டி கப்பல் சேவை நிறுத்தப்பட்டு விட்டது. திருமலை-தீவுப் பகுதிக் கப்பல் சேவை நிறுத்தப்பட்டுவிட்டது. எதிர்காலத்தில் யாழ்ப்பாணத்திற்கான உணவுக் கப்பல் போக்குவரத்தை தாமதப்படுவதற்கு காரணங்கள் சொல்லக்கூடிய நிலை நிலவுகிறது.

இதனால் ஒன்றும் அரசாங்கத்திற்கு நஷ்டமும் இல்லை. பாதிப்பும் இல்லை. கப்பற் சேவைகள் நிறுத்தப்பட்டதால் அரசுக்கு இலாபம்தான் மிஞ்சி இருக்கிறது.

வலி புண்ணுக்குத்தான். புண்ணுக்கு மருந்திடுவதில் அக்கறைகாட்ட வேண்டியது அரசா? புலிகளா?

அரசுதான் என்று புலிகள் கூறுவார்களாயின் அன்றாடப் பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டும் என்று பேச்சுவார்த்தையில் அவர்கள் வற்புறுத்தியமை ஒரு தந்திரம் என்றாகிவிடும்.

20.09.95 அன்று காங்கேசன்துறை கடற்பரப்பில் நடைபெற்ற கடற் சமர் குறித்து அரசின் வெகுஜனத் தொடர்புசாதனங்களும் செய்திகளை வெளியிட்டிருந்தன.

ஒரு டோரா தாக்கப்பட்டது. லங்கா முனித என்னும் கப்பலுக்கு சேதமேற்பட்டது. இச்செய்தியை அரசாங்கம் மறுத்திருக்கிறது.

23.09.95 அன்று இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் மாலைச் செய்தியில் அரசின் மறுப்பு வெளியாகி இருந்தது.

டோரா தாக்கப்பட வில்லை. கப்பலுக்கு மட்டுமே சிறு சேதம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கரும்புலிப் படகொன்று லங்கா முனித கப்பலை குறிவைத்து சென்ற போது கடற்படையினரால் தடுத்து தாக்கப்பட்டது. அப்போது கரும்புலிப்படகு வெடித்து சிதறியது. அதனால்தான் கப்பலுக்கு சேதம் என்று ஊகிக்க முடிகிறது.

ஆனால்-டோரா....? தாக்கப்படவில்லை என்று அரசு மறுத்துள்ளது.

கடற்சமரில் பலியானவர்களில் கடற்புலிகளது முக்கிய பொறுப்பாளர்களில் அன்பு உட்பட நான்கு கரும்புலிகளது பெயர்கள் புலிகளால் அறிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்புலிகளது அரசியற்துறைப் பொறுப்பாளராக இருந்தவர் அன்பு.

படையினரின் வடக்கு நடவடிக்கைகளை தாமதப்படுத்த, அல்லது அதிர்ச்சி ஏற்படுத்த கடற்பகுதி தாக்குதல்களையே புலிகள் பெரிதும் பிரயோகிக்கின்றனர்.

தரை முகாம்கள் மீது தாக்குதல் நடத்துவது கடினமாயிருப்பதால் கடல்வழித் தாக்குதல்களை புலிகள் பெரிதும் சார்ந்துள்ளார்கள்.

எனினும், கடலில் இரு பாரிய தாக்குதல் முயற்சிகள் கடற்படையினரால் முறியடிக்கப்பட்டன.

அதன் பின்னரே பாரிய கடற்தாக்குதலுக்கு கடற்புலிகள் முன்வந்தனர்.

கடலில் தாக்குதல் நடத்துவதற்கு புலிகளது பிரதான ஆயுதமாகவும், நம்பிக்கையாகவும் இருப்பது கடற்கரும்புலிகளே.

## நாரதர்

ஆனால், கடற்கரும்புலிகள் தாக்குதல் நடத்துவதாயின் கடற்படையினரை நெருங்கிச் செல்ல வேண்டும். ஆரம்ப கட்டத்தில் அது சாத்தியமாக இருந்தது. தற்போது சாத்தியம் குறைவானதாகப் போய்விட்டது.

தவிர, மறைந்து கொள்ளவோ, பதுங்கிக் கொள்ளவோ வாய்ப்பில்லாத பரந்த கடற்பரப்பில் நேரடி மோதல் ஏற்படும் போது நவீன ஆயுதபலமே செல்வாக்குச் செலுத்தும். அதுதான் புலிகளுக்குள்ள பலவீனம்.

கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் சில நடவடிக்கைகள் மர்மமாக இருக்கின்றன.

மின்மாற்றிகள் உடைக்கப்பட்டு வருவதால் பொதுமக்கள்தான் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள்.

சமீபத்தில் மட்டக்களப்பு நகருக்குள்ளும் மின்மாற்றிகள் தகர்க்கப்பட்டன.

அதற்கு முன்னர் கிழக்கில் மின்மாற்றிகள் தகர்க்கப்பட்டமைக்கு புலிகளே காரணம் என்று கருதப்பட்டாலும், நகருக்குள் நடந்த சம்பவம் குறித்து பொதுமக்கள் மத்தியில் சந்தேகம் நிலவியது.

ஆனால், கிழக்கில் மின்மாற்றிகள் தகர்க்கப்படுவது தொடர்பாக மட்டக்களப்பில் இருந்தோ, யாழ்ப்பாணத்தில் இருந்தோ புலிகள் தாம் பொறுப்பல்ல என்று இதுவரை தெரிவிக்க வில்லை.

மட்டக்களப்பில் நடந்த மின்மாற்றித் தகர்ப்பு பற்றி யாழ்ப்பாணத்தில் புலிகளின் குரல் வானொலியில் தெரிவிக்கப்பட்டது.

மின்மாற்றிகள் தகர்க்கப்பட்டன. அதனால் நகரமே அதிர்ந்தது என்று புலிகளின் குரல் தெரிவித்ததோடு நிறுத்திக் கொண்டது.

மின்மாற்றிகளை தகர்ப்பது என்னும் முடிவு புலிகளுக்கு உடன்பாடானதல்ல என்றால், அச் செய்தியோடு சேர்த்து கண்டனமும் தெரிவித்திருப்பார்கள். படையினரின் நடவடிக்கை. அல்லது தேசத் துரோகிகளது செயல் என்று புலிகளின் குரல் அறிவித்திருக்கும்.

எனவே-மட்டக்களப்பு நகரில் நடைபெற்ற மின்மாற்றித் தகர்ப்பு யாரால் செய்யப்பட்டது என்பதை உடனடியாக சொல்ல முடியாவிட்டாலும், கிழக்கில் மின்மாற்றிகளை தகர்க்கும் நடவடிக்கைகளில் புலிகளது சம்பந்தம் இருப்பதும் உண்மை. தமது தாக்குதல் நடவடிக்கைகளுக்கு உதவிகரமாக இருக்கும். படையினரும் சிரமங்களை அனுபவிப்பர் என்று புலிகள் நினைக்கக்கூடும். ஆனால் படை முகாம்களில் ஜெனரேட்டர் வசதிகள் இருக்கின்றன.

புலிகளின் இரவு நடமாட்டங்களுக்கு மின்சாரம் இன்மை ஓரளவு வாய்ப்பாக இருக்கும்.

வடக்கில் உயிரிழப்புக்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்று ஜனாதிபதிக்கு தமிழ்கட்சிகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

சாதாரண மக்கள் பெருமளவில் இடம்பெயரும் நிலை தோன்றும் போது அன்றாட வாழ்க்கை பாதிப்படைகிறது. உடமையழிவுகளும் ஏற்படுகின்றன.

பாடசாலைக் கட்டிடங்கள், ஆலயங்கள் போன்றவைதான் யுத்த காலத்தில் மக்கள் தஞ்சம் தேடி ஓடும் இடங்கள்.

அங்கு சென்றுவிட்டால் யுத்தம் செய்வோர் தம்மை இனம் கண்டுகொள்வார்கள் என்றே மக்கள் நம்பி ஓடுகிறார்கள்.

அவ்வாறு தஞ்சமடையும் பகுதிகளே தாக்கப்படுமானால் மக்கள் எங்கே போவார்கள்.

போரில் இருந்து ஒதுங்கிவாழ நினைப்பதுதான் ஆபத்து என்று மக்கள் நினைத்துவிடுவார்கள்.

ஆலயங்களும், வைத்தியசாலைகளும் மிக முக்கியமாக பாதுகாக்கப்படவேண்டியவையாகும். ஆலயங்கள் என்னும் போது மதாலயங்கள் மட்டுமல்ல கல்வி கற்பிக்கும் பாடசாலைகளும் ஒருவகையில் ஆலயங்கள் தான்.

மாணவர்கள் வளரும் பயிர்கள். தமது பாடசாலைகள் தாக்கப்படும் போது அந்தப் பயிர்கள் வேறு நிலம் தேடிப்போக நேரலாம். கல்வியில் நாட்டத்தை துறக்கலாம். எனவே -பாடசாலைகளின் பாதுகாப்பை இலக்கற்ற செயற்பாடுகள் குந்தகம் செய்யக்கூடாது.

போரில் பயன்படுத்தப்படும் ஆயுதங்களுக்கு கண்கள் இல்லை. பயன்படுத்துவோர் தான் விழிப்பாக இருக்க வேண்டும்.

பாடசாலை எது, பகையரண் எது என்றெல்லாம் குண்டுகளுக்குத் தெரியாது.

சமீபத்தில் வடக்கில் வடமராட்சியில் நாகர் கோவில் மகாவித்தியாலயத்தில் தாக்குதல் நடத்தப்பட்டதாக செய்தி வந்தது. 40 பேர் வரை பலியென்று வெளியான செய்தியை இராணுவ பேச்சாளர் சரத் முனசிங்க மறுத்திருக்கிறார்.

அதனையடுத்து வடக்கில் உயிரிழப்புக்களை தடுத்து நிறுத்துமாறு தமிழ் கட்சிகள் ஜனாதிபதியிடம் கோரியுள்ளன.

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

# கோடை இடியும் மாரி மழையும்

வடக்கில் இருந்த வவுனியாவுக்கு வரும் பயணிகள் முகங்களில் மகிழ்ச்சி யில்லை. சொல்லும் செய்திகளும் அவ்வாறுதான். கிளாலி கடல் ஏரிப்பாதையும் காலநிலை காரணமாக பயணிகளை தொல்லைப் படுத்துகிறது.

தணிக்கை நடைமுறையில் இருப்பதால் வதந்திகளும் தம்மை மறுக்க பத்திரிகைச் செய்திகள் இல்லை என்ற துணிச்சலில் பரவிக்கொண்டிருக்கின்றன.

மக்கள் புத்திசாலிகள். உண்மைகள் என்னவென்பதை வடிகட்டிப் புரிந்து வைத்துள்ளார்கள்.

**(தணிக்கை விதிக்கு உட்பட்டது)**

இறுதியாக வானிலை. (செய்திகள் சொல்லிவிட்டு வானொலி-தொலைக் காட்சிகளில் வானிலை பற்றிச் சொல்வது மாதிரி)

பருவப்பெயர்ச்சி மழை அநேகமாக அக்டோபர் மாத நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகும்.

இப்போது வடக்கில் வானம் பூமியோடு கோபித்துக்கொண்டிருக்கிறது.

வானத்தின் போர்த்தந்திரப்படி முதலில் தூறல், இடைக்கிடையே உச்சி வெய்யில். பூமி கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் போது திடீரென்று 'சோ' எனப் பெய்யும் மழை.

நவராத்திரியும் ஆரம்பமாகிவிட்டது என்பதால் இனி தொடர்ச்சியாக வடக்கில் தூறல் இருக்கும். தீபாவளி நெருங்கும் போது மழை பலமாகப் பெய்யத் தொடங்கும். தீபாவளிவரை வெள்ளப் பெருக்குகள் ஏற்படுமளவுக்கு மழை பெய்யாது.

மாரி மழைக்கு முற்பட்ட 'கிளைமேட்' மோசமானது. மாரிமழைக்கு முற்பட்ட கோடை இடி தொல்லைதான். நோய் நொடிகள் பரவும். இப்போது அப்படித் தான் இருக்கிறது 'கிளைமேட்'

தொடர்ச்சியான யுத்த நிலவரம் காரணமாக யாழ்-குடாநாட்டு பாதைகள் குண்டும், குழியுமாக காணப்படுகின்றன மழைக்காலத்தில் அவற்றில் வெள்ளம் தேங்கினால் நோய்க்கிருமிகள் பரவுவது சுலபமாகிவிடும். மலேரியா, வாந்திபேதி போன்ற நோய்கள் பரவலாம். எப்படியோ எதிர்வரும் மழைக்காலம் யாழ் குடாநாட்டு மக்களுக்கு கஷ்டமானதாகவே இருக்கப்போகிறது.

கிழக்கிலும் அக்டோபர் மாத இறுதியில் மழைக்காலம் ஆரம்பம். ஆனால், அடித்துப் பொழியாமல் வடக்கில் மட்டுமே மழையின் கனவளவு அதிகமாக இருக்கும். எனினும் கிழக்கிலும் மழை இடைக்கிடையே பெய்யவே செய்யும். வானிலை ஓவர்.

## முகப்பில்

முரசின் முகப்பில் அமெரிக்க போர்வீரர் வைத்திருப்பது விமான எதிர்ப்பு ஏவுகணைதான். ஆனால் மிக மிக மிக நவீனமானது. லேசர் கதிரியக்கம் மூலம் வழிநடத்தப்படும் ஏவுகணையே அதுவாகும். லேசர் கதிர்மூலம் இயக்கப்படுவதால் இதனை அழிக்கும் ஏவுகணை எதிர்ப்பு ஆயுதம் எதுவும் தற்போது கண்டுபிடிக்கப் படவில்லை. (எதிர்காலத்தில் கண்டு பிடிக்கப் படலாம்) சகல காலநிலைக்கும் ஏற்ற ஏவுகணை. அமெரிக்காவிடம் மட்டுமே இருக்கிறது. எந்தவொரு நாட்டுக்கும் தற்போதைக்கு கொடுக்க மாட்டார்கள் இதன் பெயர்; 'சோர்ட் ஸ்ரார் பஸ்ற்'

# அதிரடி அய்யாத்துரை



பிள்ளையார் பால் குடித்த செய்தி வந்தது நல்லதாப் போச்சு. கடந்த வாரத்தில் தணிக்கைக்கு உட்படாத பெரிய பரபரப்புச் செய்தி அதுதான். பத்திரிகைகள் போட்டு வெளுத்து வாங்கிப் போட்டினம். முடிஞ்சா தணிக்கை செய்து பாருங்கோ எண்டுதான் தலைநகரிலும் பிள்ளையார் பால் குடிச்சாராக்கும்.

ரெண்டு எழுத்தார் வான் பறவையை வடக்கில் அடிச்சதாக கடந்தவாரம் வதந்தியொண்டு பரவியது. அது வதந்தியே தவிர வேறில்லை. கோழி முட்டையிட்டது எண்ட தகவலை யாரோ சொல்ல, கோழி விழுந்தது எண்டு கதைதிரிஞ்சு போனா எப்படியிருக்கும்? அப்படித்தான் அதுவும். அதுக்காக கோழி முட்டையிடவில்லை என்பதல்ல.

கிழக்கின் சிங்கத்தார் வெளியில் இருந்து அவசரமாகப் 'போன்' எடுத்தவராம். சக வெகுஜனப் பிரதிநிதிக்கு கண்டிப்பான உத்தரவு போட்டாராம். கிழக்கில் ஏதாவது அதிரடி நடவடிக்கையாக்கும் எண்டு யோசித்துப் போடாதேயுங்கோ. தன் லீவு காலத்தை மேலும் மூண்டு மாதம் நீடிக்க சபையிலை மனுப்போடுமாறு உத்தரவிட்டவராம். மனுப்போட்டு அனுமதி பெறப்பட்டதாம். அண்ணர் கனடாவிலைதான் நிற்கிறார். கனடா அரசாங்கத்தை நினைச்சாத்தான் கவலையாக் கிடக்கு. கோபம் வந்தால் கவிழ்த்துப் போட்டல்லோ வந்திடுவார்.

இது நவீன உலகம் பாருங்கோ. தகவல்துறையும் கிசு கிசுவெண்டு வளர்ந்து கிடக்கு. தணிக்கையெல்லாம் ஓரளவுதான் வேலை செய்யும். கண்ணால் பார்க்கும் செய்திகளை வெட்டலாம். வானலை மூலம் காதால் கேட்கும் செய்திகளை எப்படி வெட்டுறது? இந்த வருஷம் முடியுமட்டும் தணிக்கை இருக்கும் எண்டுதான் கதை.

யாழ்ப்பாணத்திலை உள்ள வைத்தியர்களை பூப்போட்டுக் கும்பிடவேணும். நல்லா சம்பாதிக்கலாம் எண்டு பலர் வெளிநாட்டுக்குப் பறந்து போயிட்டினம். பணத்தை மறந்து சனத்தோடு இருக்கிறது பெரிய பணியல்லோ. போன கிழமை ஒரேநாளில் மந்திகை ஆஸ்பத்திரிலை மட்டும் 200 பேருக்கு நாலைந்து வைத்தியர்கள் மட்டுமே அவசர சிகிச்சை செய்திருக்கினம். கஷ்டம்தானே பாருங்கோ. பூப்போட்டுக் கும்பிடலாம்தானே.

கொழும்பில் உள்ள சைவக் கடையொன்றின் பெயர்ப் பலகையை அகற்றுமாறு கூறப்பட்டதாம். பெயர் பலகைக்குப் பின்னாலை ஏதாவது மறைஞ்சிருக்கலாம் எண்டு சொன்னவையாம். மறைஞ்சிருக்கிறது தமிழ் பெயர் பலகைக்குப் பின்னாலை மட்டும்தான் இருக்குமோ? பெயர் பலகை அகற்றப்பட்ட கடை வெள்ளவத்தையில் இருக்குது.

வடக்கிலிருந்து மாணவர்களை அழைக்க கல்விக்கு பொறுப்பான பிரிவினர் ரெண்டு எழுத்தாரின் அனுமதியைக் கேட்டிருக்கினம். பள்ளிக்கூட விளையாட்டுகளுக்கு அவை ஏன் அனுப்பப் போகினம்? வேறை விளையாட்டுகளுக்கு எண்டால் அனுப்பி வைப்பினம்.

கிழக்கின் தனித்துவத் தலைவருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மான விவகாரத்திலை பச்சை அணிக்குள் உள்ள அவரது சமூகத்தினர்தான் முன்வரிசையில் நிண்டவையாம். பச்சை அணித் தலைவருக்கு முழு உடன்பாடு இல்லை எண்டும் ஒரு கதை.

'உண்டியல்' எண்டால் தெரியுமோ? வெளிநாட்டிலை காசு கொடுத்தால், உடனடியாக தலைநகரிலை காசு கிடைக்கும். அங்கு காசை வாங்கிப்போட்டு அறிவிக்க, இங்கே உள்ள முகவர் காசு தருவார். கொமிஷன் வியாபாரம். தற்போதைய நாட்டு நிலவரத்தாலை உண்டியல்காரர் பாதிக்கப்பட்டுப் போச்சினம். கணக்கு காட்டமுடியாத வியாபாரம். சட்டரீதியான அங்கீகாரம் இல்லை. அதாலை விசாரணையெண்டு நடந்தா முழிக்க வேண்டிக் கிடக்காம். முழிச்சக் கொண்டு நிண்டா முத்திரை குத்தப்படுமல்லோ.

திருவானமலையிலை வெள்ளைவான் கோஷ்டியால் பாதிக்கப்பட்டவரல்லோ ஒரு பெண். அவரது புகாரால் உள்ளே இருந்த கோஷ்டியை வழக்காடி வெளியே கொண்டுவந்தவர் யார் தெரியுமோ? 89 பொதுத் தேர்தலிலை சூரியனில் கேட்டவராம். முன்னாள் வடக்கு-கிழக்கு மாகாண கட்சிக்கு வேண்டப்பட்டவராம். வாழ்க பொது நலம்.

சமீபத்தில படித்தவற்றில் சிக்கனமான ஆனால், நச்சென்று இடிக்கும் கவிதை.

**விழித்திரு**

"தூக்கத்தில் விழுந்தால்
துக்கம்தான்.
ஊக்கத்தில் எழுந்தால்
சொர்க்கம்தான்."

(கே.பாலா)



படிப்பகம்

www.padippakam.com

# உரிமை கோராத படுகொலைத் தாக்குதல்

அரசியல் தொடர்
அற்புதன் எழுதுவது

46

ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எஃப், ஈரோஸ் அமைப்புக்கள் இணைந்து உருவாக்கியிருந்த கூட்டமைப்பு ஈழத் தேசிய விடுதலை முன்னணி (E.N.L.F).

அக் கூட்டமைப்பு உருவாகி சரியாக ஒரு வருடத்தின் பின்னர் புலிகள் இணைந்து கொண்டனர். 1985 ஏப்ரல் 10ம் திகதி புலிகளின் இணைப்பு உறுதி செய்யப்பட்டது.

இக் கூட்டமைப்பு உருவான விதம், புலிகளை கொண்டுவர மேற்கொள்ளப் பட்ட முயற்சிகள் குறித்து முன்னரே விபரித்திருந்தேன்.

கூட்டமைப்பில் புலிகள் இணைந்து கொண்ட பின்னர் நடைபெற்ற தாக்குதல் ஒன்று கூட்டமைப்பையும் சங்கடத்திற் குள்ளாக்கியது.

## அநுராதபுரம் நோக்கி

1985 மே மாதம் 15ம் திகதி மன்னாரில் இருந்து காட்டுப்பாதை வழியாக புலிகளின் அணி ஒன்று சென்றது.

அந்த அணிக்கு தலைமை தாங்கியவர் விக்ரர். அவர்தான் அப்போது புலிகளின் மன்னார் தளபதி.

அநுராதபுரம் நோக்கியே அந்த அணி சென்றது. புலிகள் இயக்க உறுப் பினர்கள் அனைவரும் இராணுவத்தினர் போல சீருடை அணிந்திருந்தனர். 50 க்கு மேற்பட்டவர்கள் அந்த அணியில் இருந்தனர்.

அநுராதபுரத்தில் உள்ள கிராமத்திற் குள் புகுந்த புலிகளது அணியினரின் இயந்திரத் துப்பாக்கிகள் முழங்கின.

இராணுவத்தினர் போலவே சீருடை அணிந்து புலிகள் சென்றதால், நடப்பது என்னவென்று மக்கள் புரிந்துகொள்வதற் கிடையிலேயே பலியாகி வீழ்ந்தனர்.

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

நூற்றி ஐம்பது பேர்வரை அவ்வாறு கொல்லப்பட்டனர்.

அத்தனை பேரும் சாதாரண சிங்கள மக்கள்.

பெண்கள்–சிறுவர்கள்–குழந்தைகள்–வயோதிபர்கள் என்று பேதமின்றிப் படுகொலை செய்யப்பட்டனர்.

நூற்றுக்கு மேற்பட்டோர் படுகாயங் களோடு தப்பிக்கொண்டனர்.

தமிழ் அமைப்பெதுவும் அதற்கு முன்னர் இவ்வாறான நடவடிக்கையை மேற்கொண்டதே கிடையாது.

எங்கும் கண்டனங்கள் எழுந்தன. கடுகொலையின் கோரத்தை படமாக்கி வெளிநாடுகளுக்கு காண்பித்தது இலங்கை அரசு.

அரசாங்கம் வடக்கு–கிழக்கில் மேற் கொண்ட மனித உரிமை மீறல்கள் மட்டுமே அதுவரை வெளியுலகுக்கு தமிழ் அமைப் புக்களால் காண்பிக்கப்பட்டு வந்தன.

தன்மீதான களங்கத்தை துடைக்கவும், தமிழ் அமைப்புக்கள் இரக்கமற்ற கொலைகார அமைப்புக்கள் என்று காட்டவும் அநுராதபுரப் படுகொலைகளை பயன்படுத்திக் கொண்டது அரசு.

## புலிகளின் மறுப்பு

புலிகளோ மௌனமாக இருந் தார்கள். அநுராதபுரப் படுகொலையை அடுத்து சென்னையில் கூட்டமைப்புக் கூட்டம் நடைபெற்றது.

தான் நேரில் கலந்துகொள்ளாமல் அன்ரன் பாலசிங்கத்தையும், இராச நாயகத்தையும் பிரபா அனுப்பிவைத்தார்.

அநுராதபுரம் படுகொலைகளுக்கும் தமது இயக்கத்திற்கும் தொடர்பில்லை என்று மறுத்தார் பாலசிங்கம்.

ரெலோ–ஈ.பி.ஆர்.எல்.எஃப்– ஈரோஸ் தலைவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

புலிகள் தான் செய்தனர் என்பது அவர்களுக்குத் தெரியும். ஆனால் வெளிப் படையாகக் கண்டித்தால் புலிகளோடு ஐக்கியம் முறியும்.

இறுதியில், அநுராதபுர படுகொலை களை கண்டித்து அறிக்கை விடுவது என்று முடிவானது.

அறிக்கை தயாரானது. புலிகளின் சார்பாக அரசியல்துறை செயலாளராக இருந்த பேபி சுப்பிரமணியம் கையொப்ப மிட்டார்.

அநுராதபுரம் படுகொலைகளுக்கு புலிகளே பொறுப்பு என்று புளொட் குற்றம் சாட்டியிருந்தது. கூட்டமைப்பில் புளொட் இருக்கவில்லை என்பதால் பகிரங்கமாகக் கண்டித்திருந்தது.

## அனிதாவின் கட்டுரை

அக்காலகட்டத்தில் புலிகளுக்கு நெருக்க மான பத்திரிகையாளர்களில் ஒருவராகக் கருதப்பட்டவர் அனிதா பிரதாப்.

'சண்டே' என்னும் இந்திய ஆங்கில சஞ்சிகையின் பிரபலமான நிருபர் அவர். பிரபாகரனின் புகைப்படத்தை சண்டே இதழின் முன்பக்கத்தில் சிறப்பாக வெளி யிட்டு வைத்தவரும் அவர்தான்.

புலிகள் மீது அனுதாபம் இருந்தாலும் பத்திரிகைத் தர்மத்தை மீறாமல் தகவல்களை யும், விமர்சனங்களையும் வெளியிட்டு வந்தார் என்பதையும் குறிப்பிட்டேயாக வேண்டும்.

அநுராதபுரப் படுகொலைகள் தொடர்பாக சண்டே இதழில் (ஜுன் 9-15,1985) அனிதா பிரதாப் எழுதிய கட்டுரையின் ஒரு பகுதி இது:

"இலங்கைத் தீவில் நடைபெற்றுவரும் இனரீதியான மோதலில் கடந்த மே மாதம் அநுராதபுரத்தில் 150 சிங்களப் பொதுமக்கள் தமிழ் கெரில்லாக்களால் கொலை செய்யப் பட்டமை மற்றோர் கோர நிகழ்வாகும்.

எவ்வளவுதான் தூண்டப்பட்டாலும் சிங்களப் பொதுமக்களை தாக்குவதில்லை என்று தமிழீழத் தீவிரவாதிகள் தமக்குத் தாமே விதித்துக் கொண்ட சுய கட்டுப்பாட்டை உடைத்தெறிந்தது இதுவே முதற் தடவை யாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமே இத் தாக்குதலை நடத்தியுள்ளதாக கருதப் படுகிறது. ஆனாலும் அதிகாரபூர்வமாக அச் செயலுக்கு அவ்வியக்கம் உரிமை கோரவில்லை.

புலிகளது மூத்த உறுப்பினர் ஒருவர் எம்மோடு பேசியபோது, "ஜெயவர்த்தனா அரசுக்கு சில உண்மைகளைப் புரியவைப் பதே தாக்குதலின் நோக்கம்" என்றார். இவ்வாறு அனிதா பிரதாப் எழுதியிருந்தார்.

அப்போது இலங்கை வந்திருந்த அனிதா பிரதாப் பாதுகாப்பு அமைச்சர் லலித்அத்துலத் முதலியையும் சந்தித் திருந்தார்.

அநுராதபுரப் படுகொலையை அடுத்து ஏட்பட்டுள்ள சூழ்நிலை காரணமாக சிங்கள மக்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்போவதாகத் தெரிவித்தார் லலித்.

லலித் அத்துலத்முதலி, அனிதா பிரதாப்பிடம் கூறிய இன்னொரு விடயம் சுவாரசியமானது. அது இதுதான்:

**"நானும் பிரபாகரனும் ஒரே திகதியில் (நவம்பர் 26) பிறந்தவர்கள். ஆகவே இருவருக்கும் பொதுவான குணாம்சங்கள் இருக்கவே செய்யும். கால ஓட்டத்தில் நானும் பிரபாகரனும் நண்பர்களாகி விடுவோம்."**

(லலித்துக்கு நகைச்சுவை உணர்வு சற்றே அதிகம்தான்)

## சிதம்பரம் போட்ட கொக்கி

## நோக்கம் என்ன?

அநுராதபுரத்தில் புலிகள் தாக்கியதற்கு பின்னணியில் ஒரு நோக்கம் இருந்தது.

1985ம் ஆண்டு ஆரம்பத்தில் இருந்தே மறுபடியும் பேச்சுவார்த்தைக்கான முயற்சி கள் ஆரம்பமாகிவிட்டன.

இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவை வழிக்குக் கொண்டுவர முடியும் என்று நம்பியது போலத் தெரிந்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் உடன்பாடு ஒன்றைக் காணச்செய்வதே ராஜுவின் நோக்கம் என்று நம்பப்பட்டது.

கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கமும் அடிக்கடி டில்லி சென்று வந்தார். தமிழ் போராளி அமைப்புக்களது கருத்துக்களையும் கேட்க வேண்டும் என்று கூட்டணி நினைக்க வில்லை.

தம்மீது இயக்கங்கள் கைவைக்கப் போவதில்லை. அவ்வாறு கைவைத்தால் தமிழ் மக்களிடம் எதிர்ப்பு உருவாகும் என்று இயக்கங்கள் பயப்படும் என்றே கூட்டணி அக்காலத்தில் நினைத்துக் கொண்டிருந்தது.

அதனால், இப்போது கூறுவது போல அப்போதெல்லாம் தம்பிமாரின் கருத்து முக்கியம் என்று கூறுவதற்கு கூட்டணி கனவிலும் நினைக்கவில்லை.

போராடுவதற்கும், பேச்சுவார்த்தை மேசைக்கு அரசைக் கொண்டுவர நிர்ப்பந் திக்கும் தாக்குதல் நடத்தவும் - தீவிரவாத இயக்கங்கள்:

பேச்சு நடத்துவதற்கு மிதவாதிகளான கூட்டணியினர்- இவ்வாறுதான் இந்தியா, ஒரு போக்கை கொண்டிருந்தது.

இதனையிட்டு சகல இயக்கங்களும் அதிருப்தி கொண்டிருந்தன.

புலிகள் தமது அதிருப்தியை வேறு வகையில் காட்ட விரும்பினார்கள்.

பேச்சுவார்த்தை நடைபெற்றால் தமிழீழத் திற்கு குறைந்த தீர்வே முன்வைக்கப்படும்.

அதனால் பேச்சுவார்த்தை நடைபெற முடியாத ஒரு நெருக்கடியை ஏற்படுத்துவது.

அத்தோடு -தமிழ்போராளி இயக்கங் களைப்புறக்கணித்து விட்டு பேச்சு வார்த்தைகள் நடைபெற இயலாது என்று இலங்கை - இந்திய அரசுகளுக்கு உணர்த்து வது.

அதனால்தான் அநுராதபுரத்தில் சிங்கள மக்கள் மீது தாக்குதல் நடத்த திட்டமிடப் பட்டது.

'தாக்குதலையடுத்து தெற்கில் இனக் கலவரம் வெடிக்கும். பேச்சுவார்த்தை திட்டத் தையே ஜே.ஆர்.கைவிட வேண்டியிருக்கும்' என்றே புலிகள் நினைத்தனர்.

ஆனால், கலவரம் எதுவும் ஏற்படாமல் பார்த்துக்கொண்டது அரசு.

எனினும், கூட்டணியை மட்டுமே நம்பி பேச்சுவார்த்தையை நடத்த முடியாது என்பதை ஜே.ஆரும், ராஜீவ் காந்தியும் புரிந்து கொண்டனர்.

புலிகளது நோக்கம் சரியாக இருந்தது. ஆனால் சாதாரண மக்களை தமது இலக்காக தெரிவு செய்தமை எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாத ஒன்றாகும்.

ஆனால்-புலிகளைப் பொறுத்தவரை நோக்கம்தான் முக்கியம்; வழிமுறை எப்படி யும் இருக்கலாம் என்றே நம்பிவருகின்றனர்.

அந்த நம்பிக்கையின் வெளிப்பாடே அநுராதபுரப் படுகொலைகள்.

## உச்சி மாநாடு

1985 இல் நடைபெற்ற முக்கியமான அரசியல் நிகழ்வொன்று ஜுன் மாதம் 5ம் திகதி புதுடில்லியில் நடைபெற்றது.

இலங்கையின் இனப்பிரச்சனை தொடர்பாக ஜே.ஆரும், ராஜீவ் காந்தியும் புதுடில்லியில் உச்சிமாநாடு நடத்தினார்கள். பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியும் அந்த மாநாட்டில் கலந்து கொண்டார்.

புதுடில்லியில் நடைபெற்ற மாநாடு வெற்றிகரமாக நடக்க வேண்டும் என்று மலையகத்தின் பல பகுதிகளில் பிரார்த்தனை வைபவம் நடத்தினார் தொண்டமான்.

அட்டன் நகரில் பிரார்த்தனை வைபவம் ஒன்றை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய தொண்டமான் பின்வருமாறு சொன்னார்:

"பேச்சவார்த்தை உடனடியாக வெற்றி யளிக்காவிட்டாலும், எதிர்காலத்தில் முக்கியத் துவம் பெறவும், வெற்றி பெறவும் இது முன்னோடியாக அமையும். புதுடில்லிப் பேச்சவார்த்தை ஒரு நல்ல சகுனமாகும்."

## போர் நிறுத்த முயற்சி

புதுடில்லியில் மூன்று நாட்களாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

இந்திய பாதுகாப்பு அமைச்சர் நரசிம்ம ராவும் (தற்போதைய இந்திய பிரதமர்) இலங்கை பாதுகாப்பு அமைச்சரும் தனியாகப் பேசினார்கள்.

ஜே.ஆரும், ராஜீவும் டில்லியிலும் பேசி விட்டு, பங்களாதேஷ் நாட்டுக்கும் ஒன்றாகவே பயணம் செய்தார்கள். அதனால் விமானத் திலும் பேசிக்கொண்டே போனார்கள்.

பங்களாதேஷில் இருந்து திரும்பி டில்லி வந்து கொழும்பு திரும்பினார் ஜே.ஆர்.

புதுடில்லிப் பேச்சுக்கள் குறித்து தமிழ் அமைப்புக்கள் எதற்கும் இந்தியா விபரமெதுவும் தெரிவிக்கவில்லை.

எனினும், போர் நிறுத்தம் ஒன்றை முதலில் நடைமுறைப்படுத்துவது என்று புதுடில்லிப் பேச்சில் இணக்கம் காணப் பட்டிருந்தது.

தமிழ் போராளி அமைப்புக்களை போர் நிறுத்தம் செய்யவைக்கும் பொறுப்பை இந்தியா ஏற்றுக்கொண்டது.

போராளி அமைப்புக்களது கருத்துக் களை கேட்கமுயலாமல் இந்தியா அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது.

தாம் சொன்னால் போராளி அமைப் புக்கள் மீறமுடியாது என்பதே ராஜீவ் காந்தியின் நினைப்பாக இருந்தது.

## முதன் முதலில் ஒரு போர் நிறுத்தம்



முதலில் 'றோ'(RAW) அதிகாரிகள் மூலமாக சென்னையில் இருந்த இயக்கத் தலைவர்களை அணுகியது இந்திய அரசு.

நான்கு இயக்கங்கள் ஒரே கூட்டமைப் பாக இருந்தமையால் அவற்றை உடன் படச் செய்வதுதான் முக்கியமாக இருந்தது.

நான்கு இயக்கத் தலைவர்களும் சென்னையில் கூடினார்கள்.

"போர் நிறுத்தம் செய்ய முடியாது. சிறீலங்கா அரசை நம்பி நமது நட வடிக்கைகளை நிறுத்த முடியாது" என்று பிரபாகரன் கூறினார்.

ஈரோஸ் சார்பில் கலந்துகொண்ட சங்கர்ராஜி, "போர்நிறுத்தம் செய்யுமாறு இந்தியா கேட்கிறது. நாம் மறுத்தால் இந்திய அரசை பகைத்துக்கொள்வ தாகிவிடும்" என்று தெரிவித்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். என்ன சொல் கிறது என்று கேட்டார் பிரபாகரன்.

"கூட்டமைப்பு என்ன முடிவு எடுக் கிறதோ, அதனை ஆதரிப்போம். அதன் படி நடப்போம்" என்றார் பத்மநாபா.

ரெலோவும் அதே கருத்தையே தெரிவித் தது.

மீண்டும் கூடி ஆராய்வதாக முடிவு செய்து கூட்டம் முடிவுற்றது.

இதற்கிடையே போர் நிறுத்தத்திற்கு உடன்பட மறுத்தால் போராளி இயக்கத் தலைவர்கள் கைது செய்யப்படலாம் என்று மறைமுக அறிகுறிகள் காட்டப் பட்டன.

## தூதராக வந்தவர்

ராஜீவ் காந்தியின் சிறப்புத் தூதராக அமைச்சர் சிதம்பரம் சென்னை வந்தார். கூட்டமைப்பில் உள்ள இயக்கத் தலைவர் களை அவர் சந்தித்தார்.

திரு.சிதம்பரம் ஒரு சிறந்த சட்டத்தரணி; நுட்பமாகப் பேசக்கூடியவர்; ராஜீவ் காந்திக்கு மிக நெருக்கமாக இருந்தவர்.

சாம, பேத, தான, தண்ட முறைகளை பிரேயாகித்து சிதம்பரம் பேச்சு நடத் தினார்.

அவர் பேசியதின் இரத்தினச் சுருக்கமான விஷயம் இது:

**"ராஜீவ் என்னை உங்களிடம் அனுப்பியிருக்கிறார். உங்கள் உணர்வு களை அறிந்து போய்ச் சொல்ல வேண்டியது எனது பணியாகும். பிரதமர் ராஜீவ், நீங்கள் முடிவெடுப்பதற்காக இரண்டு வழிகளைச் சொல்லியிருக்கிறார்.**

**ஒன்று, இந்தியா விரும்புவது போல நீங்கள் போர் நிறுத்தம் ஒன்றைச் செய்து கொள்ள வேண்டும். அவ்வாறு செய்தால் இந்தியா உங்கள் பின்னால் நிற்கும்.**

**இரண்டாவதுவழி, போர் நிறுத்தம் செய்ய விரும்பாவிட்டால் இந்தியா உங்களை நிர்பந்திக்காது. ஆனால் நீங்கள் இங்கிருந்து உங்கள் நாட்டுக்குப் போய்விட வேண்டும். இந்தியா இந்தப் பிரச் சனையில் இருந்து முற்றாக விலகிக் கொள்ளும்."**

பக்குவமாகக் கொக்கி போட்டுவிட்டு தலைவர்களைக் கூர்ந்து கவனித்தார் சிதம்பரம்.

தலைவர்கள் கொக்கியிலிருந்து எப் படித் தப்பினார்கள்?

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# தணிக்கை, தணிக்கை

## வாளின் கூர்மையை விட பேனாவின் கூர்மை மேலானது.

## பத்திரிகைத் துறை சந்தித்த தடைகள்

அலசுவது–இராஜதந்திரி

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்தபின்னர் செய்திச் சுதந்திரத்துக்கு 'கால்கட்டு' போடும் முதலாவது நடவடிக்கையாக கடந்தவாரம் பாதுகாப்புப் படைகள் சார்ந்த செய்திகள் மீது தணிக்கை போடப்பட்டுள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை பத்திரிகைச் செய்தி தணிக்கை என்ற விடயம் புதியதொன்றல்ல. ஆட்சியிலிருப்போர் தமது நலன்களைப் பேணும் வகையில் நடைமுறைப்படுத்தும் முதலாவது நடவடிக்கையாகவே 'தணிக்கை' என்ற அம்சம் விளங்குகின்றது.

இலங்கையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைப் பொறுத்தவரை பத்திரிகைத்துறையுடன் கடந்த காலங்களில் குறிப்பிடத்தக்களவு உறவுகளைக் கொண்டிருந்ததாகச் சொல்வதற்கு இல்லை.

இன்று ஆசியாவிலேயே ஒரு பழம்பெரும் பத்திரிகை நிறுவனமாக கொழும்பு 'லேக்ஹவுஸ்' (Lake House) நிறுவனம் இயங்கி வருகின்றது.

அமரர் டி.ஆர்.விஜயவர்த்தனவின் அயரா முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்டதே லேக்ஹவுஸ் நிறுவனமாகும். தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் இலங்கையர்களுக்கு விரிவான வகையில் செய்திகளை வழங்க வேண்டுமென்பது அமரர் டி.ஆர்.விஜயவர்த்தனவின் விருப்பமாக இருந்தது.

இந்த விருப்பத்துக்கமைய லேக்ஹவுஸ் ஸ்தாபனம் உருவாக்கப்பட்டு மும்மொழிகளிலும் பத்திரிகைகள் வெளிவந்தன. அத்துடன் இலங்கையில் தரமான பத்திரிகையாளர்களை உருவாக்குவதிலும் 'லேக்ஹவுஸ்' நிறுவனம் நல்ல பங்களிப்பை வழங்கியிருந்தது.

75 வருடங்களுக்கு மேலாக இலங்கையில் பத்திரிகைத்துறையில் சுடர்விட்டுப் பிரகாசித்து வந்தது. ஆனால் இச்சுடரொளியை மங்கச்செய்யும் முதலாவது நடவடிக்கை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஆட்சியிலேயே இடம்பெற்றது.

1970ம் ஆண்டு பதவிக்கு வந்த திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கமே சுதந்திரமாகவும், தலையீடுகளின்றியும் இயங்கிவந்த லேக்ஹவுஸ் நிறுவனத்தை அரச உடமையாக்கியது.

இதுவே இலங்கையில் பத்திரிகைத்துறைமீது விழுந்த முதலாவது பெரும் அடியாகும்.

இதனையடுத்து பத்திரிகைத்துறையை எவ்வாறெல்லாம் ஒரு கைப்பாவையாக வைத்திருக்க முடியுமோ, அவ்வாறெல்லாம் ஆட்சியாளர்கள் பத்திரிகைத்துறையினரை ஆட்டிப்படைத்தனர்.

'லேக்ஹவுஸ்' நிறுவனம் இலங்கையில் அரச உடமையாக்கப்பட்டபோது, திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அமைச்சரவையில் முன்னணி இடதுசாரிகள், சோஷலிஸவாதிகள், புத்திஜீவிகள் என்று பலரும் இடம்பெற்றிருந்தனர்.

இவர்களில் அமரர்கள் என்.எம்.பெரேரா, கொல்வின் ஆர்.டி.சில்வா, பீட்டர் கெனமன் ஆகியோரும் அடங்குவர்.

ஆயினும் அன்று 'லேக்ஹவுஸ்' அரச உடமையாக்கப்பட்டு பத்திரிகைத்துறைமீது அரசு தனது இரும்புக் கரங்களைப் பதித்தபோது இந்த முக்கியஸ்தர்கள் அந்த நடவடிக்கைக்கு உடந்தையாகவே இருந்தார்கள்.

அவர்களின் இப்போக்கு, விமர்சனத்துக்குரியதாகவும், கல்வி, அரசியலில் எத்தகைய சிறப்புக்களைக் கொண்டிருந்தபோதிலும் தமது சொந்த நலன்களைப் பாதுகாக்க சுயநலத்துடன் அவர்கள் நடந்து கொண்டதையுமே புலப்படுத்துவதாக இருந்தது.

இது தவிர இலங்கையில் ஒரு பத்திரிகையாளரின் துணிச்சலைப் பறைசாற்றும் முதல் நூலும் லேக்ஹவுஸ் பத்திரிகை ஆசிரியர் ஒருவராலேயே எழுதப்பட்டிருந்தது.




லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஆங்கில வாரப் பத்திரிகையான ஒப்ஸேவரின் (Observer) ஆசிரியராக இருந்தவரே அமரர் தாஸி வித்தாச்சி (Tarzie Vitachi).

1958ம் ஆண்டு அமரர் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் தமிழ் மக்களுக்கெதிராக இனக்கலவரம் வெடித்திருந்த நேரம்.

வழமைபோன்றே லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனம் இயங்கிக் கொண்டிருந்தது.

ஒப்ஸேவர் ஆசிரியர் தாஸி வித்தாச்சி தமது அறைக்குள் இருந்தார். லேக்ஹவுஸ் நிறுவனத்துக்கு வெளியே தமிழ் நபர் ஒருவரைப் பலர் ஒளித்து நின்று தாக்குவதை தாஸி வித்தாச்சி தமது அறை ஜன்னல் ஊடாகக் கண்டார்.

இதனையடுத்து தமது பேனாவைத்தீட்டிய ஒப்ஸேவர் பத்திரிகையாசிரியர் தாஸி வித்தாச்சி 'அவசரகாலம்-58' (Emergency - 58) என்னும் தலைப்பில் நூல் ஒன்றை வெளியிட்டிருந்தார்.

இலங்கையில் 1958ம் ஆண்டு தமிழர்களுக்கெதிராக முதல்தடவையாக பெருமளவில் வெடித்த இனவாத வன்முறைகளை எடுத்துக் கூறுவதாக இந்த நூல் விளங்கியிருந்தது.

எனவே, அன்றைய அமரர் பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்தில் நிலவிய இன வன்முறையைச் சாடும் முதலாவது நூலாகவும், தமிழருக்கெதிரான வன்முறைகள் பற்றி நூலுருவில் தமிழரல்லாத ஒருவரால் எழுதப்பட்ட முதலாவது நூலாகவுமே 'அவசரகாலம்-58' விளங்கியிருந்தது. திரு.தாஸி வித்தாச்சி தமது நூலை இலங்கையில் வைத்து வெளியிடவில்லை. அதனை இலங்கையில் வெளியிடுவதில் அவர் அச்சுறுத்தலை எதிர்நோக்கியிருந்தார். எனவே இங்கிலாந்துக்குச் சென்று அங்கிருந்தே அந்நூலை அவர் வெளியிட்டிருந்தார்.

தமிழர்களுக்கெதிரான வன்முறைகளைச்சாடும் முதலாவது நூலாக மட்டுமல்லாமல், இலங்கை ஆட்சியாளர்களின் அராஜகப்போக்கை வெளிப்படுத்தும் முதலாவது நூலாகவும் திரு.தாஸி வித்தாச்சியின் அந்த நூல் விளங்கியிருந்தது.

எனவே இலங்கையின் கடந்தகால அரசியல் வரலாற்றை அலசிப்பார்க்கும்போது, ஒரு பத்திரிகையாளர் ஆட்சியாளர்களுடன் முரண்பட்டது இந்த 'அவசரகாலம்-58' நூலை எழுதியது மூலமாகவேயாகும். அதுவும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சியிலேயே இடம்பெற்றிருந்தது.

இதனையடுத்து திரு.தாஸி வித்தாச்சி பணிபுரிந்த லேக்ஹவுஸ் நிறுவனம் அரச உடமையாக்கப்பட்டு, பத்திரிகைத்துறை கேலிக்கூத்தாக்கப்பட்டதும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சியிலேயாகும்.

லேக்ஹவுஸ் நிறுவனம் அரச உடமையாக்கப்பட்டு, அரசின் குரலாக அந்நிறுவனப் பத்திரிகைகள் மாற்றமடைந்ததைத் தொடர்ந்தே தணிக்கை, இருட்டடிப்பு, மிகைப்படுத்தல் போன்ற பத்திரிகை தர்மத்துக்கு ஒவ்வாத அம்சங்கள் இலங்கையில் தலைகாட்ட ஆரம்பித்தன.

அன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில் லேக்ஹவுஸ் நிறுவனம் அரசுடமையாக்கப்பட்ட போது திரு.ஜே.ஆர்.ஜயவர்த்தனா ஐக்கியதேசியக் கட்சியின் சார்பில் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார்.

லேக்ஹவுஸ் நிறுவனத்தை அரச உடமையாக்கியதை திரு ஜே.ஆர்.ஜயவர்த்தனா எதிர்க்கட்சித் தலைவராக இருந்து வன்மையாகக் கண்டித்தார்.

அரசின் இத்தகைய தலையீடு கருத்துச் சுதந்திரத்தை மழுங்கடிக்கின்றது என்று தமது கண்டனத்தை ஜே.ஆர்.ஜயவர்த்தனா வெளியிட்டார்.

ஆனால் 1977ம் ஆண்டு திரு.ஜே.ஆர்.ஜயவர்த்தனா தலைமையிலான ஐ.தே.க. அரசு பதவிக்கு வந்தது. எதிர்க்கட்சியில் இருந்தபோது லேக்ஹவுஸ் நிறுவனம் அரச உடமையாக்கப்பட்டதை எதிர்த்த திரு.ஜயவர்த்தனா ஜனாதிபதியானதும், அந்த நிறுவனத்தை மீண்டும் தனியார் மயப்படுத்தவில்லை.

அரச உடமையாகவே இருந்த லேக்ஹவுஸ் நிறுவனத்தின் மீது ஜே.ஆர்.ஜயவர்த்தனாவும் ஏறிச்சவாரி விடலானார்.

ஒரு காலத்தில் தமது செயலாளராக இருந்த ஆர்.போதினாகொட என்பவரை லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவராக திரு.ஜயவர்த்தனா நியமித்தார். அத்துடன் தாம் பதவி வகித்த 12 வருட காலமும் திரு.போதினாகொடவை லேக்ஹவுஸ் நிறுவனத் தலைவராக இருக்கச் செய்து அந் நிறுவனத்தின் தமிழ், ஆங்கில, சிங்கள பத்திரிகைகள் அனைத்தையும் தமது அரசாங்கத்தின் ஊதுகுழலாக மாற்றியிருந்தார்.

திரு ஜே.ஆர்.ஜயவர்த்தனாவைத் தொடர்ந்து பதவிக்கு வந்த ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸாவும் லேக்ஹவுஸ் நிறுவனத்தை தமது மனம் போன போக்கில் இயக்கினார்.

தமக்கு விருப்பமில்லாத பத்திரிகையாளர்களை ஆசிரியர் பதவி மற்றும் பொறுப்பு வாய்ந்த ஏனைய பதவிகளிலிருந்து மாற்றம் செய்தார். தமக்குப் பிடித்தவர்களை அப்பதவிகளில் அமர்த்தினார்.

ஜனாதிபதி பிரேமதாஸா ஆட்சியில் ஒப்ஸேவர் பத்திரிகையின் ஆசிரியராக திரு.எஸ்.எல்.டி.மகிந்தபாலா என்பவர் இருந்தார்.

இவர் ஒரு பத்திரிகை ஆசிரியர் என்பதைவிட ஒரு முற்றுமுழுதான பிரேமதாஸா விசுவாசியாகவே இருந்தார். ஜனாதிபதி பிரேமதாஸாவைப் பெரிதும் வியந்து பாராட்டியதுடன், அவரது எதிரிகளை தாறுமாறாகவும் தாக்கி ஒப்ஸேவர் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கள், கட்டுரைகளை எழுதியிருந்தார்.

கடந்த ஐ.தே.க. ஆட்சியின் பத்திரிகைத்துறை, அதுவும் லேக்ஹவுஸ் நிறுவனம் செயற்படும் விதம் என்பன குறித்து பொதுஜன ஐக்கிய முன்னணியினர் கடுமையாக விமர்சித்திருந்தனர்.

ஆனால் தற்போது பொது ஜன ஐக்கிய முன்னணியினர் ஆட்சிக்கு வந்து ஒரு வருட காலத்தைப் பூர்த்தி செய்துள்ள இத்தருணத்தில் பத்திரிகைத் துறையினரை அவமானப்படுத்தும் சம்பவங்கள் பல இடம் பெற்றிருந்தன.

லீடர் (Leader) என்ற ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியர் மோசமாக நையப்புடைக்கப்பட்டிருந்தார். அத்துடன் பத்திரிகை ஆசிரியர்கள் சிலர் பொலிஸ் விசாரணைக்கும் உட்படுத்தப்பட்டனர்.

இது தவிர பத்திரிகை நிறுவனங்கள் சிலவற்றினுள்ளும் பொலிஸார் புகுந்து விசாரணைகளை நடத்தியிருந்தனர்.

எனவே, பொது ஜன ஐக்கிய முன்னணியினர் தற்போது செய்தித் தணிக்கையை அறிவித்துள்ளதன் மூலம் செய்திச் சுதந்திரத்தை தமது விருப்பத்திற்கேற்ற வகையில் கையாள முடியும் என்பதைப் புலப்படுத்தியுள்ளனர்.

வாளைவிடப் பேனாவின்முனை கூர்மையானது (Pen is mightier than Sword) என்று கூறப்படுவதுண்டு.

இன்று இலங்கையின் ஒரு பகுதி யுத்தப்பிரதேசமாக இருக்கின்றது. அங்கே காணப்படும் சமர் வாள்கள் கூர்மையிழந்து, அல்லது அவற்றை லாவகமாக வீசுவதற்கு அரச தரப்பில் தகுந்தவர்கள் இல்லாத நிலையே காணப்படுகின்றது.

இந் நிலையில் கூர்மையாக இருந்து சுதந்திரமாக எழுதிச் செல்லும் பேனாக்களின் கூர்மையையும் மழுங்கடிப்பதன் மூலம் அராஜகமே நாட்டு நடப்பாக மாறும் சூழ்நிலை தோன்றுவதை உணரமுடியும்.

# புலிகளின் தணிக்கை

யுத்தம் இப்போது செய்தியாளர்களின் கரங்களை கட்டிப்போட்டு விட்டது.

யுத்தத்தில் ஈடுபடும் இரு தரப்புக்களும் செய்திகள் விடயத்தில் தமது நடவடிக்கைகள் விமர்சிக்கப்படாத, வெளிப்படுத்தப்படாத ஒரு நிலையை விரும்புகின்றன.

அரசின் செய்தித் தணிக்கை என்பது இனவாத சக்திகளையும், அரசியல் தீர்வுக்கு எதிரானவர்களையும் அடக்கிவைக்கும் ஒரு முயற்சி என்று சிலர் பிரசாரம் செய்ய முற்படுகிறார்கள்.

இராணுவ செய்திகளைப் பொறுத்தவரை மட்டுமே தணிக்கை என்று அரசு அறிவித்துள்ளது. இனவாதரீதியான பிரசாரங்கள், தீர்வு யோசனைக்கு எதிரான கருத்துக்கள் போன்ற விடயங்களை தணிக்கை விதிகள் கட்டுப்படுத்தப் போவதில்லை.

ஆக, வடக்கிலோ, கிழக்கிலோ யுத்தத்தோடு தொடர்புடைய செய்திகளை வெளியிடுவது மட்டுமே முக்கியமாக தடுக்கப்படுகிறது. இது எவ்வாறான நிலையை உருவாக்கும் என்பது தெரிந்ததுதான். இதனால் இனவாதிகள் ஒன்றும் பாதிக்கப்படப் போவதில்லை.

வடக்கு-கிழக்கில் எத்தனைபேர் செத்தார்கள் என்ற புள்ளி விபரங்களை உண்மையாக அறிவதில் அவர்களுக்கு பெரிய அக்கறையா இருக்கப் போகிறது.

ஆக, தமிழ் பேசும் மக்கள் அறிய விரும்பும் உண்மைகளை 'இராணுவச் செய்தித் தணிக்கை' தடுத்துவிடப்போகிறது.

ஏற்கனவே-புலிகளும் தமக்கு சாதகமான யுத்த செய்திகளை வெளியிட மட்டுமே தமிழ் பத்திரிகையாளர்களுக்கு சுதந்திரம் வழங்கியிருந்தனர்.

வடக்கிலிருந்து மூன்று தமிழ் பத்திரிகைகள் வெளிவருகின்றன. மூன்றுமே புலிகளது பிரசார ஏடுகளாகவே வெளிவர முடிகிறது.

வடக்கில் மட்டுமல்ல, வடக்குக்கு வெளியே உள்ள தமிழ் பத்திரிகைகள் பலவும்கூட புலிகளுக்கு மாறான செய்திகள் வெளியிடுவதை தவிர்த்தே வருகின்றன.

புலிகளுக்குள் மாத்தையா பிரச்சனை ஏற்பட்ட போது முரசு தவிர வேறெந்த தமிழ் வெகுஜனப் பத்திரிகைகளும் அப்படி ஒரு சம்பவம் நடந்ததாகவே வாசகர்களுக்கு தெரிவிக்கவில்லை.

அவ்வளவு ஏன், சமீபத்தில் ஐரிஸ்மோனா கப்பல் கடத்தப்பட்டு பயணிகளில் ஒருவர் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட செய்திகூட தெளிவாக வெளியிடப்படவில்லை.

வெலிஓயாவில் 180 புலிகள் பலியானார்கள். இதனைப் புலிகளே ஏற்றுக் கொண்டனர். பாரிசில் இருந்து வெளிவரும் 'ஈழநாடு' பத்திரிகை எப்படிச் செய்தி வெளியிட்டது தெரியுமா? எங்கோ கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களை சுட்டுக் கொன்றுவிட்டு புலிகள் என்று அறிவித்திருக் கிறார்கள் என்று செய்தி வெளியிட்டது.

உண்மை தெரிந்த போது தனது செய்திக்காக வாசகர்களிடம் வருத்தம் தெரிவிக்கக்கூட அப்பத்திரிகை முன்வரவில்லை.

ஐரிஸ்மோனா கப்பல் கடத்தப்பட்டது இலண்டன் பி.பி.ஸி செய்தியாளர் ஆனந்தி என்ன செய்தார் தெரியுமா? அது ஈ.பி.டி.பி கப்பல் என்று சித்தரிக்க முற்பட்டார். அப்படியானால்தான் அவர் மீண்டும் யாழ்ப்பாணம் செல்ல முடியும். புலிகளது தலைவரைச் சந்தித்து பேட்டி எடுத்தும், புகைப்படங்கள் எடுத்தும் பல்வேறு பத்திரிகைகளுக்கு இலாபகரமாக விநியோகிக்க முடியும்.

இதைப்போலவே-சில சிங்களப் பத்திரிகையாளர்களுக்கும் தமிழ் மக்களின் பாதிப்பு ஒரு பொருட்டல்ல. எவ்வாறானாலும் படைகள் வெற்றி பெற்றால் போதுமானது.

அவர்கள் தொடர்ந்து எழுதமுடியும். அரச தணிக்கை அவர்களை கட்டுப்படுத்தாது.

புலிகளுக்கு ஆதரவான பத்திரிகையாளர்களும் கொழும்பு தவிர, வடக்கிலும், வெளிநாடுகளிலும் இருந்து எழுத முடியும். இரு தரப்புமே அவர்களை ஒன்றும் செய்யாது.

இரு தரப்பும் சொல்லும் செய்திகளுக்கு அப்பால் உண்மையைக் கண்டறிந்து எழுத முற்படுகிறவர்களின் நிலை மட்டுமே சங்கடத்திற்குள்ளாகியிருக்கிறது.

ஆனால் ஒன்று, அரசின் செய்தித் தணிக்கை பற்றி கண்டிக்கும் தார்மீக உரிமை இரு தரப்பில் ஏதாவது ஒரு தரப்புக்காக கண்ணை மூடிக்கொண்டு வாதிடுபவர்களுக்கு கிடையவே கிடையாது.


படிப்பகம்

www.padippakam.com

# மனித வெடிகுண்டு

தருவது ரசிகன் 3

# கார்லோஸின் இரு முகங்கள்



**வடக்கு இலண்டனில் துப்பாக்கிச்சூடு யூத இன செல்வந்தர் படுகாயம்!**

*"நேற்று மாலை 7 மணியளவில் வடக்கு இலண்டனில் குடியிருக்கும் எட்வேர்ட் ஜோசப் சியெ:ப் என்பவர்மீது துப்பாக்கி ஏந்திய நபர் ஒருவர் சுட்டார். ஒரு குடு மட்டுமே செல்வந்தர் மீது விழுந்தது. துப்பாக்கி மேற்கொண்டு வெடிக்க மறுத்தமையால் செல்வந்தர் மயிரிழையில் உயிர் தப்பினார்.*

*பாலஸ்தீன தீவிரவாதி ஒருவரே கொலை முயற்சியில் ஈடுபட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. இலண்டனில் உள்ள பாலஸ்தீனியர்கள் சிலரை சந்தேகத்தின் பேரில் பொலிஸ் கைது செய்து விசாரித்து வருகிறது."*

பத்திரிகைச் செய்தியைப் படித்த கார்லோஸ் வாய் விட்டுச் சிரித்தான்.

சூடான தேநீர் கோப்பையோடு வந்த நதியாவுக்கு கார்லோஸ் பத்திரிகையைப் பார்த்துச் சிரித்தது வேடிக்கையாக இருந்தது.

தேநீர் கோப்பையை கார்லோஸின் முன்பிருந்த ரீப்போயில் வைத்துக் கொண்டே, "ஏதாவது ஜோக் போட்டிருக்கிறார்களா இலிச்?" என்றாள். கார்லோஸ் என்ற பெயர் நதியாவுக்குத் தெரியாது.

நதியாவுக்கு 40 வயது. அவளாக சொன்னால் தான் 40 வயதா என்று வியக்க வேண்டியிருக்கும். இளமையாகவே இருந்தாள். கண்களில் ஒரு காந்த சக்தி இருந்தது. அதுதான் கார்லோஸை இழுத்துப் போட்டது. நதியா இலத்தின் அமெரிக்காவைச் சேர்ந்தவள். செக்ஸைப் பொறுத்தவரை சுதந்திரமான கருத்துக்களை வைத்திருந்தவள்.

நதியாவுக்கு கார்லோஸைப் பிடித்திருந்தது. கார்லோஸுக்கு நதியா தேவையாக இருந்தது. இலண்டனில் வசிக்க ஒரு வீடு தேவையாக இருந்தது.

நதியாவோடு தங்கிக் கொண்டான்.

"இப்போதெல்லாம் ஜோக் என்று தனியாகப் போடாமல், அதற்குப் பதிலாக செய்திகளைப் போடுகிறார்கள்."

என்றான் கார்லோஸ். நதியா கார்லோஸின் மடியில் அமர்ந்து கொண்டாள்.

"தேநீர் சூடாக இருக்கிறது இலிச், எடுத்துக் கொள்" என்றாள்.

"நீயும்தான்" என்றவன் கழுத்துக்குக்கீழே தொட, நதியா புன்னகைத்தபடி அனுமதித்தாள்.

கார்லோஸின் நடவடிக்கைகளுக்கு உதவ வேறு சிலரையும் பாலஸ்தீன மக்கள் விடுதலை முன்னணி (P.F.L.P) தளபதி வாடிஹாட்டாட் அனுப்பியிருந்தார்.

அவர்கள் வேறொரு இடத்தில் தங்கியிருந்தனர். சந்திப்புக்கள் மிக இரகசியமாகவே நடைபெற்று வந்தன.

கார்லோஸின் சொந்தப் பெயர் மற்றவர்களுக்குத் தெரியாது. எங்கு தங்கியிருக்கிறான் என்பதும் தெரியாது.

கார்லோஸுக்கு தேவையான உதவிகளை செய்வது, கார்லோஸின் உத்தரவுப்படி தாக்குதல்களில் பங்கெடுப்பது என்பதுதான் உதவிக்கு அனுப்பப்பட்டவர்களின் வேலை.

தலைமறைவு இரகசிய குழுவுக்குரிய நுட்பமான நடவடிக்கைகளை கார்லோஸ் மிகப் பத்திரமாக மேற்கொண்டு வந்தான். இல்லாவிட்டால் இலண்டன் பொலிசாரிடம் சுலபமாக மாட்டியிருக்க வேண்டியதுதான்.

பெண்களோடு சுற்றுவது, மூக்கு முட்டக் குடித்துவிட்டுக் கூத்தடிப்பது–இலிச் ஒரு கேளிக்கைப் பிரியன்.

திட்டமிட்டுத் தாக்குவது, பொலிசாரின் வலையில் சிக்காமல் கம்பி நீட்டுவது–கார்லோஸ் ஒரு நரி.

இந்த இரட்டை வாழ்க்கைதான் கார்லோஸுக்கு கைகொடுத்துக் கொண்டிருந்தது.

தளபதி வாடிஹாட்டாட் ஒரு இரகசிய உத்தரவை கார்லோஸுக்கு அனுப்பி வைத்தார்.

**–"அடுத்த இலக்கு–**

**'தி பாங்க் ஹப்பௌலிம்'**

**தேவையான உதவியைப் பெற்றுக் கொள்ளலாம்."**

அவ்வளவுதான் செய்தி.

கார்லோஸ் செய்தியில் உள்ள விபரங்களைப் புரிந்து கொண்டான். இலண்டனில் யூதர்களுக்குச் சொந்தமான வங்கிதான் 'தி பாங்க் ஹப்பௌலிம்' அதனைத் தாக்க வேண்டும். தாக்குதலுக்கு யார யாரைப் பயன்படுத்துவது என்பதை கார்லோஸ் முடிவு செய்துகொள்ளலாம்.

கார்லோஸ் பதில் எழுதினான்.

**"யாரும் வேண்டாம். நான் மட்டும் போதும்!"**

எப்படி நடத்துவது? யோசிக்க அவகாசம் வேண்டும் அதற்கு முன் ஒரு உற்சாகம் வேண்டும்.

கார்லோஸ் நேராக அஞ்செலாவைத் தேடிப்போனான்.

அஞ்செலா ஒரு பாஸ்க்கு இனப் பெண், இளம் பெண்.

மரியா ஆண்ஜெலஸ் ஒத்தாலோ என்னும் நீளமான பெயரை அழகாக சுருக்கி அஞ்செலா என்று வைத்துக் கொண்டாள்.

அஞ்செலாவுக்கும் கார்லோஸை 'இலிச்' என்றுதான் தெரியும்.



"வா! இலிச், இப்போதுதான் உன்னை நினைத்துக் கொண்டிருந்தேன். நூறு வயசு."

"என்ன நீ, ஒரு கம்பீர இளைஞனை பார்த்து நூறு வயசு என்று..."

"நோ... உன் கம்பீரம் எனக்குத் தெரியாதா ஒரு பேச்சுக்குச் சொன்னேன், பொசுக்கென்று கோபப்படுகிறாயே. பொறு, வர முன்னரே அவசரமா?"

"அவசரத்தின் பெயர் தானே இளமை!"

அஞ்செலா நசுங்கிப் போனாள்.

'முரட்டுப்பயல்' என்று விருப்பமாய் முணுமுணுத்தாள்.

களைத்துப் போய் அஞ்செலா உறங்கிக் கொண்டிருக்க, கார்லோஸ் மட்டும் பதினோராவது சிகரெட்டைக் கொளுத்திக் கொண்டு யோசித்துக் கொண்டிருந்தான்.

கொள்ளையடித்துவிட்டு குண்டை வீசுவதா? அல்லது குண்டை மட்டுமே வீசித்தாக்குவதா?

ஒரு முடிவுக்கு வந்த போது உடல் அசதி விழிகளை அறைந்து சாத்த, அஞ்செலாவை அணைத்தபடி கார்லோஸ் தூங்கிப்போனான்.

▫▫

'**தி** பாங்க் ஹப்பௌலிம்' என்ற எழுத்துக்களோடு வங்கிக் கட்டிடம் கார்லோஸை வரவேற்றது.

கார்லோஸின் கரத்தில் ஒரு பார்சல் இருந்தது. பண நோட்டுக்களைப் பார்சல் பண்ணிக் கொண்டு செல்வது போல பார்சல் உருவாக்கப்பட்டிருந்தது.

வங்கியின் முன்புற வாயிலைக் கடந்து விட்டான். உள்ளே சென்றவுடன் இரண்டாவது சிறிய வாயில். அதற்கு அரைக்கதவுகள் இரண்டு வைத்திருந்தார்கள். ஸ்பிரிங் கதவுகள்.

அக்கதவுகளை தள்ளியவுடன் வங்கியின் உட்புறம் தெரியும்.

உள்ளே நுழையாமல் கதவின் மறைவில் நின்றே பார்சலை வீசியெறிய நினைத்தான் கார்லோஸ்.

உள்ளே சென்றுவிட்டால் பலரது பார்வையில் படவேண்டியிருக்கும்; முகம் தெரிந்துவிடும் என்பதால் அந்த ஏற்பாடு.

அரைக்கதவுகளில் ஒன்றைக் கையால் அழுத்தித் திறந்தபடி, மறுகையால் காசாளர் இருந்த பகுதியை நோக்கி பார்சலை வீசுவதற்கு முயல, மறுகதவு வந்து கார்லோஸின் முகத்தில் அறைந்தது.

ஸ்பிரிங் கதவு என்பதால் ஒரு கதவு திறக்கப்பட மறுகதவு முன்னோக்கி வந்துவிட்டது.

கார்லோஸ் தடுமாறிய போது வீசிய பார்சல் இலக்கு தவறியது.

வீசிய மறுகணமே வங்கியை விட்டு வெளியே பாய்ந்தான் கார்லோஸ்.

உள்ளே–

'டமால்' பாரிய சத்தம் மட்டுமே கார்லோஸின் காதில் விழுந்தது.

கார்லோஸ் மோட்டர் சைக்கிளில் ஏறிப் பறந்துவிட்டான்.

அஞ்செலாவை அணைத்துக் கொண்டே தொலைக்காட்சியில் செய்தி பார்த்துக் கொண்டிருந்தான் கார்லோஸ்.

*"தி பாங்க் ஹப்பௌலிம்' வங்கிக்குள் இன்று குண்டு ஒன்று வீசப்பட்டது. யாரும் உயிரிழக்கவில்லை. சிலருக்கு மட்டும் சிறு காயங்கள், அரேபிய இளைஞன் ஒருவனே குண்டு வீசியதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்."*

அஞ்செலாவின் இடையை ஒரு கரத்தால் இறுக்கிக் கொண்டே கார்லோஸ் கேட்டான்:

"அரேபியர்கள் யாரும் அயல்வீடுகளில் இருக்கிறார்களா அஞ்செலா?"

"இல்லையே, ஏன் கேட்கிறாய்?"

"கண்ட இடத்திலெல்லாம் ஏனப்பா குண்டை எறிந்து வீணாக்கிக் கொண்டிருக்கிறீர்கள்? என்று விசாரிக்கத்தான்"

அஞ்செலா சிரித்தாள். தொலைக்காட்சியில் சம்பவத்தை நேரில் கண்ட சிலரை பேட்டி எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

குண்டெறிந்தவனின் அங்க அடையாளங்களை ஒருவர் விவரிக்கத் தொடங்க உசாரான கார்லோஸ், அஞ்செலாவின் முகத்தை தன்னை நோக்கித் திருப்பினான். இதழ்களை தன் உதடுகளால் வாங்கிக் கொண்டே, தான் மட்டும் தொலைக்காட்சியைக் கவனித்தான்.

அவர் விவரித்துக் கொண்டிருந்தார். விவரிக்கப்பட்ட அங்க அடையாளங்கள் எதுவும் கார்லோஸோடு பொருந்தவே இல்லை.

அஞ்செலாவின் இதழ்களை விடுவித்து விட்டு, நிம்மதியாய் மூச்சை வெளியேற்றிய கார்லோஸ் சொன்னான்:

"குண்டை வீசியவனைப் பிடித்து விடுவார்கள் என்பதில் சந்தேகமே இல்லை!"

அதே நேரத்தில் பெய்ரூட்டில் தளபதி வாடிஹாட்டாட் மற்றொரு திட்டத்திற்கு புள்ளி வைத்துக் கொண்டிருந்தார்.

**(துணிகரங்கள் தொடரும்)**

# ஹலோ டாக்டர்...!



## எலிசபெத்தும்–குறட்டையும்

"**வ**ணக்கம் டாக்டர். வரும்போது நண்பர் ஒருவர் கேட்ட கேள்வி. அவரது மகனுக்கு மூன்று வயதாகிறதாம். இதயத்தில் கர்முர் என்று சத்தம் வருகிறதாம். ஏன் டாக்டர்?"

"எண்பது சதவீதமான சிறுவயதினருக்கு ஏதாவது ஒருவகையில் இந்தச் சத்தம் வரும். அதனை ஒரு பெரிய கோளாறாகக் கருத முடியாது."

"கர்முர் சத்தம் என்றதும் எனக்கு இன்னொரு சந்தேகம் வருகிறது டாக்டர். குறட்டை விடுவதை நிறுத்தவே முடியாதா?"

"மூக்கின் அடியில் உள்ள சதைவளர்ச்சி சுவாசக் குழாயில் பாதிப்பை ஏற்படுத்தும் போதுதான் குறட்டை வருகிறது. 5 வயதிற்குள் இந்த சதைவளர்ச்சி தானாக மறைய வேண்டும். இல்லையேல் டாக்டரை அணுகி மருந்து சாப்பிட்டுவந்தால் நீங்கிவிடும். மோசமான நிலையில் உள்ளவர்களுக்கு ஒப்பரேசன் செய்யவேண்டி வரலாம்."

"சரி டாக்டர், வளர்ந்தவர்களுக்கு இருக்கும் குறட்டை சத்தம் பற்றி கூறவேயில்லையே."

"ஒன்றும் செய்ய முடியாது. அதையே ஒரு தாலாட்டு என்று நினைத்து மற்றவர்கள் தூங்கவேண்டியதுதான். சிலருக்கு உடல் எடை கூடினாலும் குறட்டைவரும். பயிற்சி செய்து எடையைக் குறைத்தால் குறட்டை குறையும் வாய்ப்பு இருக்கிறது."

"சுலபமாக சொல்லிவிட்டீர்கள் டாக்டர். எலிசபெத் டெய்லர் தனது ஏழாவது கணவரை விவாகரத்து செய்து விட்டது தெரியுமல்லவா?"

"24 மணி நேரமும் சிகரெட்டும் கையுமாக இருக்கிறார் மனுசன் என்று புகாரும் கூறியுள்ளார் என்றும் தெரியும்."

"அங்கேதான் இருக்கு விஷயம். பல கோடிகளுக்கு அதிபதியான எலிசபெத் தன்னை விவாகரத்து செய்தது பற்றி அலட்டிக் கொள்ளாமல் அந்த ஏழாவது கணவர் என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா டாக்டர்?"

"தெரியாதே!"

"எலிசபெத்தின் குறட்டைச் சத்தம் தாங்கவே முடியாது. இனித்தான் நிம்மதி என்றுவிட்டார்."

"அடடே.... எலிசபெத்தை தூங்கவிட்டு வேடிக்கை பார்ப்பதோடு நிறுத்திக் கொண்டாராமா அவர்."

"உங்களுக்கு குறும்பு. வாய்வழியாக குழந்தைகள் மூச்சுவிடுவதற்கும் சதை வளர்ச்சியால் அடைப்பு ஏற்படுவதுதான் காரணமா டாக்டர்?"

"அப்படித்தான் என்று பரிசோதிக்காமல் சொல்லிவிட முடியாது. ஜலதோசத்தால் மூக்கில் தொடர்ந்து அடைப்பு இருந்தாலும் குழந்தைகள் வாய்வழியாக மூச்சுவிடக்கூடும்."

"எழுதிக்கொண்டிருக்கும்போது திடீரென்று கை சுளுக்குவது ஏன் டாக்டர்?"

"அதனை எழுத்தாளர் சுளுக்கு (ரைற்றர்ஸ் கிராம்ப்) என்று கூறுகிறோம். எழுதும் துறையில் இருப்பவர்களுக்கு மட்டுமல்ல, கைகளை அதிகமாகப் பயன்படுத்து வோருக்கும் அப்படி நேரலாம். உள்ளங் கைகளில் உள்ள தசை திடீரென்று சுளுக்கிக் கொள்ளும். இதைப் போக்குவது சுலபம். ஓய்வு கொடுத்தாலே போதும்."

"டாக்டர் ஹெர்னியா நோய் ஆபத்தானதா?"

"குடலிறக்க நோய்தான் ஹெர்னியா என்று அழைக்கப்படுகிறது. அதிக சுமை தூக்குவது, உடலில் சத்துக் குறைவு என்பவற்றால் ஹெர்னியா வரலாம். பெண்களை விட ஆண்களையே அதிகம் தாக்கும்."

"பெண் என்றால் ஹெர்னியாவும் இரங்குமோ?"

"இல்லை சில சமயத்தில் தாக்கிவிடும். பெண்களை அதிகமாக பேறு காலத்தில் தாக்கும். எனினும் ஹெர்னியா ஆபத்தான நோயல்ல."

"ஹெர்னியாவின் அறிகுறிகள் என்ன டாக்டர்?"

"அடிவயிறு தொடை சேரும் பகுதியில் 'சுளீர்' என்று எப்போதாவது வலி வரும். அந்தப்பகுதியில் லேசான வீக்கமும் காணப்படும். இது தொட்டால் உள் குழியும். மெது மெதுவென இருக்கும். மூச்சுத் திணறல், தண்ணீர் குடிக்க முடியாத நிலை, சாப்பிடுவதில் எரிச்சல், சாப்பிட்டால் வயிற்றின் மேல் பகுதியில் கடுகடுப்பு போன்றவை அதன் அறிகுறிகள்."

"ஓ.கே.டாக்டர். மறுபடி சந்திப்போம்."

# அமர்க்களமான சாது

## பணம் + பமீலா = அசுரபலம்

**சா**து என்று பட்டம் மட்டும்தான். ஆள் படு அமர்க்களமான ஆசாமி. அணிந்தால் விலை உயர்ந்த சருகைப்பட்டாடை. இரத்தினங்களால் இளைக்கப்பட்ட தங்க ஆபரணங்கள். வசிப்பது பளிங்கு மாளிகையில்.


அவரது பக்தர்களின் பட்டியலைப் புரட்டினால் மூத்த பக்தர்களில் ஒருவராக இருப்பவர் புரூணி சுல்தான் அட்னான் கசோகி. அவர்தான் உலகப் பணக்காரர்கள் வரிசையிலும் முதலிடத்தில் இருப்பவர். பட்டியலில் அடுத்த இடத்தில் இருப்பவர்கள் ஆயுத வியாபாரிகள், அரசியல் வாதிகள், தள தள அழகிகள்.

பிரிட்டன் அரசியல் வாதிகளையே கலக்கிய அழகி பமீலா போட்சும் அவரது பக்தைதான். புரூணி சுல்தானுக்கு பமீலாவை சில மாதங்களுக்கு கொடுத்தருளியவரும் அவர்தான். (இது தொடர்பாக முரசில் ஏற்கனவே ஒரு தொடர்வந்திருந்தது.) அந்த அவர் யாரென்று ஊகித்திருப்பீர்கள் அல்லவா.

ஆம்–சந்திரசுவாமிதான் அந்த அமர்க்களமான ஆசாமி.

உலகில் பணம்–பாவைகள் இரண்டும் இருந்தால் கொடுக்க வேண்டிய இடங்களில் கொடுத்து சாதிக்கவேண்டியவற்றை சாதிக்கலாம் என்பது சுவாமியின் நம்பிக்கை.

ஆயுத தளபாட வியாபாரங்களில் தரகராக நடுவில் நிற்பார். அரசியல்



பேரங்களிலும் மூக்கை நுழைப்பார்.

எல்லோரையும் வளைத்துப் போட்ட சந்திரசுவாமி ஒரு விடயத்தில் தோற்றுப் போனார். சக்தி மிக்க இந்தியப் பத்திரிகை உலகை அவரால் வளைத்துப்போட முடியவில்லை.

நம்நாட்டில் என்றால் சாதுக்களின் முன்னால் விழுந்து வணங்கும் பத்திரிகையாளர்களே அதிகம். சுலோகம் போட்டு இவர்களே விளம்பரமும் செய்வார்கள். இந்தியாவிலும் இருக்கிறார்கள்தான். குறைவு!

பத்திரிகைகள் பல தடவைகள் சுவாமி பற்றி அம்பலப்படுத்தியிருந்தன. மோசடி வழக்குகளும் தொடரப்பட்டன. நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பும். சுவாமி அதைத் தூக்கி கிழித்துப் போட்டுவிடுவார். புகுந்து குண்டுக் கட்டாக தூக்கிச் செல்ல யாருக்கும் துணிச்சல் இருக்காது.

காரணம் ஆட்சியில் இருப்பவர்கள் ஆசாமிக்கு வேண்டியவர்கள்.

இந்தியப் பிரதமராக சந்திரசேகர் இருந்த போது சுவாமிமீது ஒரு ஊழல் குற்றச்சாட்டு பாய்ந்தது. கைது செய்ய நடவடிக்கை எடுத்த போது சந்திரசேகர் தலையிட்டார். சுவாமி தப்பிக்கொண்டார்.

இப்போது மற்றுமொரு குற்றச்சாட்டு. பம்பாயில் நடைபெற்ற குண்டுவெடிப்பில் சுவாமிக்கும் சம்பந்தம் இருப்பதாக சந்தேகம்.

கைது செய்து விசாரிக்க உத்தரவிட்டார் இந்திய உள்துறை அமைச்சர் ராஜேஸ் பைலட்.

பிரதமர் நரசிம்மராவ் தலையிட்டார். ராஜேஸ் பைலட்டின் உள்துறை அமைச்சர் பதவி காலி. சுவாமி தாடியைத் தடவிக் கொண்டு புன்னகைக்கிறார்.

கடவுளுக்கே வரம் கொடுக்கும் சுவாமி என்று அவருக்கு ஒரு பெயர். ஆட்சியில் இருப்பவர்களைத்தான் கடவுள் என்று சொல்கிறாரோ தெரியவில்லை.

ஆன்மீகத்தின் பெயரால் புகுந்து விளையாடுகிறார் சாமி. பணமும்–பமீலாக்களும் அவர் வசம். அது போதும். அனைவருமே அவர்முன் சரண்.

சுவாமி மோட்சத்துக்கு வழிகாட்டுகிறாரோ இல்லையோ, மோசடிகளுக்கு வழிகாட்டுகிறார்.


# அல்சர்



**நீ**ங்கள் விடும் மூச்சுக்காற்று இனி நிறைய வழிகளில் உங்களுக்கு உதவப் போகிறது. அல்சர் இருக்கிறதா...? நரம்புகள் பாதிக்கப்பட்டு உள்ளதா....? இப்படி பல வகை நோய்களை மூச்சுக் காற்றுக் காட்டிக் கொடுக்கப் போகிறது. அதற்கேற்ற வகையில் புதுக் கண்டுபிடிப்புக்கள் உருவாக்கப் பட்டுள்ளன.

நோய்களைக் கண்டுபிடிப்பதோடு மட்டுமல்ல... அந்த நோய் எந்த அளவில் உள்ளது; ஒப்பரேஷன் தேவையா? எவ்வளவு நாட்கள் ஆஸ்பத்திரியில் தங்கியிருக்க வேண்டியிருக்கும்; போன்றவைகளைக் கூட அந்தக் கண்டுபிடிப்பு துல்லியமாக கூறிவிடுகிறதாம்.

www.padippakam.com



## தகவல் பெட்டி

உலகில் உள்ள சிறுவர்களுக்கான மருத்துவமனையில் மிகச்சிறந்த தொன்றான 'TORRONTO SICK CHILDREN HOSPITAL' இல் அதிசய சத்திர சிகிச்சையொன்று வெற்றிகண்டது.

பிலிப்பைன்ஸ் நாட்டின் கிராமமொன்றில் பிறந்த சிறுவன் 'ஜாவெர் டெல்லா பெனா'விற்கு நெற்றியில் பெரிய சதைக்கட்டி வளர்ந்திருந்தது.

3 வயது நிரம்பிய பெனா உடனடியாக சிறுவர்களுக்கான சர்வதேச நிறுவனமொன்றின் உதவியுடன்



# தப்பியது அதிசயம்

கனடாவிலுள்ள ரொறொன்டோவிற்கு வந்து சேர்ந்தான்.

டாக்டர் ஹறோல்ட் ஹொஃவ்மான் 5 மணிநேர சத்திரசிகிச்சையின் பின் மூளையுடன் தொடர்புடைய அந்த சதைக்கட்டியை வெட்டியெடுத்தார்.

பெனா உயிர்தப்பமாட்டான் என்றே பலரும் நினைத்தனர். டாக்டர் மட்டும் நம்பிக்கையோடிருந்தார்.

"தனது நம்பிக்கையும் முயற்சியும் வீண்போகவில்லை" என்கின்றார் டாக்டர். இந்த சத்திரசிகிச்சைக்குப் பின்னர் கனடா மருத்துவமனையின் புகழும் மேலும் உயர்ந்துவிட்டது. டாக்டருக்கு நிறையப் பாராட்டுக்கள் குவிந்துள்ளன.

"பிராத்தனை பலித்தது. கடவுள் கண்திறந்துள்ளார்" என்கின்றார் தந்தை ரெயோடோறோ.

எப்படியோ சிறுவன் பெனா மகிழ்ச்சியுடன் சகாக்களுடன் துள்ளியாடுகின்றான். மருத்துவ விஞ்ஞான சாதனை.

# புதிது-புதிது கோணம் புதிது

இரண்டு நண்பர்கள் ஒருவர் டாலி. பயங்கரமான மீசைக்காரர். இன்னொருவர் ஹால்ஸ்மன். வித்தியாசமாக படம் எடுப்பவர்.

டாலியின் மீசையை பல கோணங்களில் எடுத்துக்காட்டும் ஆசை வந்துவிட்டது ஹால்ஸ்மன்னுக்கு. இறுதியாக இப்படி ஒரு வித்தியாசமான படத்தை சுட்டுத் தந்துவிட்டார் ஹால்ஸ்மன். படத்தை எந்தக் கோணத்தில், எப்படியான தந்திரம் செய்து இப்படியாக்கினீர்கள் ஹால்ஸ்மன்? என்று கேட்டால் மனிதர் பிடியே கொடுக்கிறார் இல்லை. பல கோணங்களில் படப்பிடிப்பும், நிறையத் தந்திரங்களும் தேவைப்பட்டன என்று மட்டும் சொல்கிறார். அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற புகைப்படப் போட்டியில் முதல் பாிசு பெற்ற புகைப்படம் இது.

போஸ் கொடுத்திருக்கும் 'டாலி'யை இனிமேல் மீசையோடு பார்க்கவே முடியாது. சுத்தமாக வெட்டிவிடுமாறு மனைவி கண்டிப்பான உத்தரவாம். கத்தரித்துவிட்டார் 'டாலி'. பின்னே என்ன, இவருக்கு சாதனை, மனைவிக்குத்தானே தக்க சமயத்தில் வேதனை.




# இந்தப் பலம் போதுமா?

உலகில் வலுவான மனிதன் யார்?

அவுஸ்திரேலியாவின் தலைநகரான சிட்னியில் போட்டி நடைபெற்றது. வென்றவர் டேவிட் ஹக்ஸ்வே. வயது 34. சாதாரண வெற்றியல்ல. இராட்சத ஜெட் விமானத்தை பட்டியால் தன் உடலில் பிணைத்து இழுத்து நகர்த்திவிட்டார். இந்த ஜெட் விமானத்தின் நீளம் 75 அடி. தொடர்ந்து பெற்றுவந்த பயிற்சியும், முன்னனுபவமாக அமைந்த சாதனைகளும் டேவிட்டுக்கு கைகொடுத்திருக்கின்றன.

டேவிட் முன்னர் செய்த சாதனைகளில் ஒன்று, சிட்னி துறைமுக நீர்ப்பரப்பில் 315 தொன் எடையுடைய பாதையை (FERRY) இழுத்துக் காட்டியது. இந்தப்பலம் போதுமா, இன்னும் கொஞ்சம் வேணுமா? போதும்.





# கோடையிலும் குளு-குளு

கோடைகாலத்தில் சிலநாட்களை கோடையின் நாய் நாட்கள் என்று வர்ணிப்பர். கொளுத்தி எரிக்கும். அப்போது தெருவில் நடக்கவே வெறுப்பாக இருக்கும். அல்பமா நாட்டைச் சேர்ந்த இளம் விஞ்ஞானிகளான டொஜி மற்றும் ஸ்ரிப்னிங் இருவருக்கும் வெறுப்பேயில்லை. கோடை வெப்பத்தில் அவர்களுக்கு மட்டும் குளு- குளு ஜாலி. ஊர்சுற்றுகிறார்கள். காரிலேயே நீர் நனைக்க, இயற்கையான தென்றல் மேலேவந்து தழுவ... குளு-குளு... ஜிலு..ஜிலு. காரை வடிவமைத்ததும் அவர்கள்தான்.

# நண்டுப் பிரியர்

பெற்ற குழந்தையைக் கவனிக்கும் பக்குவத்தோடு புட்டிப்பால் ஊட்டுகிறார் பாருங்கள் பராமரிப்பாளர். புட்டிப்பாலை குடிக்கும் குரங்கார் பிறந்து சில மணிநேரங்களில் இந்தப்படம் எடுக்கப்பட்டது. இவர் ஒரு அபூர்வ குரங்கார். 'மகாகுயெஸ்' இனத்தைச் சேர்ந்தவை. (மனிதர்களைவிட குரங்குகளுக்குள் பல இனங்களாக்கும்). ஏனைய குரங்குகளில் இல்லாத ஒரு விசேஷம் இதனிடம் இருக்கிறது. இது விரும்பி உண்பது "நண்டு" மட்டுமே. சீனாவில் உள்ள மிருகக்காட்சிச் சாலையில் எடுக்கப்பட்ட படம் இது.


படிப்பகம்

www.padippakam.com

# சினிவிசிட்




## தெ...

'நா...

நடிகர் தில... நடிக்கப் போக... சிவாஜி நட... பி.யு.சின்னப்பா... செய்கிறார். த...

## பிளாஸ்ரிக் சிகிச்சை சரத்துக்கு?

சரத்குமார் தனது முகத்தை பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை செய்து கொண்டு நடிக்கப்போவதாக வெளிவந்த செய்தி பொய். அது ஒரு விளம்பர உத்தியாம். பிரசுரமாகியிருக்கிறது பாருங்கள் சரத்குமாரின் படம். அது கம்யூட்டர் மூலம் வரையப்பட்டது. கம்யூட்டர் மூலம் வரையப்பட்ட படத்தை வைத்து சரத் மேக்கப் போட்டு நடிப்பதுதான் உண்மை. அவ்வாறு நடிக்கப்போகும் படம் அரவிந்தன். சரத்குமாருக்கு இரண்டு விதமான கெட்-அப். பிளாஸ்ரிக் சர்ஜரி செய்து கொண்டால் மறுபடியும் ஒரு தடவை பிளாஸ்ரிக் சிகிச்சை செய்ய வேண்டும். நெற்றியில் ஒரு தழும்பு இருப்பதுபோல அரவிந்தன் படத்தில் ஒரு காட்சி வருகிறதாம். அந்தத் தழும்பை உருவாக்கவே பிளாஸ்ரிக் சர்ஜரி என்கிறார்கள். அதற்கெல்லாம் தத்ரூபமான மேக்-அப் சாதனங்கள் வந்து விட்டன.

## பிரபுதேவாவுக்கு கல்யாணம்

பிரபுதேவா பற்றி சமீபத்தில் வெளியான செய்தி கோடம்பாக்கம் சினிமா வட்டாரத்தையே ஒரு கலக்கு கலக்கிவிட்டது.

பிரபுதேவா நடன நடிகை ஒருவரை இரகசியத் திருமணம் செய்து கொண்டார் என்பதுதான் செய்தி.

பிரபுதேவா ஹீரோவாக முன்னரே தமது நடனக்குழுவில் இருந்த 'ரம்லத்' என்னும் அழகியைக் காதலித்து வந்தார். இந்த விஷயம் பிரபுதேவாவின் அப்பா சுந்தரத்தின் காதுக்குப் போனது. ரம்லத்தை தனது நடனக்குழுவில் இருந்து நீக்கிவிட்டார் சுந்தரம். ஆனாலும் என்ன, அப்பாவுக்குத் தெரியாமல் காதலை ஊதி ஊதி வளர்த்தாராம் பிரபுதேவா. சமீபத்தில் பெங்களூரில் சில நண்பர்கள் முன்னிலையில் ரம்லத்தை திருமணம் செய்து கொண்டாராம் பிரபுதேவா.

இதனை மறுத்திருக்கிறது பிரபுதேவா வட்டாராம். தனது பாட்டியைப் பார்க்கவே பிரபுதேவா பெங்களூர் சென்றிருந்தார். திருமணம் என்பதெல்லாம் சும்மா வதந்தி என்கிறார்கள்.

எப்படியோ, திருமண வதந்திகளுக்கு திரையுலகில் பஞ்சமேயில்லை.

## மன்னன் அவுட்

'நாடோடி மன்னன்' படத்தில் சரத்குமார் கஷ்டப்பட்டு நடித்தும் கதை சொல்லப்பட்ட விதத்தால் படம் படு தோல்வி கண்டிருக்கிறது. சென்னையில் மூன்று தியேட்டர்களில் இரண்டில் பகல் காட்சியாக மட்டுமே ஓடிக் கொண்டிருக்கிறது. 25 நாட்களுக்குள் பெரிய திரையரங்குகளில் இருந்து படம் தூக்கப்பட்டு விட்டது.

தற்போது வெளியாகியுள்ள படங்கள்: மௌனயுத்தம் (அரவிந்தசாமி-நக்மா)
சன்னதிப்பூக்கள் (விக்னேஷ்-கீர்த்தனா)
மண்ணுக்கேத்த மரியாதை (விக்னேஷ்-சங்கவி)

## வினிதா மறுப்பு

மூன்று இலட்சம் செலவழித்து வினிதா கட்டியவீடு பார்க்க இலட்சணமாக இருக்கிறதாம். பலர் வாங்க முன்வந்தார்களாம். முடியவே முடியாது. விற்க முடியாது என்று மறுத்துவிட்டாராம் வினிதா.

## மம்தாவும்–ஹிட்லரும்

மம்தா குல்கர்னியை மிகவும் செக்ஸியான நடிகை என்று பம்பாய் பத்திரிகை ஒன்று தேர்ந்தெடுத்துள்ளது. மம்தாவுக்கு அதனால் மகிழ்ச்சியில்லை. பொருமுகிறார். என்னைவிட கவர்ச்சியாக போஸ் கொடுக்கும் நடிகைகளை மட்டும் இவர்களின் கண்களுக்குத் தெரியவில்லையா? என்று பொருமியிருக்கிறார்.

இன்னொரு விஷயம், மம்தா பிறந்தது ஏப்ரல் 20ம் திகதி. ஹிட்லர் பிறந்த திகதியும் 20ம் திகதிதானாம். ஆனாலும் நான் ஹிட்லர் போன்றவள் அல்ல என்று ஜோக்கடிக்கிறார் மம்தா.




## சரளாவின் இரகசியம்

நகைச்சுவை நடிகை கோவை சரளா இரகசியத் திருமணம் செய்து விட்டார். இலங்கைத் தமிழர் ஒருவர் தான் மணமகன். அவர் யார் என்ற விபரத்தை படு இரகசியமாக வைத்திருக்கிறாராம் சரளா.

## ஒவ்ஸீஜஸ்

போதை மருந்துப் பழக்கம் காரணமாக ஐஸ்வர்யா ஒவ்வியாகி விட்டார். இளைத்துப் போன ஐஸ்வர்யாவைக் கணவர் வைத்தியசாலையில் அனுமதித்து கரிசனையோடு கவனித்தாராம். போட்டோ எடுக்க முயன்றாராம் ஒரு சென்னை நிருபர் ஐஸ்வர்யாவை. ஐஸ்வர்யா முறைத்து விட்டார். நிருபர் வாபஸ்.

## டும். டும்

பேத்தி வைஷ்ணவிக்கு மாப்பிள்ளை பார்த்துக் கொண்டிருக்கிறார் சௌகார் ஜானகி. வைஷ்ணவியும் பாட்டியைப் போலவே அழுமூஞ்சிப் பாத்திரங்களில் நடித்ததுதான் அவரது தோல்விக்குக் காரணம்.

## அழகி...

'மிஸ் வேர்ல்ட்' பட்டம் பறிபோனாலும்... பயன்படுத்தப் போகிறார் மணிரத்னம். சென்... கையெழுத்துப் போட்டுவிட்டுப் போய் இரு... பெயரிட்டுள்ளார்கள். கதாநாயகன் யார் என்... சிரஞ்சீவி, மம்முட்டி, மோகன்லால், அரவிந்தசா...

## ரஜினி ரசிகர்

இந்திப்பட உலகில் ரஜினிகாந்தைப் பின்பற்றி நடிப்பதாகப் பகிரங்கமாக் கூறி வருபவர் கோவிந்தா. நம்நாட்டு சுயாதீனத் தொலைக் காட்சியில் ஒளிபரப்பான 'கட்காடி' படத்தில் கோவிந்தா இடைக்கிடையே தமிழில் பேசி, ரஜினி ஸ்டைல் காட்டி நடித்ததை நம்நாட்டு ரசிகர்கள் கண்டிருக்கலாம்.




## சங்கருக்கு வாய்ப்பு

டென்னிஸ் உலகில் கொடிகட்டிப் பறந்தவர்கள் அமிர்தராஜ் சகோதரர்கள். ஹொலிவூட்டில் 'டபுள் இம்பாக்ட்' போன்ற வெற்றிப் படங்களைத் தயாரித்தவர்கள். இந்தியாவைச் சேர்ந்த தமிழர்கள் அமிர்தராஜ் சதோதரர்களின் பண பலத்திற்கு ஹொலிவூட் தயாரிப்புத்தான் ஈடுகொடுக்கமுடியும். ஆனால், அமிர்தராஜ் சதோதரர்களின் பார்வை இயக்குநர் சங்கர் பக்கம் திரும்பியுள்ளது. அவரை வைத்து ஒரு படம் இயக்குவிக்கப் போகிறார்கள். 'இந்தியன்' படத்தைச் சுத்தமாக முடித்துக் கொடுத்துவிட்டு அமிர்தராஜ் சதோதரர்களின் வேண்டுகோளைக் கவனிக்கப்போகிறார் சங்கர். 'காதலன்', 'ஜென்டில்மேன்' போன்ற வெற்றிப் படங்களை இயக்கியவர் சங்கர்.

## ஷில்பாமீது கோபம்

ஷில்பா ஷெட்டியின் பெயரைக் கேட்டாலே போதும் அக்ஷய் குமாருக்கு கோபம் பீய்த்துக் கொண்டு வருகிறது.

பம்பாய் நடன நிகழ்ச்சி ஒன்றில் ரசிகர்கள் முன் ஒரு பாட்டுக்கு ஷில்பாவும், அக்ஷய் குமாரும் நடனமாடினார்களாம். அக்ஷய் குமாரின் நடன அசைவுகள் செக்ஸியாக இருந்தன; அதனால்தான் தன்னால் ஈடுகொடுத்து ஆடமுடியவில்லை என்று ஷில்பா சொன்னாராம். அதனால் கொதித்துப் போயிருக்கிறார் அக்ஷய்.

## அங்கு வேகவில்லை

தமிழில் கவனிக்கப்படாமல் இந்திக்குப் போனவர் மதுபாலா. இப்போது மீண்டும் தமிழுக்குத் திரும்பியிருக்கிறார். சீமான் இயக்கத்தில் 'பாஞ்சாலங்குறிச்சி' என்னும் படத்தில் நடிக்கிறார்.

"மதுபாலாவின் 'சாம்பார்' இந்தியில் வேகவில்லை அதுதான் தமிழுக்கு திரும்பிவிட்டார்" என்று தமிழக பத்திரிகை ஒன்று கிண்டல் அடித்திருக்கிறது.



சரத்குமார்
படம் :அரவிந்தன்



படிப்பகம்

www.padippakam.com

## லைக்காட்சியில் சிவாஜி
## ரும் ஒரு ரசிகன்' ஆரம்பம்

செவாலியே சிவாஜிகணேசன் முதன் முதலில் தொலைக்காட்சித் தொடர் ஒன்றில் ர்.

ம் தொலைக்காட்சித் தொடரின் பெயர் 'நானும் ஒரு ரசிகன்' இத் தொடர் மூலம் தல் பிரபுதேவா வரை பல்வேறு நடிகர் நடிகைகள் குறித்து சிவாஜி விமர்சனம் அனுபவங்கள் பற்றியும் விளக்குவார். 'சிவாஜி பிலிம்ஸ்' சார்பில் இந்த தொலைக்காட்சி தொடர் தயாரிக்கப்படுகிறது. சிவாஜியின் மூத்தமகன் ராம்குமார் தயாரிக்கிறார். அக்டோபர் மாதம் படப்பிடிப்பு ஆரம்பம். எந்த தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்வது என்பதை இன்னமும் முடிவு செய்யவில்லை. பொங்கல் தினத்தில் இருந்து ஒளிபரப்ப திட்டமிட்டுள்ளனர்.

'நானும் ஒரு ரசிகன்' படப்பிடிப்பு முடிந்ததும் மற்றுமொரு தொலைக்காட்சித் தொடரை சிவாஜி பிலிம்ஸ் தயாரிக்கப் போகிறது.

ஆங்கிலத்தில் துப்பறியும் தொலைக்காட்சி தொடர்கள் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாவதை பார்த்திருப்பீர்கள். அதே பாணியில் துப்பறியும் அதிகாரியாக பலவித கெட்அப்பில் தோன்றி அசத்தப்போகிறார் செவாலியே. 'மேஜர் பரமேஷ்வர்' அல்லது பரமேஷ்வர் ஐ.பி.எஸ் என்று பெயர் சூட்டப் போகிறார்கள். இத் தகவல்களை சென்னையில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார் ராம்குமார்.

## ஒக்டோபரில் முடிவு
## ரஜினிகாந்த் அறிவிப்பு

'முத்து' படப்பிடிப்பை முடித்துவிட்டு இமாலயாவுக்கு பறந்துவிட்டார் ரஜினி. வழக்கம்போல ஓய்வெடுக்கும் பயணம். 'திரும்பி வந்தவுடன் தனது ரசிகர்களுடன் பேச வேண்டிய விஷயங்கள் இருக்கின்றன பேசுவேன்.' என்று வழக்கம்போல புதிர் போட்டுவிட்டுப் போய்விட்டார் ரஜினி.

என்ன பேசப்போகிறார் என்று ஆளாளுக்கு வியாக்கியானம் செய்துகொண்டிருக்கிறார்கள். அக்டோபர் மத்தியில்தான் தமிழ்நாட்டுக்கு திரும்புகிறார் ரஜினி.

இதற்கிடையில் முன்னாள் அமைச்சர் வீரப்பனும் அக்டோபர் மத்தியில் நல்ல முடிவு சொல்கிறேன் என்று தனது ஆதரவாளர்களுக்கு சொல்லியிருக்கிறார்.

வீரப்பன் சொன்னதையும், ரஜினி சொன்னதையும் முடிச்சுப் போட்டு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் பத்திரிகையாளர்கள்.

இதற்கிடையே ரஜினி ரசிகர்கள் வீரப்பனின் பிறந்தநாளுக்கு திரண்டுவந்து ஜெயலலிதாவுக்கு எதிராக கோஷம் போட்டுவிட்டுப் போய்விட்டார்கள்.

"பாட்ஷா படை போதுமா இன்னும் கொஞ்சம் வேணுமா" என்று கோஷம் போட்டிருக்கிறார்கள்.

தற்போதைக்கு தமிழக அரசியல் அக்டோபர் மாத நடுப்பகுதியை 'திரில்' உடன் போட்டு கவனித்துக்கொண்டிருக்கிறது. ரஜினி என்ன செய்யப் போகிறாரோ?

## பொங்கலுக்கு 'சீதனம்'

நடிகராகி பிஸியாகிவிட்டாலும் படங்களை இயக்குவதிலும் பிஸியாக இருக்கிறார் ஆர்.சுந்தரராஜன். சத்யராஜ் நடிக்க குங்குமப் பொட்டுக் கவுண்டர், பிரபு நடிக்க 'சீதனம்' என்று இரு படங்களை இயக்கிவருகிறார்.

'சீதனம்' படப்பிடிப்பு ஆரம்பமாகி முதல் கட்டம் ஓவர். பிரபுவுக்கு இரு ஜோடிகள். ஒருவர் ரஞ்சிதா. இன்னொருவர் சங்கீதா.

கதை-திரைக்கதை வசனம் இயக்கத்தோடு பாடல்களையும் எழுதியிருக்கிறார் ஆர்.சுந்தரராஜன். இசை-தேவா.

பொங்கல் திருநாளுக்கு திரையிடத் திட்டமிட்டுள்ளார்கள்.


பிரபு-சங்கீதா
படம் : சீதனம்

## கமல் மேக்-அப்

ஹொலிவூட்டுக்குப் போய் மேக்-அப் கற்றுவந்தவர் கமல். அவர் இரு வேடங்களில் நடிக்கும் 'இந்தியன்' படத்தில் தனது மேக்-அப் விடயத்தை தானே கவனிக்கிறார் கமல். முகத்தில் சுருக்கங்கள் விழுந்திருப்பது போலவும் மேக்-அப் செய்து நடிக்கிறார். ஒவ்வொரு மேக்-அப் போட்டு முடிக்கவும் மூன்று மணிநேரம் செல்கிறதாம்.

## ஷேப் ஆகும் தேவி

நடிகை ஸ்ரீதேவி மூக்கை பிளாஸ்டிக் சர்ஜரி செய்து கொண்ட பின்னரே இந்தியில் நம்பர் வன் இடத்தைப் பிடித்தார். இப்போது மார்க்கெட் டல்லாகிவிட்டது. அதனால் உடம்பை குறைக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறார். ஷாருக்கானோடு ஜோடியாக நடிக்கும் இந்திப்படத்தில் ஸ்ரீதேவியின் முயற்சியின் பலன் தெரியும்.

## எகிப்தில் சத்யராஜ்
## புதிய படம் 'அடிமை'

சத்யராஜ் நடிக்கும் புதிய படம் ஒன்றை ஆர்.கே.செல்வமணி இயக்குகிறார். 'அடிமை' என்று பெயர் சூட்டியுள்ளார்கள். செப்டம்பர் 11ம் திகதி படப்பிடிப்பு ஆரம்பித்து வைக்கப் பட்டது.

சத்யராஜின் ஜோடியாக முன்னணி நடிகை ஒருவர் நடிக்கவிருக்கிறார். மன்சூர் அலிகான், சரத்பாபு ஆகியோரும் நடிக்கவுள்ளனர். மூன்று கோடி ரூபாய் செலவில் தயாரித்து முடிக்க திட்டமிட்டுள்ளார்கள். அரவிந்தசாமி-ஸ்ரீதேவி நடிக்கும் 'தேவராகம்' படத்தை தயாரிக்கும் விஸ்வா பிலிம்ஸ் நிறுவனம்தான் இந்தப் படத்தையும் தயாரிக்கிறது.

எகிப்தில் உள்ள நைல்நதி, சூயஸ்கால்வாய், உலகப் புகழ் பெற்ற பிரமிட்டுகள், சஹாரா பாலைவனம் போன்ற பகுதிகளில் படப் பிடிப்புக்களை நடத்தவுள்ளனர்.


ஷில்பா ஷெட்டி
படம் : மிஸ்டர் ரோமியோ

## மினி சினி

* 'மாவீரன்' 'வள்ளி' போன்ற படங்களைத் தயாரித்துள்ள ரஜினியின் சொந்த நிறுவனமான 'ரஜினி ஆர்ட்ஸ்' சார்பில் 'ஏழை', 'மும்மூர்த்திகள்' ஆகிய தலைப்புக்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.
* பிரபு-மோகன்லால் நடிக்கும் மலையாளப்படமான 'காலாபாணி'யில் (தமிழில் 'சிறைச்சாலை') பத்திரிகையாளர் வேடமொன்றில் கார்த்திக் நடிப்பதாக இருந்தது. கார்த்திக் பிஸியாக இருப்பதால் பத்திரிகையாளர் வேடத்தில் 'ஆவாரம்பூ' வினீத் நடித்து வருகிறார்.
* 'திருமூர்த்தி' படத்திற்குப்பின் தமிழில் வாய்ப்புக்களின்றி இருக்கும் செண்பகா, இரண்டு கன்னடப்படங்களிலும், முகேஷுக்கு ஜோடியாக ஒரு மலையாளப் படத்திலும் நடித்து வருகிறார்.
* 'கூலி' படத்தைத் தயாரித்துள்ள 'செவன்த் சனல்' நாராயணன் விரைவில் விஜய் கதாநாயகனாக நடிக்கும் படமொன்றைத் தயாரிக்கவிருக்கிறார். இப்படத்தை விஜய்யின் தந்தை எஸ்.ஏ.சந்திரசேகர் இயக்குவார்.
* பிரபல இந்தி நடிகை பூஜாபட் நடித்துள்ள படமொன்று தமிழில் 'காதல் வாழ்க- 1995' என்ற பெயரில் மொழிமாற்றப்படுகிறது. இந்தப்படத்தில் சாய்ராம் என்ற புதுமுகம் கதாநாயகனாக நடித்திருக்கிறார்.
* ராஜ்கிரன் கதாநாயகனாக நடிக்கும் புதிய படமொன்றை ஆனந்தி ஃபிலிம்ஸ் நிறுவனம் தயாரிக்கவுள்ளது. இப்படத்தை ஆர்.வி உதயகுமார் இயக்கவுள்ளார். 'சின்னக்கவுண்டர்' படத்திற்குப் பின் ஆர்.வி.உதயகுமார் ஆனந்தி ஃபிலிம்ஸ் இணையும் படமிது.
* 'அசுரன்' படத்தில் மொட்டைத்தலையோடு அறிமுகமான வி.கே.ராமசாமியின் சகோதரர் மகன் கிருஷ்ணராஜ் தற்போது விஜயகாந்த் நடிக்கும் 'தாயகம்' படத்தில் வில்லனாக நடித்து வருகிறார்.
* அண்மையில் யுவராணி நடித்துள்ள 'அலிபாபாவும் அற்புத தீபமும்' என்ற தெலுங்குப்படமொன்று வெற்றிகரமாக ஓடுவதைத் தொடர்ந்து 'அக்கும்பக்கும்' என்ற புதிய தெலுங்குப் படமொன்றில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.
* 'கோலங்கள்' படத்தைத் தொடர்ந்து 'புதுநிலவு', 'பரிவட்டம்' ஆகிய படங்களில் நடித்துவரும் ஜெயராம் விரைவில் மணிவண்ணன் இயக்கும் படமொன்றில் நடிக்கவிருக்கிறார்.
* 'முதல்பாடல்' என்ற படத்தின் மூலம் அறிமுகமான மது, நீண்ட இடைவெளிக்குப் பின்னர் 'சின்னவங்க', 'கலைக்கல்லூரி' ஆகிய படங்களில் கதாநாயகனாக நடித்துவருகிறார்.

## ரு 'ஆனந்தம்'

யாராயின் பிரபலம் கூடியிருக்கிறது. பிரபலத்தைப் வந்து மணிரத்னத்தின் புதிய பட ஒப்பந்தத்தில் ஐஸ்வர்யாராய். படத்திற்கு 'ஆனந்தம்' என்று டும் இன்னமும் முடிவாகவில்லை. அமிதாப்பச்சன், யோரில் ஒருவருக்கு சான்ஸ் அடிக்கலாம்.

## காதோடு சொல்லுகிறோம்

ரஞ்சிதமான நடிகை சமீபத்தில் அமெரிக்கா போய் வந்திருக்கிறார். கேட்டால் படப்பிடிப்புக்கு போனேன் என்கிறார். விசாரித்துப் பார்த்ததில் அமெரிக்காவில் எந்தவொரு படப்பிடிப்பும் நடக்கவில்லை என்று தெரியவந்துவிட்டது. அப்படியானால் ஏன் போனார்? கலைச் சேவையோ?

தமிழில் அறிமுகமாகி மலையாளத்தில் விருதுபெற்ற நடிகை அவர். மூன்றெழுத்து நடிகை. சென்னையில் உள்ள அவரது வீட்டில் ஜெயமான மலையாள நடிகர் காணப்படுகிறாராம். இரவு படப்பிடிப்பு என்று மனைவியிடம் சொல்லிவிட்டு, நடிகை வீட்டுக்கு வந்துவிடுகிறாராம் நடிகர். நடிகையின் பெயர் 'ஷோ' வில் ஆரம்பிக்கிறது. கண்டுபிடித்துவிட்டீர்களா?

'சின்டியர்' படத்தில் நடித்துவரும் பூ நடிகை படப்பிடிப்பு முடிந்தவுடன் ஒரு ஓரமாக ஒதுங்கி இருந்து நாவல் படிக்கிறாராம். கூட நடிப்பவரோடு சிரித்துப் பேசினால் கூட கிசு-கிசு கிளப்பி விடுகிறார்கள். ஏன் வம்பு என்றுதான் ஒதுங்கியே இருக்கிறாராம்.

அழகியை நோக்கி பணத்தோடு அலைந்தார்கள். பெரிய பெரிய முதலைகள். இறுதியில் மணியானவர் பக்கம் அதிஷ்டக் காற்று அடித்திருக்கிறது. மணிக்கு ஆனந்தம். மற்றவர்களுக்கோ அசடு வழிகிறது.

புதிய நடிகைகள் சிலர் முன்னுக்கு வர துடிக்கும் துடிப்பு இயக்குநர்களையே சங்கடத்தில் மாட்டுகிறதாம். என் என்றால் எண்ணெய்யாக மாறி கையளவு உடையோடு வருகிறார்கள். 'சென்சாரின் கத்தரி அனுமதியாதம்மா' என்று இயக்குநர்கள் பதமாகச் சொல்லி வேகத்தடை போடுகிறார்களாம்.


பிரேம்-குஷ்பு
படம் : வர்றாரு சண்டியர்

## கதாசிரியர் கதாநாயகனாகிறார்

'என் தங்கச்சி படிச்சவ' 'நல்ல காலம் பொறந்தாச்சு' போன்ற படங்களுக்கு கதை எழுதியவர் ஆன்டனி. கதை மட்டும் எழுதிக் கொண்டிருந்தவருக்கு கதாநாயகனாகவும், இயக்குநராகவும் மாறும் ஆசை வந்துவிட்டது. களத்தில் இறங்கிவிட்டார். கதாநாயகியாக குஷ்பு நடிக்கிறார். 'சன்னாசி' என்று படத்திற்கு பெயரிட்டுள்ளனர். நாசர், வடிவேலு, காந்திமதி ஆகியோரும் நடிக்கின்றனர். இசை தேவா.

இப்போதெல்லாம் யாரோடும் ஜோடி சேரச் சம்மதித்து விடுகிறார் குஷ்பு. 'யார் ஹீரோ என்பதா முக்கியம், கதை எப்படி என்பதுதானே முக்கியம்' என்று சொல்லத் தொடங்கிவிட்டார்.


நெப்போலியன்
படம் :முஸ்தபா

## முகப்பில்

சிரஞ்சீவி
படம்— பிக்பாஸ்
பிரபு
படம்— மிஸ்டர் மெட்ராஸ்

www.padippakam.com

# அழகுக்கு என்ன குறை?

★ குளிக்கப் போகும் முன் தினமும் கால் பெருவிரலில் கடுகு எண்ணெயைத் தேய்த்துக் குளித்து வந்தால் முதுமையில் கண்ணில் வரும் 'காட்ராக்ட்' என்னும் நோய் வராது. அத்தோடு கண்ணாடி அணியவேண்டிய அவசியமும் வராது.

★ ஒரு மேசைக்கரண்டி தேன், முட்டை, மற்றும் ஒரு தேக்கரண்டி கிளிசரினைக் கலந்து தடிமனான தோல்களில் தேய்த்து வந்தால் உடல் மிருதுவாகவும், பளபளப்பாகவும் மாறும்.

★ முகம் பளபளப்பாக மாற வெள்ளரிக்காய், ரோஸ் வோட்டர் மற்றும் தேன் கலந்து தேய்த்து வந்தால் பலன் கிடைக்கும்.

★ ஏதாவது ஒரு விழாவுக்கு போகிறீர்களா? பிறரிடம் பேசும்போது வாயில் இருந்து கம...கம... வென மணம்வீச வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்களா? எலுமிச்சம் பழச்சாற்றுடன் உப்புக் கலந்து சிறிது வெந்நீர் கலந்து வாயை அலம்புங்கள்.

★ தோலில் வரும் நோய்களைத் தடுக்க, தினமும் குளிக்கும் தண்ணீரில் கொஞ்சம் உப்பு மற்றும் ஏழு அல்லது எட்டு துளி தோடம்பழச்சாறு கலந்து குளிக்க வேண்டும்.

★ தலைமுடி கொட்டுகிறதா? தேங்காய் எண்ணெயைக் கொஞ்சம் சூடுபடுத்தி தலையில் தேய்த்து அரை மணிநேரம் இருக்க வேண்டும். பிறகு குளிக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் தலைமுடி கொட்டாது; நன்கு வளரும்.

★ கண்ணில் கருவளையமா? நான்கு



தேக்கரண்டி பாலை நன்றாகக் காய்ச்சி ஒரு பருத்தித் துணியில் ஊற்றி அது குளிர்ந்ததும் அதைக் கண்ணின் மேல் வைத்திருக்க வேண்டும். படுக்கைக்குச் செல்லும்முன் தினமும் இப்படி 15 நிமிடம் செய்து வந்தால் பலன் கிடைக்கும்.

★ முகப்பருவை ஒழிக்கத் துடிக்கிறீர்களா? சந்தனப் பொடியையும் சில துளி எலுமிச்சம்பழச் சாற்றையும் கலந்து இரவு தூங்கச் செல்லும்முன் தேய்த்து வந்தால் முகப்பருவை ஒழித்துவிடலாம்.

★ வெள்ளரிக்காயைச் சாறாக்கி ஒரு தேக்கரண்டி எடுத்து, அதனுடன் ஒரு தேக்கரண்டி அளவு எலுமிச்சம் பழச்சாற்றையும் கலந்து தேயுங்கள் முகம் பளிச்சென புத்துணர்ச்சி பெறும்.

# வளர் கூந்தல்

1. கறிவேப்பிலைச் சட்னி செய்து அடிக்கடி சாப்பிடுங்கள். கறிவேப்பிலையில் உள்ள சத்து கூந்தல் வளரப்பயன்படுகிறது.

2. பெண்கள் தலைக்கு ஊற்றிக் கொள்ளும் போது, கடைசியாக வெந்நீரில் எலுமிச்சம் பழச்சாற்றைக் கலந்து கூந்தலை அலசினால் கூந்தல் பளபளப்பாக இருக்கும்.

3. தலையில் வியர்வை அதிகம் ஏற்பட்டால் அதனால் மிகுந்த அழுக்குப்படிய வாய்ப்புண்டு. அதற்கு இடமளித்தால் கூந்தல் வளர்ச்சியினைப் பெரிதும் பாதிக்கும்.

4. கூந்தலில் எண்ணெய்ப்பசை இல்லாது இருக்கக்கூடாது. எண்ணெய்ப்பசை அதிகமாகவும் இருக்கக் கூடாது.

5. ஒரு டம்ளரில் சூடான நீரை எடுத்துக் கொள்ள வேண்டும். அதில் இரு முட்டையின் வெள்ளைக் கருவினைக் கலந்து நன்றாகக் கலக்கித் தலையில் விட்டுக் குளித்தால் கேசம் மென்மையாகும்.

6. மருதோன்றி இலையைத் தேங்காய் எண்ணெயில் ஒன்று இரண்டாகத் தட்டிப் போட்டு, இலேசாகக் காய்ச்சி தலையில் தேய்த்து வந்தால் இளநரை மறைந்து விடும்.

7. சீரகம், வெங்காயம், வால்மிளகு, வெந்தயம் ஆகியவற்றைச் சமஅளவில் எடுத்துப் பொடி செய்து, தேங்காய் எண்ணெயில் கலந்து தலைக்குத் தடவிவந்தால் இளநரை மறைந்துவிடும்.

8. மிளகைக் கொஞ்சம் எடுத்து அரைத்து அதைப்பாலில் கலந்து தலையில் தேய்த்து வந்தால் பொடுகு குறைந்து விடும். கூந்தலும் ஆரோக்கிமாக இருக்கும்.

9. முட்டையின் வெள்ளைக்கருவுடன் எலுமிச்சம் பழச்சாற்றைக் கலந்து தலையில்



தேய்த்துகுளித்து வந்தால் பொடுகு மறைந்துவிடும்.

10. தலையில் பூச்சி வெட்டு ஏற்பட்டால், வெள்ளைப்பூண்டை உலர வைத்துப் பொடி செய்து கொள்ள வேண்டும். இந்தப் பொடியைத் தேனில் கலந்து பூச்சி வெட்டுப் பகுதியில் தேய்த்துவிட வேண்டும். இப்படி அடிக்கடி செய்துவந்தால் பூச்சி வெட்டு வந்த இடத்தில் மீண்டும் கூந்தல் வளரத் தொடங்கிவிடும்.

# என்ன செய்வது?

சீதனப்பிரச்சனை தொடர்பாக வாலி எழுதிய கவிதை ஒன்று.

"அப்பா-
தன்னிடம் இருந்த
இரண்டில் ஒன்றை விற்று...
அக்காளின் திருமணத்தை
முடித்தார்.

அம்மா
தன்னிடம் இருந்த
இரண்டில் ஒன்றை விற்று
இன்னொரு அக்காளின்
திருமணத்தை முடித்தாள்.

மூன்றாவது
மகளாகிய நான் மட்டும்
கல்யாணமாகாமல்
காலமெல்லாம்
கன்னியாக.

என்ன செய்வது?



என்
கல்யாணத்தை முன்னிட்டு
அப்பாவும் - அம்மாவும்
தங்களிடம் மீதமுள்ள
இன்னொன்றையும் விற்றால்
இறந்தே போவார்கள்.

அவர்கள் உயிர்வாழ
ஆளுக்கொரு சிறுநீரகமாவது
வேண்டாமா?"

சுய பரிசோதனை

# பண ஆசை பிடித்தவரா நீங்கள்?

பணம்-இதற்காக தானே எல்லாரும் உழைக்கின்றனர். 'இது இல்லாமல் உயிர் வாழ முடியாது... இன்னும் வேண்டும் இன்னும் வேண்டும்!' என்று பேராசை கொள்ள வைப்பது பணம் மட்டுமே! ஆனால், எல்லாரும் இதற்கு அடிமையாகி விட்டனர் என்று சொல்ல முடியாது!

நீங்கள் எப்படி? பணம் என்றால் அதிக ஆசை இல்லாதவரா? பேராசை பிடித்தவரா என்பதை அறியத்தான் இந்த சுயசோதனை.

வழக்கம் போல வரும் 'ஆம்'-'இல்லை' முறைதான்.

(1) என்னிடம் பணம் இல்லாத வேளைகளில், ஏற்கனவே வாங்கிய விலை அதிகமுள்ள ஆடைகளை அணிவது, என் உணர்வுகளுக்கு ஊக்கம் தரும்.

(2) என் வீட்டுச் சொத்தில் பங்கு கேட்டு என் அண்ணன் தம்பிகள் சண்டை போடும்போது, நான் ஒதுங்கிவிட மாட்டேன். என் பங்குக்காக போராடுவேன்.

(3) யாராவது பரிசுப் பொருட்கள் தந்தால், அதன் விலையை அறிந்து கொண்டபின்தான், திருப்தி கொள்வேன்.

(4) 'மொடலிங்' பண்ணுவதற்காக ஒரு பெண்ணுக்கு அதிக சம்பளம் தரப்படுகிறது. அப்படி இருக்கும்போது, பத்திரிகையில் படம் வருவதற்காக எப்படி போஸ் கொடுத்தாலும் தவறில்லை என்று நினைப்பேன்.

(5) பிரபலமான 'ரெடிமேட்' தயாரிப்பு ஆடைகளில், தயாரிப்பாளரின் சின்னம் இருக்கும். அந்தச் சின்னம் உதிர்ந்து விட்டாலோ, அழிந்து விட்டாலோ, அந்த ஆடையை அணிய விரும்பமாட்டேன்.

(6) பணக்காரராக இருந்தால் மட்டுமே நட்பு கொள்ள, மதிக்க விரும்புவேன். இல்லையெனில் ஒதுக்கி விடுவேன்.

(7) பணம் அதிகமாக தருவார்கள்; ஆனால், மனதிற்கு பிடிக்காத வேலை! இன்னொரு இடத்தில் சம்பளம் சாதாரணம் தான். ஆனால் வேலை திருப்திகரமானது... இதில் இரண்டாவதைத்தான் நான் தேர்ந்தெடுப்பேன்.

(8) தனது குழந்தைகளின் திருமணத்தை, பெரிய அளவில் பெற்றோர் நடத்த வேண்டும் என்று விரும்புகிற 'டைப்' நான்!

(9) ஆ... இவரா... எக்கச்சக்கமான 'டிப்ஸ்' தருவார் என ஓட்டல் ஊழியர்கள் கூறுவதை விரும்பும் 'டைப்' நான். அதற்காக 'டிப்ஸ்' அள்ளி விடுவேன்!

(10) நன்றாகப் பழகும் வரை பழகி விட்டு, பிரிந்தவுடன் காதலியை பற்றியோ, நண்பனைப் பற்றியோ ரகசியங்களை அம்பலப்படுத்துவது, பத்திரிகைக்கு முக்கிய ஆவணங்களை விற்பதை கெட்டிக்காரத்தனம் என்பேன்.

(11) கோடீஸ்வரர்களைப் பற்றிய கதை, அவர்கள் எப்படி கோடீஸ்வரர் ஆனார்கள் என்பதை விவரிக்கும் கட்டுரைகள், புத்தகங்களைப் படிப்பதில் ஆர்வம் அதிகம்!

(12) லொட்டரி சீட்டு என்றால்... உடனே பணம் எவ்வளவு இருந்தாலும் அவ்வளவுக்கும் வாங்கிவிடுவேன். கவலைப்பட மாட்டேன்.

**என்ன படித்து, முடித்து, எத்தனை 'ஆம்' சொல்லிக் கொண்டீர்கள்? நீங்கள் எப்படிப்பட்டவர் என்பதை பார்த்து விடலாமா? இதோ விடைகள் தயார்!**

## மதிப்பெண்

9 - 12 'ஆம்' (மேலே உள்ளவற்றில் 9 விடயங்கள் அல்லது அதற்கும் அதிகமான விடயங்களோடு உங்களுக்கு உடன்பாடு என்றால்...): சரியான கொழுத்த பூனை ஐயா நீர்! யாராவது 'கலகல'வென சில்லறையை குலுக்கினால் கூட உமது பார்வை, 'சடக்'கென திரும்பிப் பார்க்கும். யாரைப் பார்த்தாலும், இவர் நல்ல பணக்காரர் ஆயிற்றே என்ற நினைப்பு உடனே வரும். பணத்தைப் பார்த்தால் மூக்கு கூட வியர்க்கும். பணத்தை அதிக அளவில் சேர்க்க வேண்டும். தங்கமாக குவிக்க வேண்டும் என்று அலையாய் அலைவீர். அதற்காக உங்கள் உடம்பை, மனதை வருத்திக் கொள்ளாதீர். பணம் மட்டும் சந்தோஷத்தை கொடுத்து விடுமா? உடம்பும் உள்ளமும் நன்றாக இருந்தால் தானே எந்த மகிழ்ச்சியும்! இதை உணருங்கள் போதும்!



5 - 8 'ஆம்': பணம் சேர்க்க வேண்டும். அதற்காக தேவையைக் குறைத்துக் கொள்ளலாம். ரொட்டி கூட போதுமானது. பணத்தை அநாவசியமாக செலவு செய்யக்கூடாது என்று எண்ணுபவர் நீங்கள். வங்கி கணக்கில் கணிசமாக பணம் போட வேண்டும் என்ற உங்கள் எண்ணம் தவறில்லை. அதற்காக உடலை- மனதை குறுக்கிக் கொள்ள வேண்டுமா? உங்கள் முயற்சிக்கு நல்ல வளமான எதிர்காலம் உண்டு. அதற்காக தேவையைக் குறைத்துக் கொள்ளாதீர்கள்.

0 - 4 'ஆம்': உங்களிடம் கணிசமான பணம் உள்ளது. அவ்வப்போது பணம் வரும் போகும். இதில் மோகம் தேவையே இல்லை என்ற நினைப்பு உங்களுக்கு. உங்கள் தேவை குறைவானது. ஆடம்பரச் செலவு என்பதையே விரும்பாதவர். எந்த ஒரு முடிவும் மகிழ்ச்சியை பொறுத்துத்தான் என்ற திடமான எண்ணம் உள்ளவர்.

பணம் வருகிறது என்பதற்காக சந்தோஷத்தை விட்டுக் கொடுக்க மாட்டீர்கள். பணம் குறைவாக வந்தாலும் பரவாயில்லை. எல்லாருடைய மகிழ்ச்சிதான் முக்கியம் என்பவர் நீங்கள்!

# லேடீஸ் ஸ்பெஷல்

# இளவரசியின் துணிச்சல்

இங்கிலாந்து இளவரசி டயானா தன் உடலைக் கட்டுக்கோப்பாக வைத்திருப்பதில் உஷாராக இருப்பவர். ஒருநாள் கூடத் தவறாமல் ஜாக்கிங் (மெதுவாக ஓடுதல்) செல்லுவார்.

அப்படித்தான் ஒருநாள் லண்டனிலுள்ள ரிஜென்ட்ஸ் பூங்காவில் டயானா ஜாக்கிங் சென்று கொண்டிருந்தார். திடீரென்று தொபுக்கடீர் என்று சத்தம்.

திரும்பிப் பார்த்தார் டயானா. அங்குள்ள பாலத்தில் இருந்து ஒரு இளைஞர் அருவிக்குள் தவறி விழுந்து தத்தளித்துக் கொண்டிருந்தார்.

டயானாவுக்கு வந்தது பாருங்கள் துணிச்சல். குளத்திற்குள் 'குபீர்' என்று ஒரு பாய்ச்சல்.

அந்த வாலிபரின் தலை முடியைப் பிடித்து இழுத்து வந்து கரை சேர்த்தார். பின்னர் அந்த வாலிபர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

வைத்தியமனைக்கு 2 தடவை நேரில் சென்று நலம் விசாரித்தார் டயானா. இளவரசியே கவனிப்பு செலுத்தினால் சிகிச்சை எப்படி இருக்கும் என்று சொல்லவா வேண்டும். வாலிபருக்கு தடபுடலான கவனிப்பாம்.

டயானா தன்னை தொட்டுத் தூக்கியதை நினைத்து புல்லரித்துப் போயிருக்கிறாராம் வாலிபர். அப்படியானால் இன்னொரு முறையும் குதித்தாலும் குதிப்பாரோ!

வாசகியின் சாட்டை

# ரூபவாகினியும் பெண்களும்

## 'கையைப் பிடித்திழுத்தால் கவலைப்படாதே'

அலுவலகத்தில் தன்னை பச்சையாக வர்ணிக்கும் ஆணிடம் மோதுகிறாள் அவள்.

அலுவலகத்தில் சீண்டும் மேலதிகாரிக்கு பாடம் புகட்டுகிறாள் அவள்.

பெண்ணை அவள் விருப்பம் இல்லாமல் நெருங்குவதே நெருப்பைத் தொடுவது போன்றது என்பதைப் புரிய வைக்கிறாள் அவள்.

இறுதியில் அவள் தனியே தெருவில் நிற்கிறாள்.

பெண் விடுதலை என்றால் என்னவென்று தெரியாத ஒரு பெண் சந்தோஷமாக காரில் கணவனுடன் செல்கிறாள். அவள் மட்டும் வீதியில் தனியாக... ஒற்றையாக...

இதுதான் 'அவள் அப்படித்தான்' படத்தின் கதைச் சுருக்கம்.

அதன்மூலம் என்ன சொல்ல விரும்புகிறார்கள்.

வேலைக்குப் போகும் பெண்கள் தங்கள் மேலதிகாரிகள் கையைப் பிடித்தால் கண்டு கொள்ளக்கூடாது.

ஒரு பெண்ணின் காதுபடக்கூடியவாறு அவளை சோரம் போகிறவள் என்று நாலுபேர் சொன்னால் காதைப் பொத்திக் கொண்டு சென்று மூலையில் இருந்து அழ வேண்டும்.

அப்படித்தான் நினைக்க வைக்கிறது 'அவள் அப்படித்தான்' படமும்.

இலங்கை அரசு கணவன் கூட மனைவியை அவள் விருப்பமின்றித் தொட்டால் குற்றம் என்று சட்டம் கொண்டு வருகிறது.

அரசின் ரூபவாகினி தொலைக்காட்சி தமிழ் பிரிவு 'அவள் அப்படித்தான்' படத்தை எங்கோ இருந்து தூசி தட்டி எடுத்துப் போட்டிருக்கிறது.

பெண் விடுதலை என்பது மனநோய் மாதிரியானது என்று சித்தரிக்கும் படத்தை காண்பிக்குமளவுக்கு ரூபவாகினி தமிழ் பிரிவு கற்கால மனநிலையில் இருக்கிறதா?

அல்லது, ரூபவாகினி தமிழ் பிரிவில் யாராவது ஒருவருக்கு நேர்ந்த அனுபவம் இவ்வாறான படங்களை திரையிடத் தூண்டுகோலாக இருக்கிறதோ தெரியவில்லை.

ரூபவாகினியில் என்றால் என்ன, வீதியில் என்றால் என்ன, பெண்ணை அவள் விருப்பத்திற்கு மாறாக கையைத் தொட்டு இழுக்கும் எவருக்கும் பெண் விளாசுவாள். விளாசலாம்.

ஏ.காயத்திரி கொழும்பு-6

# பெண்களுக்கென்ன நீதி?

அதிர்ச்சியூட்டும் புள்ளி விபரங்களில் இதுவும் ஒன்று. இந்தியாவில் குஜாராத் மாநிலத்தில் எடுக்கப்பட்ட புள்ளி விபரம் இது:

★ சராசரியாக ஒரு மணி நேரத்திற்கு ஒன்று வீதம் 24 கொலைகள் வரதட்சணை தொடர்பாக நடக்கின்றன.

★ 1989 முதல் 1991 வரை 18,000 பெண்கள் தீக்கிரையாகினார்கள்.

★ இதே காலங்களில் 20,000 பெண்கள் வரதட்சணைக் கொடுமைகளால் மாமியார்களின் சித்திரவதைகளால் தற்கொலை செய்துகொண்டுள்ளனர்.

★ தீக்காயங்களுடனே கூடிய நோயாளி பிரேதங்கள் அகமதாபாத்திலுள்ள பிரேத பரிசோதனை நிலையம் தினமும் 13 பிரேதங்களைச் சந்திக்கின்றன.

★ வரதட்சனைக் கொடுமையால் இறந்தவர்களைச் சமாளிக்க பொலிஸ்காரர்களின் பொய் வழக்கிற்கு லஞ்சமாக 20,000 ரூபாய் வரை கொடுக்கப்படுகின்றது.

★ நீதிபதிக்கும் இக்கொடுமைகளை மறைத்துப் பொய்த்தீர்ப்பளிக்க 25,000 ரூபாய் வரை கொடுக்கப்படுகின்றது.

# துணிகளைக் காப்பாற்றுங்கள்

★ அதிக நேரம் துணிகளை வெய்யிலில் காயப்போடக் கூடாது. நீலம் போட்ட வெள்ளைத் துணிகளை வெய்யிலில் போடவே கூடாது.

★ அழுக்குத் துணிகளை உடனேயே துவைத்துவிட வேண்டும். இல்லையேல் நோய்க்கிருமிகள் வந்துசேரும்.

★ பட்டு, ரேயோன், நைலோன், டெர்லின் துணிகளை இஸ்திரி போடும் போது சிறிது சூடு போதும். இலேசான சூடு படுத்தி துணியை அவற்றின் மீது பரப்பி இஸ்திரி போடவேண்டும்.

★ எளிதாக துணி துவைக்க வெதுவெதுப்பான நீரில் ஊற வைத்துத் துவைக்கலாம்.

★ துணிகளில் சிறிது தையல் பிரிந்தோ, லேசான கிழிசலோ இருந்தால் தைத்து விட்டு துவைப்பது அவசியம்.



# சமைப்பதற்கு முன்னர்

★ தேங்காயை உடைக்கும் போது சில சமயம் மூடி சிறியதாகவும், பெரியதாகவும் உடைந்துவிடும். அல்லது கோணலாக உடைந்துவிடும். இதனைத் தவிர்க்க தேங்காயைத் தண்ணீரில் ஊறவைத்து தட்டி உடைத்தால் சமமாக உடையும்.

★ கிழங்குகளை விரைவாக வேகவைக்க அதனை அரிசி கழுவிய நீரில் வேக வைத்து எடுத்தால் வேகமாக வெந்து விடும்.

★ வெங்காயத்தை தண்ணீரில் நனைத்து உரித்தால் கண்ணில் நீர் வராது.

★ இட்லிக்கு ஊறவைக்கும் அரிசியுடன் ஒரு பிடி அவலையும் ஊறவைத்து அரைத்தால் இட்லி பூப்போல மென்மையாக இருக்கும்.

தினமுரசு — அம்மன் ஜுவல்ஸ்
பரிசுக் கூப்பன்
இல 06

தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ்
இணைந்து வழங்கும்
தங்கமாலை
பரிசுப் போட்டி

★ முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
★ 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
★ பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
★ முரசு 116 முதல் தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.


படிப்பகம்

www.padippakam.com

## அழுதுவடியும் ஆத்மா



++ + ++
அன்று...அவள்
சிரிச்சுப்பேசிய
இடம்-இன்று
வெறிச்சோடிக் கிடக்கிறது...!
++ + ++
இன்றும்...
பனைமரம்போல்
வேர்பிடித்துக் கிடக்கிறேன்
நான் மட்டும்!
++ + ++
நகரும் ஒவ்வொரு
பஸ்ஸுக்குள்ளும்
பறிபோன
பௌர்ணமிக்காய்
கண்ணிமைக்காது
கண்ணிவைப்பேன்...!
++ + ++
எங்காவது..
"பர்தா"வொன்று
பதுங்கிப்போக
பார்வையெல்லாம்
பருந்தாய்ப் பறக்கும்...!
அவள் என்று...!
++ + ++
நூலறுந்த பட்டம் போல்
ஆட்டமிழக்கும்
ஆத்மா...!
ஏமாற்றத்தால்
அழுது வடியும்...!
++ + ++
"அடுத்த பஸ் வரும்..." என்று
சமாதானப்பட்டுக்கொள்ளும்
பயணிகளைப்போல்
நானும்
சமரசப்பட்டுக் கொள்வேன்
அடுத்த பஸ்ஸில் வருவாள்...
என்று!
++ + ++
அடுத்த பஸ்ஸும் வரும்...
அன்றைய இரவும் வரும்...
அவள் மட்டும் வரமாட்டாள்!
++ + ++
அமாவாசையால்...
இருட்டிப்போகும்
இரவைப்போல்...
என்மனசிலும் இரட்டிப்பாகும்
மருட்டல்கள்!
++ + ++
நாளைய...பௌர்ணமியாவது
அவளை
அடையாளப் படுத்தும்-என்ற
நப்பாஷையில்
வாய்பிளந்து...! வாய்பிளந்து...!
"ரோட்" அளக்கிறேன்
வீடுவரை!

பாணகமுவ-எஸ். முஸ்தாக், குருநாகல்.

## நிஜமும் நீயும்

ஒருநாள்
கைதானேன்
உன்
கண்களின்
முற்றுகையில்
* *
உணவற்று
உறக்கமற்று
உன்தேச
தெருக்களில்
உன்னால்-நான்
கட்டியிழுக்கப்பட்ட
சித்திரவதைகள்
ஏராளம்
* *
பின்புதான்
காட்டப்பட்டது
கைதுக்கான
காரணம்-என்
வாலிபமென்று
* *
விடுதலை
தேவையில்லை
கைதுபற்றி
கவலையில்லை-என்
வேண்டுகோள்
எல்லாம்-என்னை
விரோதிக்காதே
என்பதே
* *
இருந்தாலும்-என்
விண்ணப்பங்கள்
உன்-விழிகளில்
வெறுக்கப்பட்டே
வந்தது
* *
என் தேசத்தில்
உன்-
ஆக்கிரமிப்புக்கள்
அத்துமீறல்கள்
அதிகமாகி...
நானுமோர்
தீவிரவாதி
இப்போது
* *
என்
கருணைமனு
உன்
கவனத்தை
கவருமென்று
காலகாலமாக
காத்திருந்தேன்
* *
அன்றுதான்-உன்
ஏகபோக அரசு
அறிவித்தது
எனக்கு
விடுதலையென்று
உன்-திருமண
அழைப்பிதழில்

அக்கரைப்பற்று-ஏ.ஜீ.சேகர்

## உருக்கு இது..!

பிய்ந்து தொங்கும் மனம்
பழகிய தடம் வழியே
கண்ணீர்ச்
சுமை தாங்கிப் போகும்!
▫▫▫
என் மனதில் பதித்த
வேதனைக் கறைகளைத்
துடைத்துவிட
உன் வார்த்தைகளுக்கு
வலுவில்லைத் தான்!
▫▫▫
உனக்கு உயிர்
நானென்றால்
நீ அனுபவித்தவை
எப்படி
அவமானங்களாகிப் போகும்?
▫▫▫
உன் வாழ்வும் வசந்தமும்
உனை நான் மறப்பதிலா?
என் மரணத்திலா?
▫▫▫
உனை மறப்பதற்கு
எனதிதயம்
தெருவோர மரநிழல்ல!
இளைப்பார
இடந்தரவும்,
நீ புறப்பட்ட பின்னர்
இன்னொரு பாதசாரிக்காக
நிழல் பரப்பி நிற்கவும்...!
▫▫▫
நான்
உன் நினைவுகளை
அடைகாக்கும்
இருட்டுக் குகை!
இனி எந்த வசந்தமும்
என் மனக் குகைக்குள்
குடியேற மாட்டாது!
▫▫▫
என்னால் உனக்குக்
கவலைகளே
வரக்கூடாதெனக்
கணக்குப் போட்டிருந்தால்
உனை விடவும்
படித்த முட்டாள்
வேறு யாரிருக்க முடியும்?
▫▫▫
கஷ்டங்கள் வரும் போது
காதல் கசந்ததா?
நெல்லிக் காய்க் காதலே
நீண்டு வாழுமென்பதை
நீயறிந்ததில்லையா?
▫▫▫
நான் அன்பானவள்தான்!
என் உயிருக்குள்
நடைபோட்ட
உனக்குத்தான்
என் முகவரி தெரியாமற் போனது!

செல்வி.பஹீமா ஜஹான் ஸவாஹிர், மெல்சிரிபுர.

## வழிமாறிய வசந்தம்

நம்
இருவரின் இடையே
மௌனம்
ஏன்?
இன்றுவரை
சுவர்எழுப்பி
உட்கார்ந்திருக்க வேண்டும்!
♥ ♥♥ ♥
என்னவெல்லாமே
பரிமாறிக்கொள்ள
நினைத்தோம்
ஆனால்...
வார்த்தைகளை
நீ
வடிகட்டித்தானே
அனுப்பிவைத்தாய்!
♥ ♥♥ ♥
புன்னகையை
புதைத்துவிட்டு
நெருப்பைத்தானே
சிரித்தாய்!
♥ ♥♥ ♥
அன்பை
தொலைத்துவிட்டு
முட்களால்தானே
அணைத்தாய்!
♥ ♥♥ ♥
இந்தச்சுடர்
அணையாமலிருக்க
வழிசொல்
என்
வசந்தமே!

ஹெந்தலை - நவா

## என்றுதான் மறுமலர்ச்சி

உயரப் பறக்கிறது
விலைவாசி
பொருளாதாரப் பற்றாக்குறை
ஒருபுறமாய்
நிம்மதியின்மை மறுபுறமாய்
நொந்த இதயங்களுடன்
நாடே அழும்போது
குறையவில்லை சோகங்கள்
வேண்டாத துக்கங்கள்
இனத்தின் பெயராலே
மனக்கசப்பு வந்ததால்
மலிவு விலை விற்பனையில்
மனிதக் குருதி மட்டும்தான்
மனிதாபிமானச் சுவடுகள்
புதைந்து வரும் நிலையில்
என்றுதான் 'மறுமலர்ச்சி'?

- திருமலை வாணி -





## தேன் கிண்ணம்



## கதி என்ன?

இராமர்களே வந்து
விமோசனம் தந்தாலும்
கல்லான அகலிகைகள்-இங்கே
பெண்ணாக விரும்பவில்லை
**
வாழ்க்கையைப் பகிர்வதற்கு
வைத்தியர் வேணுமென்றால்
காணி, வீடு நகையுடனே
பத்து லட்சம் பணமதுவும்
அளவாக இருக்க வேண்டும்!
**
பொறியியலாளர் ஒருவரைப்
பொறுப்புடனே பார்த்திடவே
எட்டு லட்சம் பணத்துடனும்
நூறுபது பவுண நகையதுவும்
நங்கைக்குச் சூட்டணுமாம்!
**
கணடா மாப்பிள்ளையைக்
கருத்துடனே கவனிக்க
பன்னிரு லட்சம் கொடுத்து
காத்திருக்க தயார் என்றால்
பாட்டிக்கும் திருமணமாம்!
**
கணக்காளர் ஒருவரைக்
கைப்பிடிக்க வேணுமென்றால்
கைக்கூலியாய் அவருக்கு
ஏழு லட்சம் பணமதுவும்
வீடொன்றும் போதுமாம்...!
**
அறிவுடைய ஆசிரியனுக்கு
அலுமாரி என்றாலும்
அழகாக இருந்திட்டால்
ஐந்து லட்சம் பணத்துடனே
பெருந்தன்மையாய் ஏற்பாராம்!
**
ஊர் சுற்றிப் பையனுக்கு
ஏழு லட்சம் பணம்கொடுத்து
"சுவிஸ்"ற்கு அனுப்பிவிட்டால்
கறுப்புக் கட்டையையும்
கவனமாய்ப் பார்ப்பாராம்!
**
கல்யாணச் சந்தையிலே
மாப்பிள்ளை அவன் விலை
ஏறிக்கொண்டே போகிறது!
**
சீதையாக உருமாறிச்
சிறைப்பட விரும்பாமல்
கன்னியாகவே இருக்க
காரிகைகள் விரும்பினால்
காளை அவன் கதி என்ன...?

கௌரி ஜெயா, வவுனியா

## நீ

•••
உன் சுவாசக்
காற்றில் கூடக்
கவிதை எழுதியவன்
உன் நினைவுகளால்
ஆயுள் ரேகையைப்
பலப்படுத்திக் கொண்டவன்
•••
உன் சின்ன
அசைவுகளுக்கும்
காரணம் கற்பித்தவன்
ஒரு நட்சத்திரத்தை
நிலவாகப் பதவியுயர்த்தி
மகுடம் சூட்டியவன்.
•••
உன் பனிபடர்ந்த
கன்னம் முதல்
பாதம் வரை
அணுஅணுவாய்
ஆராய்ந்து
எதிர்காலக்
கணக்குப் போட்டவன்.
•••
உன்னை
அழகான தென்றலாக்கி
இடைவிடாது சுவாசித்தவன்...
•••
ஆனால்
நீ?!

-எம்.சுரேஷ்-



## நெஞ்சில் நீ!

நீ
பார்வைகளைத்
தூவிப்போனாய்
எனக்குள்
ஆயிரம்
கவிதைகளின்
பிரசவங்கள்!
♥♥♥♥
விழுந்துவிட்ட
மீனாய்
துடித்துக்கொண்டிருக்க
விழித்தூண்டிலை
இழுத்தவாறே
வேதனைப்படாத
நீ!
♥♥♥♥
மௌனங்களோடு
போராடும்
உன்
இதழ்களுக்கு
கொஞ்சம்
புன்னகைக்க
கற்றுக்கொடு!
♥♥♥♥
நீ
வந்துபோகும்
நிலவாக மட்டுமிருந்தால்
நொந்துபோன
எனக்கு
ஆறுதலளிப்பது யார்?
ஆகையால்
ஒரு முறை
பேசு!
♥♥♥♥
நேசகியே
ஒன்று தெரியுமா?
இப்போதெல்லாம்
நான்
ஜீவிப்பதற்கு
சுவாசிப்பது
நீதான்:
என்
நெஞ்சுக்குள்ளிருந்து
கொண்டு!

-கே.கனகராஜா-



## ஏக்கம்

சமாதானத்திற்கு
என்னதான்
சந்தன முலாம் பூசினாலும்
எங்கள்
வாழ்க்கை-
இன்னமும்
வெறுமைகளோடுதான்...!

அ.சுதாசேகர், பொத்துவில்-03.




## இந்த வாரம் உங்கள் பலன்

(01.10.95 முதல் 07.10.95 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- தொழில்சிறப்பு, பணவரவு. | காலை 6 மணி |
| **திங்கள்**-வீண்முயற்சி, மனக்குறைநீங்கும். | பகல் 12 மணி |
| **செவ்வாய்**- உயர்ந்தநிலை, தொழில்விருத்தி. | காலை 6 மணி |
| **புதன்**- இனசனநன்மை, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| **வியாழன்**- தொழில்மந்தம், பணச்செலவு. | காலை 6 மணி |
| **வெள்ளி**- மறைமுக எதிர்ப்பு, மனக்கவலை. | மு.ப. 9 மணி |
| **சனி**- புதிய முயற்சி, பணவரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-7

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- தொழில் மந்தம், காரியத்தடை. | பகல் 12 மணி |
| **திங்கள்**- பெரியோர் உதவி, கௌரவம். | காலை 7 மணி |
| **செவ்வாய்**-புதிய முயற்சி, செலவு மிகுதி. | காலை 6 மணி |
| **புதன்**- உயர்ந்த நிலை, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| **வியாழன்**- வெளியிடவாழ்க்கை, மனக்கவலை. | காலை 7 மணி |
| **வெள்ளி**- உறவினர் பகை, மனக்கிலேசம். | பி.ப. 1 மணி |
| **சனி**- பயனற்ற செயல், செலவு மிகுதி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- பொருள் நட்டம், மனக்கவலை. | பி.ப. 2 மணி |
| **திங்கள்**- காரியானுகூலம், கௌரவக்குறைவு. | காலை 7 மணி |
| **செவ்வாய்**- துன்பம் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| **புதன்**- எதிர்பார்த்த நன்மை, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| **வியாழன்**- இனசன விரோதம் பணச்செலவு. | பகல் 12 மணி |
| **வெள்ளி**- உயர்ந்த நிலை, கௌரவம். | காலை 6 மணி |
| **சனி**- மனமகிழ்ச்சி, பொருள்பேறு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| **திங்கள்**- வீண் மனஸ்தாபம், பொருள்விரயம். | பி.ப. 2 மணி |
| **செவ்வாய்**- துயர் அதிகம், தேகசுகம் பாதிப்பு. | காலை 7 மணி |
| **புதன்**- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | மு.ப. 9 மணி |
| **வியாழன்**- தொழில் சிறப்பு, பணவரவு. | பகல் 12 மணி |
| **வெள்ளி**- வீண்குறை கேட்டல், மனக்கவலை. | காலை 6 மணி |
| **சனி**- துன்பம் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-2

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- பொருள்வரவு, காரியானுகூலம் | காலை 6 மணி |
| **திங்கள்**- இனசனநன்மை, பெரியோர் நட்பு. | பகல் 1 மணி |
| **செவ்வாய்**-முயற்சி பலிதம், தொழில் விருத்தி. | காலை 7 மணி |
| **புதன்**- வெளியிட வாழ்க்கை, மனக்குறை நீங்கும். | பி.ப. 1 மணி |
| **வியாழன்**-இனசனம் பகை, கௌரவக் கேடு. | காலை 6 மணி |
| **வெள்ளி**- தொழில்நட்டம், பணச்செலவு. | காலை 7 மணி |
| **சனி**- அந்நியர் நட்பு, கௌரவம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- பொருள்வரவு, கௌரவம். | பி.ப. 2 மணி |
| **திங்கள்**- வீண்மனஸ்தாபம், மனக்கவலை. | காலை 6 மணி |
| **செவ்வாய்**- வெளியிட வாழ்க்கை, மனத்தெளிவு. | காலை 7 மணி |
| **புதன்** - உயர்ந்த நிலை, பொருள் நட்டம். | பகல் 12 மணி |
| **வியாழன்**- மனமகிழ்ச்சி, கௌரவக் குறைவு. | காலை 7 மணி |
| **வெள்ளி**- பணக்கஷ்டம், காரியக் கேடு. | பி.ப. 1 மணி |
| **சனி**- உயர்ந்த நிலை, மனக்கவலை நீங்கும். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-3

### நவக்கிரக சஞ்சாரம்

| | | |
|---|---|---|
| கன்னி | - | சூரியன்,புதன்,வெள்ளி |
| துலாம் | - | செவ்வாய், இராகு |
| விருட்சிகம் | - | வியாழன் |
| கும்பம் | - | சனி |
| மேடம் | - | கேது |

★ சந்திரன்-தனு, மகரம், கும்பம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார். ★

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- வெளியிடப் பயணம், மனக்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |
| **திங்கள்**- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | காலை 7 மணி |
| **செவ்வாய்**- புதிய முயற்சி, பணச் செலவு. | பகல் 12 மணி |
| **புதன்**- காரியசித்தி, பொருள்வரவு. | காலை 7 மணி |
| **வியாழன்**- துன்பம் நீங்கும், மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| **வெள்ளி**- உறவினர் கவலை, மனத்தைரியம். | மு.ப. 9 மணி |
| **சனி**- அந்நியர் உதவி, தேகசுக நன்மை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- பொருள்வரவு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| **திங்கள்**- காரியானுகூலம், பொருள்வரவு. | பி.ப. 1 மணி |
| **செவ்வாய்**- வீண்குறை கேட்டல், மனக்கவலை. | காலை 6 மணி |
| **புதன்**- துயர்நீங்கும், மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| **வியாழன்**- உறவினர் சகாயம், தொழில் விருத்தி. | காலை 7 மணி |
| **வெள்ளி**- புதிய முயற்சி, பலவித நன்மை. | காலை 6 மணி |
| **சனி**- மனக்குறை நீங்கும், செய்தொழில் நன்மை. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- பொருள் பேறு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| **திங்கள்**- வீண்குறை கேட்டல், கௌரவம். | மு.ப. 9 மணி |
| **செவ்வாய்**- உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும். | காலை 6 மணி |
| **புதன்**- தொழில் விருத்தி, பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| **வியாழன்**- இனசன நன்மை, தனலாபம். | காலை 8 மணி |
| **வெள்ளி**- புதிய நட்பு, அந்நியர் உதவி. | பி.ப. 1 மணி |
| **சனி**- பயனற்ற செயல், தொழில் விருத்தி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-9

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 8 மணி |
| **திங்கள்**- மனக்குறை நீங்கும், கௌரவம். | பகல் 12 மணி |
| **செவ்வாய்**- துன்பம் குறையும், உயர்ந்த நிலை. | காலை 6 மணி |
| **புதன்**- வெளியிட வாழ்க்கை, இனசன நன்மை. | பி.ப. 2 மணி |
| **வியாழன்**- உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும். | காலை 7 மணி |
| **வெள்ளி**- பயனுள்ள செயல், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| **சனி**- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| **திங்கள்**- தொழில் விருத்தி, இனசன நன்மை. | பகல் 12 மணி |
| **செவ்வாய்**- வீண்குறை கேட்டல், கௌரவக்குறைவு. | காலை 8 மணி |
| **புதன்**- தெய்வானுகூலம், கேகசுக நன்மை. | பி.ப. 1 மணி |
| **வியாழன்**- முயற்சி பலிதம், அந்நியர் சகவாசம். | காலை 8 மணி |
| **வெள்ளி**- பொருள் வரவு, காரியசித்தி. | பி.ப. 2 மணி |
| **சனி**- முன்னேற்றம், பணவரவு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-9

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- பொருள் நட்டம், காரியத்தடை. | பி.ப. 2 மணி |
| **திங்கள்**- உயர்ந்த நிலை, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| **செவ்வாய்**- வெளியிடப் பயணம், கௌரவம். | பி.ப. 2 மணி |
| **புதன்**- காரியசித்தி, பொருள்வரவு. | காலை 7 மணி |
| **வியாழன்**- உயர்ந்த எண்ணம், மனக்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |
| **வெள்ளி**- இனசன விரோதம், கௌரவக் குறைவு. | காலை 8 மணி |
| **சனி**- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

www.padippakam.com







## புதிய மெட்டுப் போடு

பாட்டுப் பாடி பழகு தம்பி
கூச்சம் விட்டுப் போகும்!
பாட்டினாலே கவலை மாறும்
பசியும் பறந்து போகும்!

பாரதியின் பாட்டைப் பாடு
அச்சம் விலகி ஓடும்!
பைந்தமிழில் பற்று கூடும்!
பேதம் மறைந்து போகும்!

புதுக் கவிஞர் பலர் பாட்டைப்
புரிந்து நீயும் பாடு!
புதுமை கண்டால் வாழ்வில் கொண்டு
புதிய பாதை தேடு!

நீயும் நாளை புதிய பாட்டை
எழுதும் கவியாய் மாறு!
உலகம் அதிலே எழுந்து நடக்க
புதிய மெட்டைப் போடு.

-நல்லேந்திரன்

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்.
திண்ணிய நெஞ்சம் வேண்டும்:
தெளிந்த நல்லறிவு வேண்டும்.
-சுப்பிரமணிய பாரதியார்.

# அதிஷ்டத்தின் பலன்

### பாப்பா முரசு சிறுகதை



ஒரு செல்வந்தனுக்கு அதிஷ்டத்தின் மேல் மிகவும் நம்பிக்கை இருந்தது. உலகத்தில் எல்லாம் அதிஷ்டத்தின் படியேதான் நடக்கின்றன என்று நினைப்பவன் அவன்.

ஒருநாள் அவன் நண்பன் ஒருவன், "விடிகாலையில் தூங்கி எழுந்ததும் ஜோடிக் காக்கைகளைப் பார்த்தால் அன்று நல்ல அதிஷ்டம் உண்டாகும்", என்று கூறினான்.

உடனே அவன் தன் பணியாளனை அழைத்தான்.

"நீ அதிகாலையில் எந்த இடத்தில் ஜோடிக் காக்கைகள் அமர்ந்திருப்பதைப் பார்த்தாலும், சற்றும் தாமதியாமல் உடனே வந்து என்னை எழுப்ப வேண்டும்" என்று உத்தரவிட்டான்.

பணியாளனும் சம்மதித்தான். அன்றிலிருந்து ஒவ்வொரு நாள் காலையும் ஜோடிக் காக்கைகளைத் தேடுவது அவன் தலையாய வேலையாகப் போய்விட்டது.

தினமும் பொழுது புலருமுன்னரே அவன் எழுந்து தோட்டத்தையும், மற்ற இடங்களையும் கவனிக்கத் தொடங்குவான்.

பொழுது விடிந்ததும் தோட்டத்து மரக்கிளைகளிலும், மின்சாரக் கம்பிகளிலும் கூட்டமாக நிறையக் காக்கைகள் அமர்ந்து 'கா...கா...' என்று கத்திக் கொண்டிருக்கும். அல்லது ஒரு குஞ்சுக்காக்கை வாய்திறந்தபடி இருக்க, ஒரு தாய் காக்கை அதற்கு உணவு கொடுத்துக் கொண்டிருக்கும். அல்லது ஒரு காக்கை மட்டும் அமர்ந்து கத்திக் கொண்டிருக்கும். ஆனால் ஒரு ஆண் காக்கையும், ஒரு பெண் காக்கையும் ஜோடியாய் அமர்ந்திருப்பது மிகவும் அரிதாய் இருந்தது.

ஒருநாள் காலை செல்வந்தனின் வீட்டுத் தோட்டத்தில் இருந்த ஒரு தென்னை மரத்தில் ஒரு ஜோடிக் காக்கை அமர்ந்திருப்பதைப் பார்த்து விட்டான் அந்தப் பணியாள்.

உடனே அவன் ஓடிச்சென்று தன் எஜமானனை எழுப்பினான்.

"எஜமான்! எஜமான்! நம் வீட்டுத் தென்னை மரம் ஒன்றில் ஜோடிக்காக்கைகள் அமர்ந்திருக்கின்றன. சீக்கிரம் எழுந்து வாருங்கள்!" என்று படபடத்தான் பணியாள்.

"அப்படியா! கொஞ்சம் பொறு. நான் கண்விழித்ததும் முதலில் அந்த ஜோடிக் காக்கைகளைத்தான் பார்க்க வேண்டும். நான் என் இரு கண்களையும் மூடிக்கொண்டே இருக்கின்றேன். நீ என் கையைப் பிடித்து அழைத்துச் சென்று அந்த ஜோடிக் காக்கைகள் என் கண்முன்னே படும்படி நிறுத்து. அப்பொழுதுதான் பெரிய அதிஷ்டம் பிய்த்துக்கொண்டு வரும்!" என்று கண்களைத் திறக்காமல் சொன்னான்.

பிறகு அவன் கண்களை மூடியபடியே எழுந்து நின்றான். பணியாள் அவனது கையைப்பிடித்து மெல்ல அழைத்துச்சென்று அந்த ஜோடிக் காக்கைகள் கண்களில் படும்படி நிறுத்தினான்.

"எஜமான்! பாருங்கள்!" என்றான் பணியாள்.

செல்வந்தன் கண்களைத் திறந்தான். என்ன துரதிஷ்டம்...! தென்னை மரத்தில் ஒரே ஒரு காக்கை மட்டுமே அமர்ந்திருந்தது. ஒன்று பறந்துபோய் விட்டிருந்தது.

செல்வந்தனுக்கு கோபம் தலைக் கேறியது. அவன் ஒரே பாய்ச்சலில் பாய்ந்து பணியாளின் நெஞ்சுச் சட்டையைப் பிடித்தான்.

"எனக்கு நேரவிருந்த அதிஷ்டத்தைக் கெடுத்தாயேடா பாவி. ஒரு காக்கை பறந்து செல்வதற்கு முன் என்னை வந்து ஏன் எழுப்பவில்லை? ஜோடிக் காக்கையைப் பார்த்து உனக்கு மட்டும் அதிஷ்டத்தைத் தேடிக் கொண்டாயா?" என்று சொல்லிக் கொண்டே பணியாளை மாறி மாறி அடித்தான்.

அத்தனை அடிகளையும் வாங்கிக் கொண்ட பணியாள் மிகவும் அமைதியாக செல்வந்தனைப் பார்த்து,

"எஜமானே! ஜோடிக் காக்கைகளை நான் பார்த்ததால் இன்று எனக்குக் கிடைத்த அதிஷ்டம் இந்த அடிகள்தான்!" என்றான்.

செல்வந்தனுக்கு அந்த வார்த்தைகள் நெத்தியடி போல் இருந்தது. அதிஷ்டத்தை நம்புவதை அன்றே கைவிட்டான் அவன்.

## வாரம் ஒரு நாடு

### கயானா



**தலைநகர்**–ஜோர்ஜ்டவுன்.
**பரப்பளவு**–2,14,969 சதுர கிலோ மீற்றர்.
**மக்கள் தொகை**–8,00,000.
**மொழி**–ஆங்கிலம், ஹிந்தி, உருது, கிரியோல்.
**எழுத்தறிவு**–95%
**சமயம்**–கிறிஸ்தவம், இஸ்லாம், இந்துசமயம்.
**நாணயம்**–கயானா டொலர்.
**தனிநபர் வருமானம்**–330 டொலர்.
**அமைவிடம்:**
தென் அமெரிக்காவின் தென்கிழக்கே அமைந்துள்ளது. அட்லாண்டிக் கடற் பரப்பைக் கொண்டுள்ளது. இதன் தெற்கே பிரேசிலும், மேற்கில் வெனிசுலாவும், கிழக்கில் சுரினாமும் எல்லைகளாக அமைந்துள்ளன.
**வரலாறு:**
இது ஒரு தென் அமெரிக்க நாடு. 1814 இல் பிரிட்டன் இதைப்பிடித்தெடுத்தது. 1966ல் பிரிட்டனிடம் இருந்து சுதந்திரம் பெற்றது. விவசாயம் முக்கிய தொழில். சீனி, நெல், பாக்சைட் முக்கிய ஏற்றுமதிப் பொருட்கள். தங்கம், வைரம் இங்கு பெருமளவில் கிடைக்கிறது.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 07.10.1995.
வர்ணம் தீட்டும் போட்டி இல: 110
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 107

பரிசுக்குரியவர்:
முஹம்மட் நிலூஜான்,
களு/ஜீலான் மத்திய கல்லூரி, ஹேனமுல்ல, பாணந்துறை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| ந.சிதம்பரம், பாரதி வித்தியாலயம், பதுளை. | க.யோகேஸ்வரன், பது/ஹப்புத்தளை த.ம.க., ஹப்புத்தளை. |
| சி.திலீபன், தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி. | ஏ.கே.கிறிஸ்டி குமார், றோயல் கல்லூரி, கொழும்பு-7. |
| அ.சு.முகம்மட் றயீஸ், மருதமுனை ஸம்ஸ் மத்திய கல்லூரி, கல்முனை. | ஏ.எச்.ஹாரிஷ், நஸ்றியா மகாவித்தியாலயம், சிலாபம். |
| க.ஸ்ரீ சரவணன், விவேகானந்தா கல்லூரி, கொழும்பு-13. | சௌ.மேனகா, புதுக்குடியிருப்பு வாணி வித்தியாலயம், வாழைச்சேனை. |
| வடிவேல் பாரதி, மட்/புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு. | இரா.கஜேந்திரன், மகாஜனக்கல்லூரி, மட்டக்களப்பு. |

## ஒரு வரிச் செய்திகள்



- பிரபல ஆங்கிலக் கவிஞர் கீட்ஸ் இங்கிலாந்து மருத்துவமனையில் கம்பவுண்டராகப் பணியாற்றியவர்.
- நீச்சல் போட்டி கிறிஸ்துவுக்கு பின் 36ம் ஆண்டில் நடைபெற்றதாக தகவல்.
- போப் ஆண்டவர் முதன் முதலில் பதவிக்கு வந்த ஆண்டு 1377.
- பனிக்கட்டியின் உருகு நிலை அதனோடு உப்பைச் சேர்ப்பதால் குறையும்.
- உலக அமைதிக்கான சர்வதேச சங்கம் 1920இல் உருவாக்கப்பட்டது.
- புவியில் உள்ளதைப்போல நிலவில் ஈர்ப்பு விசை ஆறில் ஒரு பங்குதான் இருக்கும்.
- சிலந்தி அதிக உயரத்தில் வாழக்கூடியது.
- புகழ்பெற்ற இந்தியாஹவுஸ் இலண்டனில் இருக்கிறது.
- சட்டக்காந்தம், மின்காந்தம் என்று காந்தம் இருவகைப்படும்.

## அறிவுக்கு ஐந்து



*** உலகிலேயே மிக நீளமான மலைத்தொடர் எது?**
தென் அமெரிக்காவில் உள்ள ஆண்டீஸ் மலைத்தொடர். இதன் நீளம் 7200 கிலோ மீற்றர்.

*** உலகின் மிக உயரமான மலைச்சிகரம் எது?**
எவரெஸ்ட் சிகரம். திபெத்-நேபாள நாட்டு எல்லையில் அமைந்துள்ள இச்சிகரத்தின் உயரம் கடல் மட்டத்தில் இருந்து 8848 மீற்றர்.

*** ஐரோப்பா கண்டத்தில் உயிருடன் இருக்கும் ஒரே ஒரு எரிமலை எது?**
இத்தாலியில் உள்ள மவுண்ட் வெசுவியஸ் எரிமலை.

*** மவுண்ட் ஒலிம்பஸ் எங்குள்ளது?**
கிரேக்க நாட்டில் உள்ளது. இதைப் பழங்கால கிரேக்கர்கள் 'கடவுளின் வீடு' எனக் கருதினர்.

*** மவுண்ட் ரஷ்மோர் எதனால் புகழ்பெற்றது?**
அமெரிக்காவில் உள்ள தென் டக்கோட்டா என்ற மாநிலத்தில் கறுப்பு மலைகள் உள்ளன. அதில் ஒன்று மவுண்ட் ரஷ்மோர். இந்த மலையில் மிகப்பெரிய அளவில், அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிகள் நால்வரின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அந்தப் பெருமைக் குரியவர்கள்: ஜோர்ஜ் வோஷிங்டன். தோமஸ் ஜெபர்சன், ஆபிரகாம் லிங்கன், தியோடர் ரூஸ்வெல்ட்.

## பொது அறிவு எப்படி?

கேட்கப்பட்ட கேள்விகளுக்கு கொடுக்கப் பட்ட விடைகளில் சரியானதைக் கண்டு பிடியுங்கள். உங்கள் பொது அறிவை பரிசோதித்துக் கொள்ளுங்கள்.

(1) உலக மக்களுள் பூகோள அறிவில் முதலிடத்தில் இருக்கும் மக்கள் உள்ள நாடு எது?
(அ) ஜெர்மனி (ஆ) சுவீடன்
(இ) அமெரிக்கா (ஈ) ஜப்பான்

(2) உலகிலேயே செல்லப் பிராணியாக நாயை வளர்ப்பது எந்த நாட்டு மக்கள்?
(அ) அமெரிக்கா (ஆ) இங்கிலாந்து
(இ) இஸ்ரேல் (ஈ) ஜப்பான்.

(3) நாய்க்கறியை அதிகம் சாப்பிடுபவர்கள் எந்த நாட்டு மக்கள்?
(அ) சீனா (ஆ) ஜிம்பாப்வே
(இ) நோர்வே (ஈ) தென்கொரியா


(4) எடை கூடிய ஜந்து எது?
(அ) டொல்ஃபின் (ஆ) திமிங்கிலம்
(இ) முயல் (ஈ) நீர்யானை.

(5) பறக்காத பறவை எது?
(அ) ஃபீனிக்ஸ் (ஆ) கழுகு
(இ) பெங்குவின் (ஈ) மரங்கொத்தி

**விடைகள்**


[illegible]

## பெரிய வண்ணத்துப் பூச்சி



வண்ணத்துப் பூச்சிகளுக்கு அழகு தருவதே அதன் இறக்கைகள்தான். 'பட பட' வென இறக்கை விரித்துக் கொண்டு பூக்களில் அழகாக அமர்ந்திருக்கும். நியுகினியாவில் காணப்படும் வண்ணத்துப் பூச்சிகளின் இறக்கைகள் மிகப் பிரமாண்டமாக இருக்கும். உலகிலேயே மிகப் பெரிய மற்றும் அழகிய கவர்ச்சியான இறக்கை உடைய பெண் வண்ணத்துப் பூச்சியின் பெயர் என்ன தெரியுமா? 'குயின் அலெக்சாண்ட்ரியா.' இதன் இறக்கை ஒன்றின் குறுக்கு நீளம் எவ்வளவு தெரியுமா? மூன்று அடி மூன்று அங்குலம். இதே இனத்தில் உள்ள ஆண் வண்ணத்துப் பூச்சி இறக்கையின் குறுக்கு நீளம் இரண்டு அடி 4 அங்குலம்.

## செய்து பாருங்கள்



வீட்டிற்குப் பயன்படுத்தும் பொருளொன்றை இம்முறை செய்துபார்ப்போம். ஜாம் போத்தல் இருக்கிறதல்லவா? அதன் மூடியை எடுத்துக் கொள்ளுங்கள். அந்த மூடியின் நடுவே இருக்கும் வட்டப்பகுதியை வெட்டி எடுத்துக்கொள்ளுங்கள். இப்போது ஜாம் போத்தல் மூடியின் வளையம் மட்டும் உங்களிடம் இருக்கும். அந்த வளையத்தின் சுற்றளவை விட கொஞ்சம் கூடுதலாக ஸ்பொஞ்சை வெட்டிஎடுங்கள். வீட்டில் தைத்த துணிகளில் மீதம் இருந்தால் அதை ஸ்பொஞ்ச் வடிவில் வட்டமாக வெட்டி, அதைக்கொண்டு ஸ்பொஞ்சைச்சுற்றி பசை கொண்டு ஒட்டுங்கள்.

பிறகு துணியால் சுற்றப்பட்ட ஸ்பொஞ்சின் புறப்பகுதியில் பசைதடவி, ஜாம் போத்தல் வளையத்திற்குள் வைத்து ஒட்டி விடுங்கள். இப்போது உங்கள் கையில் குண்டூசிகளைக் குத்தி வைக்கும் குஷன் ரெடி.

www.padippakam.com



# விலை உயர்ந்த குற்றம்



பட்டுக்கோட்டை பிரபாகர்

OVER TO INDIA

ஜிப்பா அணிந்த ஜீவானந்தம் போனில் மிளகாயைத் தொட்டுக் கொண்டு பேசிக் கொண்டிருந்தார்.

"நோ. யாரைக் கேட்டுக்கிட்டு அச்சடிச்சீங்க?"

"மாஸ்டர் சரவணகுமாரைக் கேட்டோம் சார்!

"மாஸ்ட்ட்டர்! அவனுக்கென்னய்யா தெரியும்? சின்னப்பையன். ஆறடி மூணங்குலத்துல கல்லு மாதிரி ஒரு அப்பன் நான் இருக்கேன். நீங்க என்னைத்தான் கேட்கணும்."

"ஸாரி சார். இப்பகேக்கறோம். அவரை அனுப்பி வைங்க."

"முடியாது. எனக்கு இஷ்டமில்லை இதிலே."

"டிக்கெட்ஸ் எல்லாம் வித்தாச்சி சார். ப்ரோக்ராமை கேன்சல் செஞ்சா ஆடிட்டோரியத்தை ரெண்டாக்கிடுவாங்க."

"மிஸ்டர், இது என் பிரெஸ்டீஜ் சம்பந்தப்பட்ட விஷயம். அவனுக்குப் புத்தி சரியில்லை. வைத்தியம் பண்ணப் போறோம். நான் பதினைஞ்சு நாள் வெளிநாடு போயிருந்த சந்தர்ப்பத்திலே அவன் தெரியாத்தனமா ரோட்டரி கிளப் நிகழ்ச்சில கலந்துக்கிட்டான். நான் இருந்திருந்தா அனுமதிச்சிருக்க மாட்டேன். அதுதான் அவனோட முதல் நிகழ்ச்சியும், கடைசி நிகழ்ச்சியும்."

"சார், அப்படியெல்லாம் சொல்லாதீங்க. ஐயாயிரம் பேசி ரெண்டாயிரம் அட்வான்ஸ் கூட கொடுத்துட்டு வந்தேன்."

"மைகாட்! அது வேற நடந்திருக்கா? என்னோட பேருக்கும், அந்தஸ்த்துக்கும் தேவைதானா இதெல்லாம்? லுக் மிஸ்டர் என்ன நாராயணன்?"

"லஷ்மி நாராயணன்"

"அ, மிஸ்டர் லஷ்மி நாராயணன், தெருக் கூத்தாடி மாதிரி என் பையன் நிகழ்ச்சி நடத்தி சம்பாதிக்கணும்ங்கிற அவசியம் இல்லை. ஹோட்டல்சிலே நான் கொடுக்கிற டிப்ஸ் செலவே மாசம் ஐயாயிரம் தாண்டும், புரிஞ்சுதா?"

"புரியுது சார். ஆனா இது நீங்க நினைக்கிற மாதிரி மாஜிக் ஷோ இல்லை சார். உங்க பையன் ஒரு அபூர்வப் பிறவி. தெய்வ கடாட்சம் பெற்றவன். அற்புதமான கலை சார் இந்த தசாவ தானம். அதுக்கும் ஒரு படி மேல போயி உங்க பையன் செய்ற அந்த விசேஷ நிகழ்ச்சி..."

இந்தக் கதை எல்லாம் வேணாம். உங்க சங்கத்தோட மாநில மாநாட்டில் என் பையன் எந்த நிகழ்ச்சியும் கொடுக்கறதா இல்லை. நீங்க கொடுத்த பணத்தை நேர்ல வந்து கலெக்ட் செஞ்சுக்கலாம். ஒக்கே?

"என்ன சார் உங்களோட பெரிய பிரச்சனையா போச்சி. இன்னும் இரண்டு நாள்ல நிகழ்ச்சி, இப்ப இப்படி சொன்னா எப்படி? நான் நேர்ல வர்றேன்."

"நேர்ல வந்தாலும் இதான் சொல்வேன்."

"கோபப்படாம நிதானமா எங்க சங்கடத்தையும் யோசிங்க." ஒத்துக்கிட்ட வரைக்கும் இந்த நிகழ்ச்சில மட்டும் கலந்துக்கட்டும். அதுக்கப்புறம் உங்க இஷ்டப்படி முடிவு எடுத்துக்கங்க. நேர்ல வர்றேன்".

"நோ யூஸ்" என்று போனை வைத்த ஜீவானந்தம் பங்களாவே அதிரும்படி "இந்திரா" என்று அலற, பயந்து பயந்து வந்த இந்திரா பட்டுச்சேலையில் இருந்தாள்.

"இங்கே வாடி. இன்னொரு நிகழ்ச்சி ஒத்துக்கிட்டிருக்கானா அவன்?".

"ஆமாம். அப்பா சத்தம் போடுவார்ன்னு சொன்னேன், கேக்கலை."

"ரெண்டாயிரம் அட்வான்ஸ் வேற வாங்கியிருக்கான்."

"அவன் எதுவுமே கேக்கலை. பணமே வேணாம்னுதான் சொன்னான். அவங்க தான் வற்புறுத்தி என்கிட்டே கொடுத்துட்டுப் போனாங்க. சரி, வர்றதை எதுக்கு விடணும்னு..."

"அறைஞ்சன்னா பல்லு அத்தனையும் கழண்டுடும். அறிவு இருக்கா உனக்கு? ஜீவானந்தம் பிள்ளை மேடை மேடையா நின்னு மேஜிக் வேலை செய்றது நல்லா இருக்கா?"

"அது மேஜிக் இல்லைங்க."

"அது என்ன எழவோ... இது எனக்குப் பிடிக்கலை. நாளைக்கு அவன் கலந்துக்கக் கூடாது. அந்தப் பயலுக்கு அற்புத சக்தியும் இல்லை, ஒரு மண்ணும் இல்லை. புத்தி பிசகி இருக்கு லேசா. சைக்யாட்ரிஸ்ட்கிட்டே டைம் வாங்கியிருக்கேன். எங்கே அவன்? கூப்புடு."


"ரூம்ல பிராக்டிஸ் பண்ணிக்கிட்டிருக்கான். தொந்தரவு பண்ண வேணாம்னு சொன்னான்."

"அடி செருப்பால! அப்பா கூப்புடறேன். தொந்தரவா அது? போடி, போய் நான் கூப்பிட்டேன்னு சொல்லி கூட்டிக்கிட்டு வா இங்கே."

ஜீவானந்தம் சோபாவில் உட்கார்ந்து தன் வைர மோதிரத்தை சில்க் ஜிப்பாவின் மேல் வைத்துத் தேய்த்துக் கொண்டார்.

தயங்கி நடந்து வந்தான் சரவணகுமார்.

டவுசர் அணிந்திருந்தான். காலர் இல்லாத வட்டக் கழுத்து பனியன் அணிந்திருந்தான். நெற்றியில் முதல் வரியில் விபூதியும், இரண்டாவது வரியில் குங்குமமும் வைத்திருந்தான். நான்கு தடவைக்கு ஒரு தடவை இமைகள் வேகவேகமாகச் சிமிட்டிக் கொண்டன. கைகளை மார்புக்குக் குறுக்கே கட்டியிருந்தான். நாளைக்கு மறுநாள் மீசை ரிலீசாகலாம்.



"அப்பா" என்றான்.

"இங்க வாடா, உக்காரு"

"பரவால்லைப்பா"

"உக்காருடா. உனக்கு என்னப்பா கண்ணு செய்யுது?"

என்று அருகில் உட்கார வைத்து நெற்றியைத் தொட்டுப் பார்த்தார்.

"எனக்கு ஒண்ணுமில்லைப்பா. நான் நல்லாத்தான் இருக்கேன்."

"கோமாளி வேலை எல்லாம் செய்றியே... நல்லா இருக்கா இது?"

"இல்லைப்பா. இது ஒரு கலை. கொஞ்சம் பயிற்சி பண்ணி இம்ப்ரூவ் செஞ்சிருக்கேன். மற்றவங்களை விட இயற்கையாகவே எனக்கு எக்ஸ்ட்ராடினரி மெமரி பவர். கொஞ்சம் அசாத்தியமான காரியமெல்லாம் எம் மூளை செய்யுது. நான் லைப்ரரி போய் இது தொடர்பா படிச்சிப் பார்த்துட்டேன். சயன்டிஃபிக்கா இதுக்கு எந்த காரணமும் கிடையாது. சிலருக்கு ஆறாவது விரல் இருக்கே..... அது மாதிரி, சிலருக்கு ரெட்டை மண்டை இருக்கே அது மாதிரி. இதெல்லாம் எக்ஸ்டர்னல். இது மாதிரி இன்டெர்னலா கொஞ்சம் விசேஷமான மூளை என்னோடது."

"என்ன எழவுடா பேசறே? ஒரு மண்ணும் புரியலை."

"கவலைப்படறதுக்கு ஒண்ணுமே இல்லைப்பா."

"எவனோ சூன்யம் வச்சிட்டான். முதல்ல டாக்டரைப் பார்த்துடலாம். என்னோட வா."

"எனக்கு வியாதி எதுவும் இல்லைப்பா."

"வாடான்னா வரணும். கோபத்தைக் கிளப்பக் கூடாது. வா."

ஜீவானந்தம் எழுந்து, சரவணகுமாரின் கையைப் பிடித்து தரதரவென்று இழுத்துக் கொண்டு வெளியே வந்து காரில் உட்கார வைத்து, உட்கார்ந்து ஸ்டார்ட் செய்தார்.

'டாக்டர் ராமகிருஷ்ணன்-மனநோய் மருத்துவர்' என்று போர்டு எழுதின கதவுக்கு வெளியில் வெள்ளை பெயின்ட் அடித்த பெஞ்சில் அமர்ந்து, அழைக்கப்பட்டதும் உள்ளே வந்தார்கள்.

டாக்டர் தடித்த கண்ணாடி போட்டிருந்தார். முதுகுக்குப் பின்னால் சர்ட்டிஃபிகேட் பிரேம் செய்து மாட்டி வைத்திருந்தார். மருந்து கம்பெனி கொடுத்த வழவழ காலண்டரின் முதல் ஷீட் ஃபேன் காற்றில் துடித்துக் கொண்டிருக்க... அறை மூலையில் மரஸ்டாண்டில் பீங்கான் கிண்ணத்தில் வெந்நீர். அருகில் ராடில் பூத்துண்டு. ஒரு பொக்கை வாய் பாப்பா படம்.

"உட்காருங்க ஜீவாசார். ட்ரீட்மெண்ட் யாருக்கு?"

"இவனுக்குத்தான்."

சரவணகுமார் மேஜை மேலிருந்த சற்று முன் ஒரு ரெப்ரசென்டேடிவ் வைத்துச் சென்றிருந்த ஒரு மாத்திரையின் விட்ரட்ச்சரை எடுத்துப் படித்துக் கொண்டிருந்தான்.

"தம்பி, உன் பேர் என்ன?"

"சரவணகுமார்."

"என்ன பண்றது உனக்கு?"

"குளுருது. ஃபேனை அணைச்சிடுங்க."

"உடம்புக்கு என்ன பண்றது?"

"ஒண்ணும் பண்ணலையே. ஐ ம் நார்மல் டாக்டர்."

"ஜீவா சார், என்ன பிரச்னை?"

"இவன் எனக்கு ஒரே பையன் டாக்டர்".

"தெரியுமே..."

"சின்ன வயசிலேர்ந்தே சரியில்லை. படிடான்னா படிக்க மாட்டான். சதா புத்தர் மாதிரி ஒரு பார்வை பார்ப்பான். படிக்கணும்கிற அவசியம் இல்லைன்னு சொல்வான். ஞானி மாதிரி தத்துவம் எல்லாம் பேசுவான். எங்களோட இருந்தா சரியா வரமாட்டான்னு திருப்பராய்துறையில் ராம கிருஷ்ணா ஸ்கூல்ல கொண்டு போய் சேர்த்தேன். போன மாசம் உங்க பையனை கூட்டிட்டு போங்கன்னு தபால் வந்திச்சி. என்னடான்னு போய் பார்த்தா ஹோம் வொர்க் செய்ய மாட்டேன், பரீட்சை எழுத மாட்டேன்னு பிடிவாதம் பிடிக்கிறான். ஏண்டான்னு கேட்டா... நீங்களே கேளுங்களேன்.

"சரவணகுமார், இங்கே என்னைப் பாருப்பா. ஏன் பரீட்சை எழுத மாட்டே?"

சரவணகுமார் அவரை நேராகப் பார்த்து, "நீங்க தப்பா நினைச்சுக்கலைன்னா சொல்றேன்" என்றான்.

"தப்பா நினைச்சுக்கல்லை. சொல்லு."

"நீங்க எம்.பி.பி.எஸ். படிச்சி டி.பி.எம். படிச்சிருக்கீங்க. இப்ப போய் உங்களை நாலாம் வகுப்புக்கான பரீட்சை எழுத சொன்னா எழுதுவீங்களா? உங்களுக்கு கோபம் வராது? ஆஸ்கார் அவார்ட் வாங்கின ஒரு பெரிய நடிகனை நடிக்கத் தெரியுமான்னு டெஸ்ட் வச்சிப் பார்க்கிறது முறையா? பி.டி. உஷாவை கூப்பிட்டு நம்மோட ஓடச் சொல்றது சரியா?"

"இல்லைதான். நீ என்ன சொல்ல வர்றே?"

"டாக்டர், ஐ ஏம் கேபபிள் ஆஃப் ரைட்டிங் எம்.ஏ இங்கிலீஷ் லிட்டரட்சர் எக்ஸாமினேஷன்ஸ். எம்.ஏ.சிலபஸ் உள்ள எல்லாம் படிச்சிட்டேன். இந்த நிமிஷமே பரீட்சை எழுதத்தயார். என்னைப் போயி ஆறாவது பரீட்சை எழுத சொன்னா எப்படி சார்?"

"விளையாடறியா நீ? உன் வயசென்ன?"

"இன்னைய தேதிக்கு பனிரெண்டு வயசு, ரெண்டு மாசம், ஏழுநாள், ஆறுமணி நேரம், முப்பத்தி ரெண்டு நிமிஷம்" என்று சுவரில் கிளாக் பார்த்து, "எட்டு விநாடி" என்றான்.

"என்ன படிக்கிறே?"

"படிச்சது போதும்னு வந்துட்டேன். நான்தான் அப்பாவுக்கு லெட்டர் எழுதச் சொன்னேன்."

"சரி என்ன படிச்சே?"

"சொன்னேனே, ஆறாவது."

"பின்னே எப்படி எம்.ஏ.பரீட்சை எழுத முடியும்? கனா கண்டியா?"

"நோ டாக்டர், என்னால எழுத முடியும்.



மெட்ராஸ் வந்ததும் முதல் காரியமா அப்பாவுக்குத் தெரியாம மெட்ராஸ் யுனிவர்சிடி வைஸ்சான்சலர்க்கு போன் பண்ணிப் பேசினேன். இந்த மாதிரி நான் ஆறாவது தான் படிக்கிறேன், ஆனா என்னால எம்.ஏ. பரீட்சை எழுத முடியும், அனுமதிப் பீங்களான்னு கேட்டேன். என்னைத் திட்டிட்டு வச்சிட்டார்."

"அப்படியா? மிஸ்டர் ஜீவா, இது ஒருவித சைக்கோஸிஸ்தான். எக்கச்சக்கமான சுப்பீரியாரிட்டி காம்ப்ளேக்ஸ்" என்று டாக்டர் ஆரம்பிக்க....

"நாட் அட் ஆல் டாக்டர். டோண்ட் வேஸ்ட் யுவர் டைம் ஆன் மி. நான் ஒரு விதி விலக்கான பையன். வொரோசியஸ் ரீடர். உங்க சம்பந்தப்பட்ட புக்ஸ் கூட படிச்சிருக்கேன். எனக்கு டிஸ்ஆர்டர் கிடையாது. ஹிபோமேனியாக், ஸ்கிஸஃபெரெனியா, ஹிஸ்டிரீயா, அப்ஸெஸஷனல் ஸ்டேட்ஆஃப் மைண்ட்-இது எதிலையும் என்னை வகைப்படுத்த முடியாது. வேணுமின்னா பைனட் சொன்ன மெத்தட்ல என்னோட இண்ட்டெலிஜென்சை டெஸ்ட் பண்ணுங்க. மெண்ட்டல் எனஜக்ரனாலாஜிக்கல் ஏஜால வகுத்து நூறால பெருக்கிப் பாருங்க. என்னோட ஐ.க்யூ கிடைக்கும். நிச்சயமாக நூத்தி ஐம்பதுக்கு மேல எகிறி நிக்கும். க்யூபை பதினொரு செகண்ட்ல ஸால்வ் பண்ணினேன். க்யூப் மாதிரி நானே ஒண்ணு டிசைன் பண்ணி வச்சிருக்கேன்."

சரவணகுமார் பேசப்பேச..... டாக்டர் புருவங்கள் உயர பிரமிப்பாக அவனையே பார்க்க ஆரம்பித்தார்.

"பார்த்திங்களா டாக்டர், இத மாதிரிதான் புரியாம பேசறான்" என்ற ஜீவாவைக் கையமர்த்திவிட்டு அவனை சுவாரசியமாகப் பார்க்க ஆரம்பித்தார்.

"எப்படி கண்ணா இதெல்லாம் தெரிஞ்சி வச்சிருக்கே?"

"என்ன டாக்டர் அவனை கொஞ்சுறீங்க? பேயடிச்ச மாதிரி உளறிக்கிட்டிருக்கான்."

"இல்ல சார், உங்க பையன் உளறல்லை. ரொம்பத் தெளிவாத்தான் பேசுறான். பிறக்கிறப்பவே ஜூனியஸா பொறந்திருக்கான். பிராட்டிஜின்னு சொல்லுவாங்க."

"வைத்தியத்துக்கு அழைச்சிட்டு வந்தா ஜீசஸ், காந்திஜின்னுக்கிட்டு என்ன டாக்டர் இது?"

"ஜீவாசார், கொஞ்சம் அமைதியாக இருங்க. சொல்லுப்பா எப்படி இதெல்லாம் தெரிஞ்சி வைச்சிருக்கே?"

"சொன்னேனே டாக்டர், நிறைய படிப் பேன்னு."

"சரி. படிச்சாலும் புரியணுமே...."

"புரியுதே-எழுதினவர் செஞ்சிருக்கிற தப்புக்கள் கூடப் புரியுதே. பாரதியார் எவ்வளவு பெரிய மகாகவி! பளிச் பளிச்சுன்னு வார்த்தைகளை அமிலம் மாதிரி வீசற என்ன ஒரு அற்புத கவிஞர். வந்தே மாதரம் பாட்டு தெரியுமில்லையா டாக்டர்?"

"வந்தேமாதரம் என்போம் -எங்க மாநிலத் தாயை வணங்குதும் என்போம்- அந்தப் பாட்டுத்தானே?"

"அதான் டாக்டர் அதில வேதியராயினும் ஒன்றே- அன்றி வேறு குலத்தினராயினும் ஒன்றேன்னு சொல்லிவிட்டு, ஈனப்பறையர் களேனும்- அவர் எம்முடன் வாழ்ந்திங் கிருப்பவர் அன்றோ?ன்னு கேட்கிறார். இதில 'ஈன'ங்கிற வார்த்தையை பாரதி உபயோகிச் சிருக்கக் கூடாதோன்னு எனக்குப்படுது. அந்த வார்த்தைக்கு வேற ஏதாவது அர்த்தம் இருக்குமான்னு நானும் நம்ம தமிழ்டு தமிழ் என்சைக்கிளோபீடியா அபிதான சிந்தா மணில கூட பார்த்துட்டேன். இல்லை. நீங்க என்ன நினைக்கிறீங்க டாக்டர் இதைப்பற்றி?"

"எனக்கு தமிழ்ல அவ்வளவு புலமை கிடையாப்பா." என்ற ராமகிருஷ்ணன் நாற் காலியை கால்வட்டம் திருப்பி ஜீவானந் தத்தைப் பார்த்து, "சார், உங்க பையன் ஒருபிறவி மேதை. மூளை எக்ஸ்ட்ராவா வேலை செய்யுது."

"ஏதாச்சும் ஆபரேஷன் பண்ணி அதை குறைச்சுட முடியாதா சார்? நான் பெத்த பிள்ளை எனக்கு அந்நியமா போய்கிட்டிருக்கிறான் டாக்டர். எந்த விஷயத்தைப் பத்தி பேசினாலும் உடனே நீளமா இராமாயணம் மாதிரி அதைப் பத்தி பேச ஆரம்பிச்சிடறான். இவ்வளவு புத்தி என்னத்துக்கு டாக்டர்? இவனை வச்சி ரோட்டரி, லையன்ஸ் ஜேசிஸ்ன்னு, சங்கம், சங்கமா ஷோ நடத்தறாங்க டாக்டர். என் பிரெஸ்ட்டிஜீக்குத் தேவையா?"

"ஷோவா? என்ன ஷோ"

"மாஜிக்....மாதிரி"

"இல்லை டாக்டர் மேஜிக் இல்லை. தசாவ தானம் பயிற்சி பண்ணியிருக்கேன். அதாவது ஒரே சமயத்தில பத்துவிதமான செயல்களை என்னால செய்யமுடியும். உதாரணமா டி.வி.பார்த்துக்கிட்டே, ரேடியோல பாட்டுக்கேட்டுக்கிட்டே, நேற்றுப் பார்த்த சினிமாவை நினைச்சிக்கிட்டே, முந்தாநாள் படிச்ச புத்தகத்தை மனசுக்குள்ளே விமர்சிச்சிக்கிட்டே, கவிதை ஒண்ணு சொல்லிக்கிட்டே, பக்கத்து வீட்ல நடக்கிற புருஷன் -பெண்டாட்டி சண்டையை கேட்டுக் கிட்டே, கையில ரூபா எண்ணிகிட்டே, முதுகிலே எத்தனை தடவை தொடறாங் கன்னு கணக்கு பண்ணிக்கிட்டே, ஒவ்வொரு கடலையா வாய்ல போட கடலையை மனசுக் குள்ளே எண்ணிக்கிட்டே, சாப்பிட்டுக்கிட்டே, ரோட்ல மொத்தம் எத்தன தடவை கார் சத்தம் கேட்டுதுன்னு சொல்ல முடியும். இது உதாரணத்துக்குத்தான். இது மாதிரி எந்த வகையான பத்து செய்கைகளையும் ஒரே நேரத்தில என்னால செய்ய முடியும். இது ஒண்ணும் புதுசு இல்லை. திருக்குறள்ல எக்ஸ்பர்ட்டான ராமையான்னு ஒருத்தர் இதே மாதிரி தசாவதானம் செய்தாராம். ஆயிரத்தி முன்னூத்தி முப்பது குறள்ல எந்த குறளோட முதல் வார்த்தையோ, கடைசி வார்தையோ, நடுவில வர்ற ஒரு வார்த்தையோ சொன்னால் போதும் கட கடன்னு குறளைச் சொல்வாராம். அவர் இப்ப இல்லை. இப்ப கணித மேதை சகுந்தலா இல்லையா? கம்ப்யூட்டரை விட சீக்கிரத்திலே எந்தக் கணக்கும் போடுவாங்களே.... அது மாதிரி இதை ஒரு தனி திறமையா எடுத்துக்காம எங்கப்பா எனக்கு ஏதோ ஆய்டுச்சின்னு நினைக்கிறார். நீங்கதான் அவருக்கு எடுத்துச் சொல்லணும்."

"ஏண்டா படவா, உன்னை சரி பண்ண அழைச்சிட்டு வந்தா, எனக்கே எடுத்துச் சொல்லச் சொல்றியா?

"இருங்க மிஸ்டர் ஜீவானந்தம், கோபப்படாதிங்க. உங்க பையனுக்கு எந்த வியாதியும் இல்லை. பேயடிக்கவும் இல்லை. பில்லி, சூன்யமும் இல்லை."

"நான் நம்பமாட்டேன். இவனை தரோவா செக் பண்ணுங்க. இரத்தம் எடுத்துப் பாருங்க. மண்டையை எக்ஸ்ரே எடுத்துப் பாருங்க. எங்கயோ தப்பு ஆயிருக்கு."

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: ஜெதயாளன்
வயது: 20
முகவரி: 96/13, மாகம்மன, ராகம.
பொழுதுபோக்கு: வானொலி, சினிமா, நண்பர் தொடர்.



பெயர்: எம். மஜீத்
வயது: 23
முகவரி: 32/3, ஆலங்குடா, ஏத்தாலை, புத்தளம்.
பொழுதுபோக்கு: வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை.



பெயர்: எஸ். கௌரி
வயது: 18
முகவரி: இல.19, தோமஸ் லேன், மட்டக்களப்பு.
பொழுதுபோக்கு: வழமையானவை.



பெயர்: டபிள்யூ. மன்சூர்
வயது: 22
முகவரி: 12/22, MASOUTHI STREET, M.R. PATTINAM, TAMILNADU, S. INDIA-623409.
பொழுதுபோக்கு: பத்திரிகை, பேனா நட்பு தொலைக்காட்சி.



பெயர்: ஆர். சிவஜோதி
வயது: 25
முகவரி: A.M.S.M. P.O. BOX-1118, YAWBU-K.S.A.
பொழுதுபோக்கு: பத்திரிகை படித்தல், நண்பர்களுடன் அரட்டை.



பெயர்: எம். பாரிஸ்
வயது: 22
முகவரி: 98/26, வீட்டுத்திட்டம், புதிய வீடு, வெலிகம.
பொழுதுபோக்கு: கிரிக்கெட், பத்திரிகை, நண்பர் தொடர்பு.

பெயர்: கே. சந்தரம்
வயது: 26
முகவரி: 66 ஏ. காலி வீதி, தெஹிவலை.
பொ.போ: வானொலி, சினிமா, கதைப்புத்தகம்.

பெயர்: ஆர். நூர் முஹமட்
வயது: 16
முகவரி: இல. 3, பள்ளி வீதி, பொகவந்தலாவ..
பொ.போ: பத்திரிகை, சினிமா, உதைபந்து.

பெயர்: பி. பரன்
வயது: 21
முகவரி: CAUDRY-07, 1020, RENENS, SWITZERLAND..
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: ஏ. அஸ்லம்
வயது: 18
முகவரி: 33, மகுதி வீதி, திருகோணமலை.
பொ.போ: சினிமா, தொலைக்காட்சி.

பெயர்: வி. சிவா
வயது: 26
முகவரி: 71/1, பிரதான வீதி, பண்டாரவளை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: எம். றியாஸ்
வயது: 17
முகவரி: 387/1, புளுகொஹதென்ன, அக்குறணை.
பொழுதுபோக்கு: வானொலி, டிவி, கதைப்புத்தகம்.



படிப்பகம்

www.padippakam.com

44

# தாய்

## மக்சீம் கார்க்கி

**சி**லர் பிரமாதமான தைரியசாலிகள் போலப் பாவனை பண்ணிக் கொண்டிருந்தார்கள். பெண்களின் கசமுசப்புக்குரல் மங்கியொலித்தது. அவர்கள் பக்கத்திலிருந்து ஆண்கள் விலகிச் சென்றார்கள்; வைது திட்டும் வசவுக் குரல்கள் மங்கி ஒலித்தன. அந்தக் குழம்பிக் குமைந்து நின்ற கும்பலில் ஒரு இனந்தெரியாத வெறுப்புணர்ச்சி சலசலத்தது.

"மீத்யா!" என்று ஒரு ஒடுக்கக் குரல் கேட்டது. "உன்னைக் கவனித்துக்கொள்!"

"என்னைப்பற்றிக் கவலைப்படாதே" என்று ஒலித்தது பதில்.

சிஸோவின் அழுத்தமான குரல் அமைதியாகவும் ஆணித்தரமாகவும் ஒலித்தது:

"இல்லை. நாம் நமது பிள்ளைகளைப் புறக்கணித்து உதறித் தள்ளிவிடக் கூடாது. நம்மைவிட அவர்களுக்கு அதிகமாக அறிவு உண்டு, துணிச்சல் உண்டு. சாக்கடைக் காசு சம்பவத்தின்போது, அதைத் துணிந்து எதிர்த்து நின்றது யார்? அவர்கள்தான்! அதை நாம் மறந்துவிடக் கூடாது. அவர்கள் அதற்காகச் சிறைக்குச் சென்றார்கள்; ஆனால், அதனால் பயன் அடைந்ததோ நாம் அனைவரும் தான்."

ஜனங்களுடைய குரல்களையெல்லாம் விழுங்கியவாறு, ஆலைச் சங்கு தனது அமுமூஞ்சிக் குரலில் அலறியது. கூட்டத்தாரிடையே ஒரு சிறு நடுக்கம் குளிர்ந்தோடிப் பரவியது. உட்கார்ந்து கொண்டிருந்தவர்கள் எழுந்து நின்றார்கள். ஒருகண நேரம் எல்லோரும் வாய்மூடி கம்மென்று இருந்தார்கள். எல்லோரும் விழிப்போடு நின்றார்கள். பலருடைய முகங்கள் வெளுத்துப் பசந்தன.

"தோழர்களே!" பாவெலின் செழுமையான மணிக்குரல் கணீரென ஒலித்தது.

தாயின் கண்களில் கதகதப்பான நீர்த்திரை உறுத்துவது போல் இருந்தது; அவள் விசுக்கென்று தாவிச் சென்று தன் மகனருகே நின்றுகொண்டாள். எல்லோரும் பாவெலின் பக்கமாகத் திரும்பினார்கள்; காந்தத்தால் இழுக்கப்பட்ட இரும்புத் தூளைப்போல் எல்லாரும் அவனைச் சுற்றி சூழ்ந்து கொண்டார்கள்.

தாய் அவனது முகத்தைப் பார்த்தாள். தைரியமும் கர்வமும் கனன்று பிரகாசிக்கும் அவனது கண்களையே மட்டும் கவனித்துப் பார்த்தாள்.

"தோழர்களே! இன்று நாம் யார் என்பதைப் பகிரங்கமாகப் பிரகடனப் படுத்துவதென்று முடிவு செய்திருக்கிறோம்; இன்று நாம் நமது கொடியை உயர்த்துவோம். நமது கொடியை-அறிவு, நியாயம், சுதந்திரம் முதலியவற்றின் சின்னமான நமது கொடியை ஏந்திப்பிடிப்போம்!"

திடீரென்று ஒரு வெள்ளையான கொடிக்கம்பம் வானில் மேலோங்கி, மீண்டும் கூட்டத்திடையே தாழ்ந்து இறங்கியது. அந்தக் கொடிக்கம்புக்கு வழிவிட்டு மக்கள் விலகினர். ஒரு கணநேரம் கழித்துத் தொழிலாளர் வர்க்கத்தின் விசாலமான செங்கொடி, அண்ணாந்து நோக்கும் மக்களின் முகங்களுக்கு மேலாக நிமிர்ந்து உயர்ந்தது; ஒரு பெரும் செம்பறவையைப் போல் சிறகடித்துப் பறக்க ஆரம்பித்தது!

பாவெல் தன் கையை உயர்த்திக் கொடியை ஆட்டினான்.பல பேருடைய கைகள் அந்த வெண்மையான கொடிக் கம்பைப் பற்றிப் பிடித்தன; அவற்றில் தாயின் கரமும் பங்கெடுத்துக் கொண்டிருந்தது.

"தொழிலாளர் வர்க்கம் நீடூழி வாழ்க!" என்று கோஷித்தான் பாவெல்.

நூற்றுக் கணக்கான குரல்கள் அந்தக் கோஷத்தை எதிரொலித்தன.

"சோஷல்-டெமொக்ரடிக் தொழிலாளர் கட்சி நீடூழி வாழ்க! இதுதான் நமது கட்சி, தோழர்களே, நமது கருத்துக்களின் ஜீவ ஊற்று!"

ஜனக்கூட்டம் பொங்கியது; அந்தக் கொடியின் மகத்துவத்தை உணர்ந்தவர்கள் அதனை நோக்கி விரைந்து சென்றனர். எனவே மாசின், சமோய்லவ், கூஸெவ் சகோதரர்கள் முதலியோர் அனைவரும் பாவெலை அடுத்து வந்து நின்று கொண்டார்கள். நிகலாய் தன் தலையைக் குனிந்து, கூட்டத்தை பிளந்து கொண்டு முன்னேறினான். தனக்கு இனந்தெரியாத வேறு சில உற்சாகம் நிறைந்த வாலிபர்கள் தன்னை நெருங்கித் தள்ளிக் கொண்டு முன்னேறுவதை தாய் உணர்ந்தாள்.

" உலகத் தொழிலாளிகள் நீடூழி வாழ்க!" என்று கோஷித்தான் பாவெல்.

உவகையும் சக்தியும் நிறைந்து விளங்கும் ஆயிரக்கணக்கான மக்களின் உள்ளத்தைக் கிளறும் ஜெயகோஷம் எதிரொலித்து விம்மியது.

தாய் நிகலாயின் கரத்தையும் வேறு யாரோ ஒருவனுடைய கரத்தையும் பற்றிப் பிடித்துக் கொண்டாள். கண்ணீர் முட்டித் ததும்பத் தொண்டை அடைத்துத் திணறினாள் அவள்; எனினும் அவள் கூச்சலிடவில்லை. அவளது முழங்கால்கள் நடுங்கின. துடிதுடிக்கும் தன் உதடுகளை அசைத்து அவள் ஏதோ முணுமுணுத்தாள்.

"என் அருமைப் பிள்ளைகளே....."

நிகலாயின் அம்மை விழுந்த முகத்தில் ஒரு பரந்த புன்னகை டளிச்சிட்டுத் தோன்றியது. கொடியைப் பார்த்தவாறே அவன் ஏதோ முணுமுணுத்துக்கொண்டு அதை நோக்கிக் கையை நீட்டினான். திடீரென்று அதே கையால் தாயின் கழுத்தைச் சுற்றி வளைத்து அவளை முத்தமிட்டான். பிறகு கடகடவென்று சிரித்தான்.

"தோழர்களே!" என்று அந்தக் கூட்டத்தினரின் கர்ஜனைக்கிடையிலே குறுக்கிட்டு அமைதியாகச் சொன்னான் அந்திரேய்; "தோழர்களே! இன்று ஒரு புதிய கடவுளின் பேரால் அறிவும் ஒளியும் தரும் புதிய ஆண்டவனின் பேரால்,சத்தியமும் நன்மையுமே உருவான சாமியின் பேரால் நாம் ஒரு அறப்போர் தொடங்கியிருக்கிறோம். நமது இறுதி இலட்சியம் வெகு தொலைவில் இருக்கிறது. ஆனால் நமக்குக் கிடைக்கவிருக்கும் முள் கிரீடமோ கையெட்டுத் தூரத்தில்தான் இருக்கிறது. சத்தியத்தின் வெற்றியில், உண்மையின் வெற்றியில் எவருக்கேனும் நம்பிக்கை குறைவாயிருந்தால், இந்த சத்தியத்துக்காகத் தங்களது வாழ்க்கையையே அர்ப்பணம் செய்ய எவருக்கேனும் அவநம்பிக்கையிருந்தால், துன்பத்தைக் கண்டு எவரேனும் அஞ்சினால், தயை செய்து அவர்கள் ஒருபுறமாக ஒதுங்கி நிற்கட்டும். நமது வெற்றியிலே நம்பிக்கை கொள்பவர்களை மட்டுமே நாம் கேட்டுக்கொள்கிறோம், அறைகூவல் விடுகிறோம். எங்களது லட்சியத்தைக் காண முடியாதவர்களுக்கு எங்களோடு அணிவகுத்து முன்னேறுவதற்கும் உரிமை கிடையாது. ஏனெனில் அப்படிப்பட்டவர்களுக்குப் பின்னால் துயரம்தான் காத்துநிற்கும். எங்களது அணிவகுப்பில் சேருங்கள், தோழர்களே! சுதந்திர மக்களின் விழாநாள் நீடூழி வாழ்க! மே தினம் நீடூழி வாழ்க!"

கூட்டம் மேலும் அதிகரித்துக் குழுமியது. பாவெல் கொடியைத் தாங்கிப் பிடித்தான்; அவன் அதை உயரத் தூக்கியவாறு முன்னேறிச் சென்றபோது அந்தக் கொடியில் சூரியஒளி பட்டுப் பிரகாசித்தது; அந்தக் கொடி உவகையும் ஒளியும் நிறைந்து புன்னகை செய்தது.


பியோதர் மாசின் பாட ஆரம்பித்தான்:

**போதும், போதும்! நேற்றையுலகின்**
**பொய்மை தன்னைப் போக்கவே.....**

பல்வேறு குரல்கள் அவனோடு சேர்ந்து, அந்தப் பாட்டின் அடுத்த அடியைப் பாடின:

**பாத மண்ணை உதறித் தள்ளிப்**
**படையில் சேர வருகுவீர்!**

தாய் மாசினுக்குப் பின்னால் நடந்து வந்தாள். அவளது உதடுகளில் உவகை



நிறைந்த புன்னகை பளிச்சிட்டது; அவனுக்கு முன்னால் சென்றுகொண்டிருக்கும் தன் மகனின் தலையையும், கொடியையும் அவள் மிகவும் சிரமப்பட்டு ஏறிட்டுப் பார்த்தாள். அவளைச் சுற்றி எங்கு பார்த்தாலும் மகிழ்ச்சி நிறைந்த முகங்களுக்கும் கண்களுக்கும் முன்னால் அவளது மகன் பாவெலும் அந்திரேயும் முன்னேறிச் சென்று கொண்டிருந்தார்கள். அவர்கள் இருவரும் பாடிக் கொண்டே செல்வதை அவளால் கேட்க முடிந்தது. அந்திரேயின் இனிமையான குரல், பாவெலது கனத்த குரலோடு கலந்து கொண்டிருந்தது:

**பட்டினியும் பசியுமாகாப்**
**பாடுபடும் தோழர்காள்!**
**துயில் கலைந்து அணியில் சேர**
**விரைந்து வாரும் தோழர்காள்!**

மக்கள் அந்தச் செங்கொடியை நோக்கி விரைந்தோடி வந்தார்கள். ஓடிவரும்போதே அவர்கள் உற்சாகத்தோடு சத்தமிட்டார்கள்; பின்னர் அவர்களும் அந்தப்பாட்டை உரத்த குரலில் பாட ஆரம்பித்தார்கள். எந்தப் பாடலை அவர்கள் தங்கள் தங்கள் வீட்டுக்குள் வெளிக்குத் தெரியாமல் பாடி வந்தார்களோ, அதே பாடல் இன்று தெருவில் எந்தவித தங்கு தடையுமின்றி பிரமாண்டமான அசுரவேகத்தோடு பொங்கிப் பிரவகித்து ஒலித்தது. கட்டுப்படுத்த முடியாத துணிவாற்றலோடு ஒலித்து விம்மியது. மேலும் அந்தப் பாடல் எதிர்காலத்தை நோக்கிச் செல்லும் நெடிய பாதையில் வந்து கூடும்படி மக்களை அறைகூவி அழைத்தது. அந்தப்பாதை எவ்வளவு கரடுமுரடான பாதை என்பதையும் அவர்களுக்கு வெளிப்படையாகச் சொல்லியது. அந்தப் பாடலில் நிதானமான செந்தழல் உளுத்து ஓடாகி உதவாக்கரையான சகலவற்றையும், அழுகி இறுகி அடைந்து போன சம்பிரதாய உணர்ச்சிகளின் குப்பை கூளங்களையும், மக்களின் மனதிலே ஊடாடும் புதியதின் பய பீதியையும் பற்றிப் பிடித்து, அவற்றைச் சுட்டுச் சாம்பலாக்கிப் பொசுக்கித் தள்ளியது.

பயமும் மகிழ்ச்சியும் கலந்த ஏதோ ஒரு முகம் திடீரென்று தாயின் அருகே வந்து எட்டிப்பார்த்தது; பிறகு நடுநடுங்கிக் களைத்துப்போன குரலில் கேட்டது:

"மீத்யா! நீயெங்கே போகிறாய்?"

"அவன் போகட்டும்" என்று சொன்னாள் தாய். "நீ அவனைப் பற்றிக் கவலைப்படாதே, நானும் கூடத்தான் முதலில் பயந்து போனேன். அதோ முன்னால் கொடியை பிடித்துக் கொண்டு போகிறான், பார். அவன்தான் என் மகன்!"

"ஏ முட்டாள்களே! எங்கேயடா போகிறீர்கள்? அங்கே சிப்பாய்கள் நிற்கிறார்களடா!"

நெட்டையாகவும் ஒல்லியாகவும் இருந்த அந்தப் பெண்பிள்ளை தாயின் கரத்தை தனது எலும்புக் கரத்தால் திடீரெனப் பற்றிப் பிடித்துக் கொண்டு சத்தமிட்டாள்:

"ஆஹா! அவர்கள் பாடுவதைக் கேளம்மா. என் மகனும் கூடப்பாடுகிறான்!"

"நீ ஒன்றும் பயப்படாதே" என்று சொன்னாள் தாய்; "இது ஒரு புனிதமான காரியம். நினைத்துப்பார், கிறிஸ்துவுக்காக மக்கள் செத்திராவிட்டால், கிறிஸ்துவே இருந்திருக்கமாட்டார்."

இந்த எண்ணம் அவள் மனதில் திடீரென்று பளிச்சிட்டுத் தோன்றியது. அந்த எண்ணத்தில் பொதிந்திருந்த தெளிவான, எளிதான உண்மையை உணர்ந்து, அவள் ஒரே புளகாங்கிதம் எய்தினாள். தனது கையை அழுத்தமாகப் பற்றிப்பிடித்துக் கொண்டிருக்கும் அந்தப் பெண்ணின் முகத்தைப் பார்த்தாள்.

"ஆமாம்! கிறிஸ்துவுக்காக மக்கள் சென்று செத்திராவிட்டால், கிறிஸ்துவே இருந்திருக்க மாட்டார்!" என்று வியப்பு நிறைந்த புன்னகையோடு திரும்பவும் அதைக் கூறிக்கொண்டாள்.

சிஸோவ் அவள் பக்கமாக வந்தான்.

"இன்று பகிரங்கமாகவே புறப்பட்டு விட்டீர்களா?" என்று சொல்லிக் கொண்டே அவன் தன் தொப்பியை எடுத்து அந்தப் பாட்டின் சந்தத்திற்குத் தக்கவாறு ஆட்டிக் கொண்டான். "பாட்டா பாடுகிறார்கள்! ஆஹா, இது எவ்வளவு அருமையான பாட்டு, அம்மா!"

**போரணியில் சேர, வீரர்**
**ஜாரரசன் கேட்கிறான்;**
**ஜாரரசன் போர் நடத்தத்**
**தாரும் உங்கள் மக்களை!**

"இவர்களுக்குக் கொஞ்சம்கூடப் பயமில்லையே!" என்றான் சிஸோவ்; "செத்துப்போன என் மகன் மட்டும் இருந்தால்....."

தாயின் உள்ளம் படபடத்துத் துடித்தது; எனவே அவள் வேகமாகச் செல்ல முடியாமல் பின்தங்கி விட்டாள். ஜனக்கூட்டம் அவளை நெருக்கித் தள்ளி, ஒரு வேலிப்புறமாக நெட்டித் தள்ளியது; அவளைக்கடந்து ஒரு பெரிய ஜனத்திரள் அலைமோதிக் கொண்டு முன்னேறியது. அந்தக் கூட்டத்தில் நிறையப்பேர் இருந்தார்கள். அதைக்கண்டு அவள் ஆனந்தமுற்றாள்.

**துயில் கலைந்து அணியில் சேர**
**விரைந்து வாரும் தோழர்காள்!**

ஏதோ ஒரு பிரமாண்டமான பித்தளையாலான எக்காளம் தனது அகன்ற வாயின் வழியாக, அந்தப் பாடலைப் பொழிந்து தள்ளுவது போலவும், அந்த எக்காள நாதத்தைக் கேட்டு ஜனங்கள் விழித்தெழுவது போலவும், விழித்தெழுந்து போருக்கு கிளம்புவது போலவும் தோன்றியது. மேலும் மற்றவர்களின் உள்ளத்தில், ஏதோ ஒரு இனந்தெரியாத இன்ப உணர்ச்சியையும், புதுமையையும், ஆர்வம் மிகுந்த குறுகுறுப்பையும் உண்டாக்குவது போலவும் தோன்றியது. ஒரு பக்கத்தில் அந்த நாதம் சிலர் மனத்தில், தைரியமற்ற நம்பிக்கைகளுக்கும் இடம் கொடுத்தது.

(தொடர்ந்து வரும்)

## நாக்கீயா

### கனகசபை தேவகடாட்சம்



**ஞா**யிற்றுக்கிழமைதான் இன்று! வழக்கம் போல் காலை ஐந்து மணிக்கு நித்திரைவிட்டு எழுந்துவிட்டேன். இன்று விடுமுறை நாள்தானே. படுக்கையில் கிடந்து கொண்டு அன்று செய்யவேண்டியதை அட்டவணைப்படுத்தினேன்.

காரியாலயத்தில் கட்டுச்சோறு உண்ட எனக்கு இன்று சுடுசோறு உண்ணும் நன்நாள். காலையில் 'மார்க்கட்'டிற்கு சென்று நல்ல மீன் வாங்க வேண்டும். போகின்ற வழியில் நவத்தையும், கோணேசையும் சந்தித்து மாலை கடற்கரைக்குப் போவது பற்றிக் கூறுவது; அதற்கிடையில் சுந்தாவை சந்தித்து அவனின் 'விழியோரக் கனவுகள்' என்ற சிறுகதை தொகுப்பை வாங்கிக் கொண்டு வந்து படிப்பது! இயலுமானால் இன்று விடுமுறை நாள் என்று கூறி அவனையும் கடற்கரைக்கு அழைப்பது! என்ற திட்ட அட்டவணையுடன் குளிப்பதற்கு கிணற்றடிக்குச் செல்கிறேன்.

கண்ணாடியின் முன் முழுகிய தலையை துவட்டிக்கொள்கிறேன். ஒருவார இடைவெளியில் உறங்கியிருந்த 'டை' மெது மெதுவாக என் தலையின் கேசத்தில் இருந்து விடைபெற்றுக் கொண்டிருந்தது. அதாவது என் இளமையும் கூடத்தான்.

இப்போது வேடம் கலைந்த உண்மை உருவம். 'இன்னும் ஒருவருடம்தான் உள்ளது. நீ 'பென்சனில்' போவதற்கு' என்று என்முன்னால் இருந்த கண்ணாடி எள்ளிநகையாடியது. என்னுள் இருந்த இளமை உணர்வு துள்ளி எழுந்தது. அந்த 'டை' ப் போத்தலை தேடுகிறேன். மீண்டும் ஓர் இளமைக்கு!

அப்போது தூரத்தில் ஒலிபெருக்கியின் அறிவித்தல். மனைவி பதறிக்கொண்டிருக்கிறாள். "ஏன் பயப்பிடுகிறாய்? அது நெல்சன் தியேட்டர் படவிளம்பரம்" என்றேன் பயப்படாதவன்போல் பாவனையில். இப்போது ஒலிபெருக்கி அறிவித்தல் துல்லியமாகக் கேட்டது.

"பாதுகாப்பு படையினரால் உவர்மலைப் பகுதி சுற்றி வளைக்கப்பட்டுள்ளது. தப்பிஓட முயற்சி செய்பவர்கள் சுடப்படுவார்கள். எனவே, மூத்த அங்கத்தினரை மட்டும் வீட்டில் விட்டு மற்றவர்கள் உவர்மலை குழந்தையேசு ஆலயத்திற்கு வரவும். வரும் போது அடையாளஅட்டை, குடும்பஅட்டை கொண்டுவரவும்.

இப்போது எனக்கு அந்த இளமையும், டையும் நினைவைவிட்டு ஓடிவிட்டது. இப்போது நானா, மனைவியா, குழந்தையேசு கோவிலுக்குச் செல்வது? சடுதியானமுடிவு! அடையாள அட்டை, ஆவணங்களுடன் சுற்றிவளைப்பிற்கு யேசு ஆலயத்திற்கு ஓடுகிறேன்."

'முகமூடிகள்' முன் அமைந்த வரிசையில் நகர்ந்து கொண்டிருக்கிறேன். தலையாட்ட, தலையாட்ட, தள்ளப்படுகிறார்கள். உயிரை கையில்பிடித்துக் கொண்டு நிற்கிறேன். அதில் ஒரு பாதுகாப்பு உத்தியோகத்தர் அழைக்கிறார். உடல் வியர்க்கின்றது.

"மே! அற நாக்கியாட்ட யண்டகியாண்ட" (இந்தா! அந்தக் கிழவனை போகச்சொல்லு) நான் எண்ணியதற்கு மாறு! யேசு சொரூபத்தை நோக்கி ஒரு நன்றி! மற்றது 'டை'க்கு! 'டை' அடிக்காததன் நன்மையை யோசிக்கிறேன். மீண்டும் யேசுவை நோக்கி ஓர் பிரார்த்தனை! வட-கிழக்கிற்கு தடை செய்யப்பட்ட பொருட்களுடன் இந்த 'டை'யும் அடங்கவேண்டும்! இந்த இளமை வேண்டாம். நாம் 'நாக்கியா' வாகவே வாழ வேண்டும்!.

## விதியே... பதிலெழுது

**த**மிழினி தயாராகிவிட்டாள்... மெலிதான விசும்பலோடு...., பிரிவுப்பழுவோடு, அந்தக் குடும்பம் குடியகல்வது-நடைமுறையாகப் போகிறது-இன்னும் சில நிமிடங்களில். ஒன்றா இரண்டா இருபது ஆண்டுகளாய் என்னுள் ஊறிப்போனவளே நாம் விழித்துக்கொள்ளுமுன் பிரிவு உதயமாகிப்போனதே!

'தேரும் நல்லூரில் போரூர்வலம் அரங்கேறும் போது நீ அவசியம் போயாகணுமா...? சாம்பல் திடல்களில் நீபோயென்ன சாதனையை விதைக்கப் போகிறாய்...'? என் சுயநல வேண்டுகோள்...! உன்னைப் பிரிய முடியாது என்னால்...!

"தமிழினி... ப்ளீஸ் போகாதை..."

"ஏய்... உனக்கென்ன விசரா பிடிச்சிருக்கு? விரும்பியோ விரும்பாமலோ நாங்கள் போய்த்தானே ஆகவேணும். தொழில் மாற்றம் காரணமாக வந்தம். கூடாரவாசிகள் போல வாழ்ந்தம். நிரந்தரமாக இருக்கேலுமே? எங்கடை சகல சௌகர்யங்களும் அங்கையெல்லே...? ஆவணிக்கு நாளிருக்குதாம். கலியாணம் செய்தாப்பிறகு கட்டாயம் வருவன். நீயொண்டுக்கும் பயப்பிடாதையப்பா. நான் போய் கடிதமெழுதுவன்." தோள்தொட்டு கண்கலங்கினாள்- பன்னிருவருட பள்ளிப்பயணத்தை முடித்துக்கொண்டு... ஏராளமான அறுவடைக் கனவுகளுடன் தமிழினி நடக்கின்றாள்.

கிழக்கின் நினைவுகளைப் பத்திரப்படுத்திக் கொண்டும் வடக்கின் நியதிகளுக்கு தன்னைத் தயார்படுத்திக்கொண்டும்..., வடக்கே போகும் பயணியாய்... என்னை முத்தமிட்டு, ஒரு யாத்திரையின் முத்திரையோடு, விசும்பி விழிகசிந்து, விக்கித்து, கையசைத்து... பிரிய



ஆத்மராஜா றூத் சந்திரிக்கா

மனமின்றிப் பிரிந்து மெல்ல மெல்ல... மறைந்து போகிறாள்.

என் விழித்திரையில் மங்கலாகி மங்கலாகித் தொலைந்து போகிறாள். விழிநீர்ப்படலம் சிதைந்து பிரிவின் கொடுமைக்கு வடிகாலாகிறது. தினமும் காத்திருக்கிறேன்... அவள் வருவாள் என்னும் எதிர்பார்ப்பில். பால்யம் முதல் வாலிபம் வரை தொடர்ந்த அவளின் நினைவுகளைப் பத்திரப்படுத்தியவாறு நிகழ்காலத்தின் நிமிடங்களை யுகங்களாக்கி காத்திருக்கிறேன். நினைவுகளை மீட்டு மீட்டுக் காத்திருக்கிறேன். அதிலும் ஒரு சுகம்-ஆத்ம சுகம் தெரிகிறது.

வாழ்வின் சுவாரஸ்யங்களை...., சோகங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு அவளில்லாமல்... வேலிக்கட்டையில் தனித்திருக்கும் ஒரு சிறுகுருவிபோல காத்திருக்கிறேன்... அவள் பதிலுக்காக.... தினம்தினமாய்.

வடக்குப் பொதிகளோடு வருமா... அவள் மடல்? நான் நிம்மதியாய் சுவாசிப்பதற்கு. இடைவெளியான இதயங்களின் எண்ணப் பரிமாறல்களை எழுத்தில் வடிகாலாக்கும் தினம்வருமா...? விரைவில் வருமா...? இன்றே... இப்போதே வருமா?

பதில் வந்தது....!

பாரிய இடிவந்தது...!

அவளிடமிருந்தல்ல-அவள் தந்தையிடமிருந்து.

எஞ்சிப்போன குடும்பத்தின் பாவப் பிறவியிடமிருந்து.

ஒரு மஞ்சள் கயிறேற வேண்டிய நீயேன் பஞ்சு பஞ்சாய் சிதறிப்போக வேண்டும்? கொடிய ஷெல்லுக்கு நீயேன் பலியாகவேண்டும்...?'

'த...மி...ழி...னி...ய்...ய்...'

என் உயிருக்குள் ஊறிப்போனவளே- உன் உடலுக்குள் இத்தனை துளைகளா...? ஏனிந்த சாபக்கேடு...? இது விதியா

'ஓ...இறைவா...மண்ணில் மனிதனை விதைத்தவனே... இப்போது அறுவடையா...?'

வாழ்க்கையின் நியதிகளை வெறித்துப் பார்க்கிறேன்.

மனித வாழ்வுக்குப் பொருளில்லையா...?

முளையிலும் பயிரிலும் முறிந்து போகிறதே இளந்தளிர்கள்!

முறிந்தால் துளிர்க்க வழியில்லையா...?'

அவளே... என்னுள். விழித்திரையிலும் மனத்திரையிலும்...

அந்த வெண்மலரின் நினைவுகளோடு வெந்துபோகின்றேன்.

வாழ்க்கைப் பயணத்தின் முடிவுவரை அவள் நினைவே நிரந்தரமானதாய் தொடரும். பிரிவுச்சத்திராதியான யுத்தமே ஓடிவிடு என் தேசத்தைவிட்டு, விரைவாய்.



படிப்பகம்

www.padippakam.com

மேரியைக் கண்டதும், பலசரக்குக் கடை முதலாளி கந்தசாமிக்கு, எங்கிருந்து அப்படியொரு உற்சாகம் வந்ததோ தெரியவில்லை? வாயெல்லாம் பல்லாக கல்லாவில் இருந்து தானாகவே எழுந்து நின்றார். நாற்பத்தைந்து வயது தலைமயிரின் நரைப்பகுதியை பின்னால் தள்ளிவிட்டுக் கொண்டார்.

"என்ன வேணும் பொண்ணு?"

–என்றவரின் பார்வை அவளது மார்புப் பகுதியில் சபலமாய்ப் படர, மேரி சேலைத் தலைப்பைச் சரிசெய்து கொண்டாள். அவளுடம்பு கூசியது.

தினம்தோறும் இப்படித்தான்.

கந்தசாமி தன்மீது ஒரு (கழுகுக்) கண் வைத்திருப்பது அவளுக்குத் தெரியும்.

"சர்க்கரை கால் கிலோவும், ஊதுவத்திப் பாக்கெட்டும் கொடுங்க அண்ணே"

கந்தசாமி சர்க்கரையை நிறுவை செய்து கொண்டே கேட்டார்.

"சூசை எங்கே வேலைக்குப் போயிருக்கானா?"

"ஓம்.."

"பாவம் பொண்ணு... அவனும்தான் உனக்காக பாடாய்ப்படுறான். பணக் கஷ்டம் யாருக்குத்தான் இல்ல. ஏதாவது தேவைன்னா என்கிட்டக் கேளு பொண்ணு..."

மேரிக்கு அவரது கேள்வியின் அர்த்தம் புரிந்தது.

–மவுனமாயிருந்தாள்.

"என்னோட பொஞ்சாதி செஞ்சுலட்சுமிக்கும் உடம்புக்கு முடியல. உடம்பு வத்திப்போச்சு. உனக்கு நேரம் பட்டா கடைப்பக்கம் வா பொண்ணு... பின்னால கோடவுண் அமைச்சிருக்கேன்" என்றவரின் பார்வை மீண்டும் அவளுடம்பு பூராவும் ஊர்ந்துபோக... அவளுக்கு அருவெறுப்பாயிருந்தது.

"இந்த வேலையெல்லாம்–பொறம்போக்கு வெளாட்டெல்லாம் என்கிட்ட வச்சுக்க வாணாம் அண்ணே... மச்சான்கிட்ட சொல்லிப்புடுவன்..."

–மேரி வார்த்தையில் வெந்தாள்.

"என்ன பொண்ணு நீ இதுக்குப் போயி கோபப் படுறே..."

–என்றவர் சர்க்கரையையும் ஊதுவத்தியையும் கொடுக்க, வாங்கக் கை நீட்டியவளின் உள்ளங் கையைப் பற்றி கந்தசாமி மிருதுவாய் அழுத்த, உடம்பு பதறி நடுங்கிப்போன மேரி... சடாரென்று தன் கையை விடுவித்து ஓரமாகி, கீழேயிருந்த வாழைப்பழத் தோலில் கால் வழுக்கி,

பின்னால்... பின்னால்... பின்னால் போய் தகரப் பீப்பாவில் மோதுண்டு, அந்த வேகத்திலேயே விசுரப்பட்டு தொம்பென்று முறைகேடாய் நிலத்தில் விழுந்து...

அவளது பாதம் வழியே... தொடைகளுக்கு நடுவே ரத்தம் பீய்ச்சிட்டது.

வயிற்றில் ஏற்பட்ட பலமான அடியில் மேரி 'அம்மா' என்று போட்ட கூச்சலில் கடையைச் சுற்றி சனம் சேர்ந்தது. சுற்றியிருந்தவர்களிடம் கந்தசாமி சொன்னார்.

"பாவம்... பொண்ணு கால் தடுக்கி விழுந்துட்டாள்!"

◆◆◆

நாட்டு வைத்தியர் முருகேசு ஐயா சூசையிடம் சொன்னார்.

"பொண்டாட்டி உண்டாகியிருக்காளே கொஞ்சம் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளப்படாது. இப்போது பாரு... வயித்துல ஏற்பட்ட அடியில கொழந்தக் கரு கலைஞ்சிடுச்சு. உன் சம்சாரத்துக்கு ஒண்ணுமில்லை. மூலிகை மருந்து கொடுத்திருக்கேன். எல்லாம் சரியாப் போயிடும்."

சூசை கண்ணீரோடு நின்றிருந்தான்.

வைத்தியர் நகர்ந்ததும் படுக்கையில் இருந்த மேரியிடம் கேட்டான்.

"என்ன புள்ள செஞ்சுக்கிட்ட நீ..."

–அவன் குரலில் தழும்பினான்.

மேரியினால் பேச முடியவில்லை. அழுகை அடைத்தது. அப்படியே கண்களில் நீரோடு நடந்த அத்தனையையும் சொன்னாள். வரி பிசகாமல்.

அவள் சொல்லச் சொல்ல சூசையின் உடம்பு துடித்தது.

ஆக்ரோஷமாய் எழுந்தான்.

"ராஸ்க்கல்... கொல்லையில போக... அவனைக் கொன்னு சமாதி கட்டினாத்தான் என் ஆத்திரம் அடங்கும் புள்ள. அவனைக் கண்டதுண்டமா வெட்டிப் புட்டு வந்துடுறேன் புள்ள..."

என்று நகர முற்பட்டவனை மேரி தடுத்தாள். கெஞ்சலாய்...

# ஒரே பூ மணம்




மாவனல்லை ரிஸ்கி ஷெரீப்

"அவனைக் கொன்னுப்புட்டு நீ ஜெயிலுக் குப் போனால் எனக்கு இங்கு யாரிருக்கா மச்சான். சொல்லு... நீ தூக்குல தொங்கு றதைப் பாத்துப்புட்டு நான் உடம்புல உசிரை சுமந்துட்டு இருப்பேன்னு நெனைக் கிறயா மச்சான்..."

அவனால் நகர முடியவில்லை.

அப்படியே சிலையாகிப் போனான்.

ஆனாலும்...

மௌனமாய் அவன் மனதுக்குள் ஒரு திட்டம் போட்டான்.

'பழி வாங்குறேன்ரா உன்னை!'

–மெல்லமாய் சொல்லிப் பார்த்துக் கொண்டான்.



சூசை மூன்று நாட்களாக வேலைக்குப் போகவில்லை.

பொண்டாட்டிக்கு சுகமில்லையென்று சொல்ல, முதலாளி கையில் பணம் கொடுத்து ஒரு வாரத்துக்கு விடுப்பும் வழங்கியிருந்தார். நியாயமான இவனது உழைப்புக்குக் கிடைத்த நியாயமான முதலாளி.

சூசை இரவு பகல் தூங்காமல்... மூலிகைக் கசாயம் அவித்துக் கொடுப்பதில் இருந்து கண்ணும் கருத்துமாய் மேரிக்குப் பணிவிடைகள் செய்தான். என்றாலும்...

அந்தத் 'திட்டம்' மட்டும் மனதுக்குள் அப்படியே யிருந்தது.

சரியாக ஐந்தாம் நாள்!

கிராமத்தின் பொதுக் கிணறு பெண்களால் நிரம்பி வழிந்தது.

கந்தசாமியினதும்-செஞ்சுலட்சுமியினதும் ஒரே மகள் மோகனா, போனமாதம்தான் பூப்பெய்தியிருந்தாள். இந் நேரம்... தண்ணீர்க் குடத்தை தன் இடுப்பில் சுமந்து கொண்டு பாவாடை சரசரக்க வந்து கொண்டிருந்தாள்.

தூரத்தில் இருந்தே இதை அவதானித்தான் சூசை. மோகனாவை நெருங்கினான். கேட்டான்.

"பொண்ணு... வயசுக்கு வந்துட்டே... உடம்பு தளதளன்னு தக்காளிப் பழமாட்டம் இருக்கு. சாயந்தரம் சவுக்குத் தோப்புக்கு வர்றியா?"

அவள் விழிகளில் பயந்து "என்னத்துக்கு?" என்றாள்.

"கண்ணாலம் பண்ணிக்கத்தான். வேறெதுக்கு புள்ள... அப்பா-அம்மா வெளாட்டெல்லாம் சொல்லித் தர்றேன். வர்றியா?" என்று அவளைத் தொடப்போன அவனது செய்கைக்கு அவள் மிரண்டாள்.

தன் இடுப்பில் இருந்த குடம் விழுந்து உடைந்து தண்ணீர் சிதற, அழுதபடியே ஓடிப்போனாள் மோகனா. கிணற்றில் இருந்த பெண்கள் கூட்டம் வேடிக்கை பார்த்தது. சூசை தன் வீடு நோக்கி யதார்த்தமாய் நடந்தான்.

*****

அரச மரத்தடிப் பஞ்சாயத்துக் கூடியது!

பஞ்சாயத்துக்காரர்கள் மேடையில் அமர்ந்திருந்தனர். நாட்டு வைத்தியர் முருகேசு ஐயா உட்பட.

சூசை, மேரி, கந்தசாமி, செஞ்சுலட்சுமி, மோகனா இவர்களுடன் ஊர்மக்களும் திரண்டிருக்க, தலைமைப் பஞ்சாயத்துக்காரர் கேட்டார்.

"சூசை... மோகனா சொல்றதுபோல நீ அவளைத் தப்பான நோக்கத்தோட சவுக்குத் தோப்புக்குக் கூப்பிட்டியா?"

"இல்லை!" என்றான் சூசை.

"பொய்... பொய்... என்னக் கூப்பிட்டான்."

–மோகனா நிலை மறந்து கத்தினாள்.

ஊராட்கள் வேடிக்கை பார்க்க... பஞ்சாயத்துக்காரர் சாட்சி தேடினார். யாரும் சாட்சி சொல்ல முன்வர வில்லை. கிணற்றில் பார்த்த பெண்கள்கூட மவுனமே சிவன் என்று இருந்தார்கள்.

சாட்சியேதுமில்லாமல் பஞ்சாயத்து கொஞ்ச நேரம் தடுமாற,

ஊர்மக்கள் குழம்பிப் போக... நிமிடங்கள் சில கழித்து,

சூசை தெளிவாக–சத்தமாகச் சொன்னான்.

"சாட்சியேதுமில்லாம மோகனாவை சவுக்குத் தோப்புக்கு நான் கூப்பிட்டேன் என்கிறதுக்காக, எனக்கு எந்த தண்டிப்பும் உங்களால தரமுடியாது. ஆனாலும், நெஜமாச் சொல்றன். மோகனாப் பொண்ண நான் கூப்பிட்டது நெஜம். ஆனால் என்ன காரணம்னு நீங்க எல்லாரும் தெரிஞ்சிக்கணும். இப்படியொரு பஞ்சாயத்துக் கூட்டத்தான் நான் அப்படியொரு நாடகம் போட்டன்."

எல்லோரும் புரியாமல் பார்க்க... குழம்பிப்போக,

கந்தசாமியினால் தன் மனைவி மேரிக்கு ஏற்பட்ட விபத்தையும், கந்தசாமி மேரிமீது வைத்திருக்கும் சபலபுத்தியையும்... மேரி வயிற்றில் அடிபட்டு கருக்கலைந்து போனதையும் விலாவாரியாக விளக்கி அத்தனையையும் பஞ்சாயத்துக்கு ஒப்புவித்த சூசை நிரம்பவும் கண்கலங்கிப்போய்...

ஊர்மக்கள் அவனைப் பரிதாபமாய்ப் பார்த்தார்கள்.

கந்தசாமி குற்ற உணர்வோடு கூனிக் குறுகிப்போய்...

செஞ்சுலட்சுமி தன் கணவன் முன்னால் 'தூ' என்று துப்பினாள்.

சூசை தொடர்ந்தான்.

"இந்தப் பூ மணம் கிராமத்துல பொறந்து வளர்ந்தவன் நான். இந்த மண்ணை நான் மதிக்கிறது மாதிரி பொண்ணுகளையும் மதிக்கிறேன். மரியாதப்படுறன். இது வரைக்கும் நான் இந்தக் கிராமத்துல 'சீ'ன்னு ஒரு வார்த்தை கேட்டதில்லை. முறை தவறி நடந்தது இல்லை. எல்லோருக்கும் தெரியும். எனக்கு உலகமே என் சம்சாரம்தான்க. அவளுக்கு ஏதாவது ஒண்ணுன்னா நான் செத்துப் போயிடுவன். பாவம்... புள்ளத்தாச்சிப் பொண்ணுன்னு பார்க்காம இந்த ஆள் என் சம்சாரம்மேல தப்பா நடக்க முயற்சி பண்ணி... அன்னைக்கே இந்த ஆளை வெட்டிப் போடப் போனேன். என் சம்சாரம்தான் என்னைத் தடுத்துச்சு.

–மோகனாவை நான் சவுக்குத் தோப்புக்கு கூப்பிட்ட துன்னதுமே, அவங்க மனசுல கொதிச்சுப் போய் பஞ்சாயத்துக் கூட்டினாங்க. ஆனால்... அந்தப் பொண்ணோட அப்பன் என் சம்சாரத்துக்குப் பண்ணின துரோகம் மட்டும் எந்த விதத்துல நியாயங்க... அப்போ என் சம்சாரம் மனசும்... என் மனசும் என்ன பாடுபட்டிருக்கம்னு கொஞ்சம் நெனச்சுப் பாருங்க. நானும் ஏழையாப் போனாலும் சாதாரண மனிசன்தான்க. என் சம்சாரத்துக்காக நான் எதையும் பண்ணுவேன்க!"

என்றவனைப் பெருமிதத்தோடு பார்த்தாள் மேரி. இருவர் கண்களும் கலங்கின.

ஏன்... ஒரே, பூ மணக் கிராமமே கண் கலங்கியது.

# பாச வலை

இன்று வழக்கத்திற்கு மாற்றமாக பஸ்வண்டிக்குள் கூட்டம் கொஞ்சம் காற்றுப் புக இடமில்லா இறுக்கத்தில் இருந்தது. ஸூராஜ் வழக்கம் போலவே ஜன்னலின் ஊடாக அரசியல், சினிமா, போஸ்டர்கள் ஒட்டியிருந்த சுவர்களையே... பார்வை செலுத்திக் கொண்டு போனான். வியர்வையில் சட்டை தெப்பலாக நனைந்து விட்டது. குழந்தை ஒன்று புழுக்கத்தில் வீரிட்டு அழும் சப்தம் கேட்கிறது. 'இந்தப் பச்சைக் குழந்தைகளை இப்படிப் பரிதவிக்க விடு கிறார்களே...' என்று அவர்கள் மீது எரிச்சல் பட்டுக் கொண்டான். மனம் லேசாக வலித்தது.

'யார்... குழந்தையோ...?' முகத்தில் கோலம் போட்டிருந்த வியர்வை முத்துக்களை கைக் குட்டையால் அழுத்தமாகத் தேய்த்து துடைத்துக் கொண்டான். இதயம் வேகமாக அடித்துக் கொண்டது. மனம் விட்டு அழ வேண்டும் போலிருந்தது அவனுக்கு. பேசாமல் நடந்தே போய் இருக்கலாம். உள்மனம் அநாவசியமாக ஏதேதோ எல்லாம் அத்திவாரம் போட்டது. மீண்டும் ஜன்னல் பக்கமாக முகத்தை திருப்பிக் கொண்டான். பஸ் வண்டி வேகத்தை அதி கரித்ததால் காற்று ஜன்னலின் ஊடாக அவன் மீது புழுதியை வாரி இறைத்தது. வீடு வரும் வரை பொறுமையாக இருந்தான்.

அவனுக்கு பக்கத்து ஆசனத்தில் அமர்ந் திருந்த ஆள் எழுந்ததும், சுற்றி இருந்தவர்கள் அந்த ஆசனத்தை பெற்றுக் கொள்ளும் எண்ணத்தில் முண்டியடித்துக் கொண்டார் கள். முடிவில் ஒரு இள நங்கையே அந்த ஆசனத்துக்கு சொந்தக் காரியானாள். ஆசனம் கிடைத்த ஆசுவாசத்தில் அந்த நங்கை சுற்றி இருந்தவர்களைப் பார்த்து நாகரிகமாக உதடு நனைத்து சிரித்தாள். ஸூராஜுக்கு வேடிக்கை யாக இருந்தது. கவலை மறந்து உள்ளுக்குள் சிரித்தான்.

அவள் மிகவும் சௌகரியமாக உட்கார்ந்து கொண்டாள். அவளுடைய அழகிய பட்டு வண்ணக் கூந்தல் ஸூராஜின் மதிமுகத்தில் கோலம் போட்டது. இப்போது காற்று கொஞ்சம் தாராளமாக வீசியது.

அங்கும் இங்கும் அலைந்து திரிந்த அவளது விழிகள் இல்லை இல்லை விண் மீன்கள் இறுதியில் ஸூராஜின் மீது நிலைத்து நின்றது. அவள் வெள்ளையாகச் சிரித்தாள். சின்ன விழியிரண்டும் பட்டாம் பூச்சியைப் போல் படபடத்து பரிதவித்தது.

ஸூராஜ் அங்கிருந்த யாரையும் ஒரு பொருட்டாகக் கருதாமல் ஆவலோடு அவளைப் பார்த்து ஒரு புன்னகையை பரிசளித்து பரவசமடைந்தான்.

**பெண்ணே,**
**உன்**
**பால் புன்னகை**
**பாணாற்றுப்**
**படையோ,**
**பாற்கதிர்**
**நிலவோ...?**

அவள் அடி உதட்டைக் கடித்துக் கொண்டு, புருவங்கள் வானவில்லாய் வளைய, விழிச் சிறகுகள் விரித்து ஸூராஜைப் பார்த்து சிநேக பாவத்துடன் சிரித்தாள்.

ஸூராஜ் அவளது மடியில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த புஸ்தகங்களைக் கடைக் கண்ணால் நோட்டம் விட்டான். எல்லாம் வரலாற்றுப் புஸ்தகங்கள்.



ஷெஹ்ரீஷா தாஸிம் துர்கா நகர்

காதல் பண்ணுவதற்குக் கூட புத்திசாலித் தனம் வேண்டும். ஸூராஜின் மனசு மானசீகமாய்த்துடித்தது. ஸூராஜ் அவளின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தானே தவிர எதுவும் பேசவில்லை. அவளும் அப்படித்தான் இரண்டொரு தடவை அவளது உதடுகள் அசைந்தன. ஆனால் வார்த்தைகள் எதுவும் வெளிப்படவில்லை. அவளிடம் எதையோ கேட்டுவிட வேண்டும் என்று துன்பமாகத் துடித்தான்.

அவள் அழகைக் கண்டதும் அவனது மனதுக்குள் நறுக்கென்று கவிதைகள் நகர்ந்தன...

**உன்**
**குறும்பான**
**புன்னகையை**
**குத்தகைக்கு**
**விடுவது**
**எப்போது...?**

அவள் மறுபடியும் உதடு விரித்து உற்சாகமாய் சிரித்தாள்.

ஜன்னல் குளிர்காற்றை சுமந்து வந்து அவனுக்குள் சுகம் சேர்த்தது. சற்று நேர மௌனத்தின் பின்,

"ஹலோ... பேசமாட்டீங்களா..?"

அவள் குனிந்து குறும்பாய் சிரித்தாள்.

"மன்னிக்கணும் நான் யாருடனும் வலியச் சென்று பேச மாட்டேன். சின்ன வயசிலிருந்தே என் பழக்கம் அது!"

ஸூராஜ் வியப்புடன் விழிகளை உருட்டி னான். ஒரு கணம் மூச்சே நின்று விட்டது. அவளுடைய குரல் இனிமையில்.

"என் பெயர் ஸூராஜ்! உங்க பெயர்...?"

"ஷானாஸ்...!!"

"நீங்க மற்றைய பெண்களைவிட ரொம்ப வித்தியாசமா இருக்கிறீங்க."

"எதை வைச்சு அப்படிச் சொல்றீங்க?"

"உங்க பேச்சு மூச்சு இயற்கை அழகு இத்தியாதி.."

ஸூராஜ் அடுக்கிக் கொண்டே போனான்.

"நானும் வாழ்க்கையில் பல மனிதர்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் உங்களைப் போன்று பரந்த உள்ளம், பரிவு, கனிவு, கடமைஉணர்வு... இவை எல்லோருக்கும் இருப்பதில்லை."

ஷானாஸுடைய ஒவ்வொரு பாராட்டு வார்த்தையிலும் ஸூராஜ் உச்சி குளிர்ந்து உயரப் பறந்தான்.

**பெண்ணே!**
**என்**
**பாலைவனத்தில்**
**யார் கட்டிய**
**பந்தல்**
**இது...?**

திடீர் என்று ஷானாஸுடைய முகத்தை உற்றுக் கவனித்த ஸூராஜ் ஒரு கணம் தடுமாறிப் போனான். ஜன்னலின் ஊடாக வீசிக் கொண்டிருந்த காற்றையும் மீறி அவள் கண்களிலிருந்து மளமளவென்று கண்ணீர் பெருகியது.

அவளது நிலமை புரியாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் ஸூராஜ்.

ஸூராஜுக்கு பதில் சொல்லாமல் வேதனையை உதட்டளவில் கடித்துக் கொண்டு தலை குனிந்து சிரித்தாள்.

"ஷானாஸ்... நான் ஏதாவது தப்பாக கேட்டுட்டேனா?"

"இல்லை! ஸூராஜ் எனக்கு உங்களைப் போன்று ஒரு சகோதரர் இருந்தால் எவ்வளவு நல்லா இருக்கும். நான் பதினெட்டு வருடங்களாக ஒரு அண்ணனின் அரவணைப் புக்காக ஏங்கிக்கிட்டு இருக்கேன். தினம் தினம் இந்த ஏக்கம்தான் என்னை வதைக் கிறது. இதே ஏக்கம் என்னைப் பெற்றவர் களுக்கும் இருக்கு."

ஸூராஜ் அதிர்ச்சியுடன் திரும்பினான். எதிர்பாராத அவள் பேச்சினால் ஆடிப்போனான்.

"ஸூராஜ் அண்ணா...!"

ஸூராஜுக்கு தர்ம சங்கடமாகிப் போய்விட்டது.

"நான் கல்லூரிக்குப் போகும் இதே பஸ் வண்டியில் உங்களை அடிக்கடி கவனிச் சிருக்கேன். நான் கூட பலதடவை, நீங்கள் எனக்கு அண்ணனாகப் பிறந்திருக்கக் கூடாதா...? என்று மனசுக்குள்ளேயே பொறாமைப்பட்டிருக்கேன்."

ஸூராஜ் காதல் கனவுகள் கலைந்து வெறுமையாக நின்று கொண்டிருந்தான்.

**கயல் விழியில்**
**மையல்**
**கொண்டேன்.**
**இடையில்**
**கருமேகம்**
**கருக்கட்டியதே...!**

"என்ன அசட்டுத்தனமாக கற்பனை.. சேச்சே..." என்று தனக்குத்தானே கடிந்து கொண்டான்.

ஷானாஸ் வாய்நிறைய அண்ணா... என்று அழைத்ததில் ஸூராஜுக்கு மறுப்புச் சொல்லி விலகிப்போக மனம் இடம் தரவில்லை! அவள் குரலில் உண்மை வருத்தம் கலந் திருப்பது புரிந்தது. குழந்தைத்தனம் கூடி இருந்தது.

ஸூராஜ் அவள் தலைமுடியை கோதி தங்கை என்ற நிஜமான பாச உறவோடு குனிந்து அவள் நெற்றியில் முத்தமிட்டான்.

அவள் அவனை ஆதரவுடன் பார்த்துச் சிரித்தாள்.

**பால் நிலவில்**
**பாய் விரித்தேன்**
**பாவிப் பெண்**
**பாச வலை**
**பின்னி விட்டாள்...!**

பஸ் வண்டி இன்னும் வேகமாக காற்றைக் கிழித்துக் கொண்டு ஊரைச் சென்றடைந்தது.



# ஜென்டில்மேன்

கிண்ணியா நஸ்புள்ளா

நேரம் ஐந்துமணி இருளை கிழித்தவாறு ஆலங்கேணியிலிருந்து கிண்ணியாவை நோக்கி பஸ் வந்து கொண்டிருந்தது.

முன்னால் போங்க! தள்ளிப் போங்க! என்று எரிந்து விழுந்தார் கண்டக்டர். முன்னே றிச் சென்ற நாஸர் தற்செயலாக தனக்கு எதிரில் நிற்கும் ஒரு அழகு தேவதையைக் கண்டான். டீன் ஏஜ் அவள் முகத்தில் வடிந்து கொண்டிருந்தது. ஒருமுறை பார்த்தவர்கள் மீண்டும் மீண்டும் பார்க்க தூண்டும் ஐஸ்வர்யாராய் போன்றவள்.

வேகமாக வந்த பஸ் சடாரென நின்றதால் அவள்மீது மோதினான் நாஸர்.

"ஓ....சாரி" என்றான் நாஸர்.

"இட்ஸ் ஓகே" என்றாள். கூட்டம் இன்னும் அதிகமானது குட்டிக் கராச்சில். கைப்பிடியை பிடித்திருந்த நாஸர் கை மெதுவாக அவளின் கையை உரசியது. மறுப்பேதும் தெரிவிக்கவில்லை அவனுக்கு உற்சாகம் ஏற்பட்டது. அவள் நறுமணமாய் இருந்தாள். அவளிடம் இதமான வாசனை தோன்றியது.

அவனுக்கு தைரியம் வந்தது. காரியத்தை சாதிக்கலாம் என்கிற நம்பிக்கை அடிமன திற்குள் கிடைத்தது.

வளவளப்பான மெல்லிய இடையில் விரலால் ஒத்தடம் கொடுத்தான். அவள் சொர்க்கத்திற்குப் போய் வந்தாள். அவனுக்கு மகிழ்ச்சி. ஒரு சில நிமிடத்தில் ஓடி ஒளிந்து கொண்டது. புகாரியடி ஜங்ஷனில் அவள்



இறங்கினாள்.

தன்னுடைய காரியம் இவ்வளவு சுலப மாய் முடிவடைந்ததையிட்டு மகிழ்ச்சி யடைந்தான் நாஸர்.

அவளிடமிருந்து எடுத்த பர்சை நாஸர் வேகமாக பிரித்தான். பத்துரூபாய் மட்டுமே காணப்பட்டது.

இறங்கிய அவள் மகிழ்ந்தவளாய் தான் திருடிய கனமான அவனின் பர்சை பிரித் தாள். பதினொரு ரூபாய் அந்தப் பர்சுக்குள் இருந்தது. 'பரவாயில்லை நம்மைவிட ஒரு ரூபாய் அதிகமாகத்தான் வைத்து இருக்கான். அவன் ஜென்டில் மேன் தான்' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டாள்.

பின் அவள் பர்சைப் பார்த்தவள் ஏமாந்து போனாள். அப்போது சம்பளப்பா வின் கடையில் 'ஊர்வசி ஊர்வசி டேக் இட் ஈஸி...' என்ற பாடல் ஒலிக்கத் தொடங்கியது.



படிப்பகம்

www.padippakam.com

# அறிந்து கொடு அளந்து கொடு

**அ**ள்ளிக்கொடுப்பான் மன்னன்; அளவே கிடையாது!

பகைவர்கள் படையெடுக்க நடுங்கினார்கள்; மன்னவன் தோள் வலியும், சேனையின் போர் வலியும் அதன் காரணம்!

படையெடுத்து வந்தனர் பாவலர்கள்; பகைமையோடல்ல, தரும் பரிசுகளை வாங்கிப் போக!

கொடுக்கக் கொடுக்க குறைவில்லாத வளம். சோழ நாட்டில் வளத்திற்கா குறைச்சல்!

வாரி வழங்கிக்கொண்டேயிருந்தான் ராஜேந்திரன்.

"சற்றே அளந்தே கொடுத்தால் என்ன, அறிந்தே கொடுத்தால் என்ன?"

அமைச்சரும் பக்குவமாய் சொல்லிப் பார்த்தார். அத்தை குந்தவை நாச்சியாரும் எடுத்துச் சொன்னார்.

"காதற்ற ஊசியும் கடைவழிக்கு வருமோ அத்தை. கடை வழிக்கு வராததை களஞ்சியத்தில் வைத்து என்ன செய்யப் போகிறோம். செத்தபின்னர் உதவாததை பெட்டகத்தில் வைத்திருந்து என்ன காணப் போகிறோம்? தடுக்காதீர்கள் அத்தை!"

என்றான் மன்னன் ராஜேந்திரன்.

"கொடுக்காதே என்று தடுக்கவில்லை. பாத்திரமறியாமல் பிச்சையிடாதே, ஆளைப்பற்றி அறியாமல் அள்ளிக் கொடுக்காதே என்றுதானப்பா சொல்லுகிறேன்!"

அத்தையின் பேச்சில் முதிர்ச்சி தெரிந்தது.

"அத்தை சொல்வதும் சரிதான் இராஜேந்திரா. வேண்டிச் செல்லும் பொருளையெல்லாம் விலை மகளிர் இல்லங்களில் வீசியெறிந்து கொண்டிருக்கிறார்கள் பலர்! குடியில் மூழ்கி குடும்பத்தையே மறந்திருக்கிறார்கள் வேறு பலர்! கொடுத்த பொற்கிழியெல்லாம் குரங்கின் கையில் பட்ட பூமாலையாகிக் கொண்டிருக்கிறது."

அமைச்சரின் கருத்தில் கனிவோடு கலந்த பக்குவமிருந்தது.

இராஜேந்திரனால் நம்ப முடியவில்லை. போற்றப்படவேண்டிய புலவர் பெருமக்கள் தூற்றப்பட வேண்டிய புழுதியில் புரள்வார்களோ?

"கொட்டிக் கொடுக்காதே என்று நேரில் சொல்லாமல், கட்டுக்கதையோடு கலந்து சொல்கிறீர்களா அமைச்சரே?"

"பயன் கருதி பொய்யும் சொல்லலாம் தவறில்லை. ஆனால், நான் இங்கு சொன்னது பொய்யில்லை."

இராஜேந்திரன் யோசித்தான்.

"அமைச்சரே ஒரு சவால்"

"மன்னவரோடு மந்திரி சவாலுக்கு உடன்படுவது மரபுமில்லை. முறையுமில்லை."

"பொறுங்கள் அமைச்சரே, இது ஒன்றும் விபரீதமான சவால் அல்ல. தாங்கள் சொன்னதை விளக்கும் சவால்."

"புரியவில்லை!"

"இன்றிரவு புரியும்!"

மன்னவன் இராஜேந்திரன் அமைச்சரையும், அத்தையையும் நோக்கி புன்னகைத்தான்.

◆◆◆

**இ**ன்றுதான் மூவாயிரம் பொற்காசுகள் கிடைத்தன.

புலவர் கலியனுக்கு இருப்பே கொள்ளவில்லை. வாழ்க இராஜேந்திரன்! பாமாலை பாடினால் பரிசு மழையல்லவா பொழிகிறான்.

புலவருக்கு முதலில் மது தேவைப் பட்டது.

"சீனாவில் இருந்து வந்த மது இருந்தால் கொடு! தானமாய் தந்தாலும் வேண்டாம் உள்ளூர் மது!"

"சீனாவின் மது இருக்கிறது. விலைதான் அதிகம். பாவலர் தாங்குவீர்களோ?"

"பாவலரை என்ன பரதேசியென்றா நினைத்தாய்? உறங்குவது மஞ்சத்தில்! உருளுவது பாவையர் நெஞ்சத்தில்!"

"ஓஹோ... குடியிருப்பது குபேரபுரியில்; அங்கே கொஞ்ச இருக்கிறார்களாக்கும் கோலக் கிளிகள்!"

முணுமுணுத்தவாறு மது பரிமாறப்பட்டது. மது உள்ளே நனைக்க, உடல் அணைக்க ஒரு பிடிப்பு தேடியது.

புலவர் கலியன் கதவு தட்டினார். கதவு திறந்தவள் புன்னகை அம்பெறிந்தாள்.

"வாருங்கள் புலவரே!"

உள்ளே நழுவினார். கதவு தாழிட்டு விட்டு, அழகு சுந்தரி தள்ளாடிய புலவரை அணைத்துக் கொண்டு கட்டிலறைக்குள் புகுந்தாள்.

பஞ்சணை முகப்பில் அமர வைக்கப் பட்ட புலவருக்கு, மேலாடை சற்றே சரிய குன்றாய் நிமிர்ந்திருந்த எழில்கள் கண்ணில் பட்டது.

புலவரின் நெஞ்சுக்குள் புயலடித்தது.

"மலை கண்டேன், மலையே கண்டேன். கலை கண்டேன், கலையே கண்டேன். சிலை கண்டேன், சிலையே கண்டேன். சேயிழையாளின் சிநேகம் கொண்டேன். சேவடியாளாய் சேயிழை மாற, தாவடி என்று மரமாயானேன்."

புலவர் கலியன் நயமாய் உளறினார். அழகு சுந்தரி பிடிபடாமல் விலகினாள்.

"கழுவிய நீரில் நழுவும் மீனோ? தழுவிய கையால் தவறிய கனியோ? சூடிடும் மேனியிங்கே இருக்க, தொடுத்துக் கட்டிய சுந்தரமாலை போவது எங்கே?"



சுந்தரி நகைத்தாள்.

"புகழாரமெல்லாம் சரிதான். பொன்னாரமெல்லாம் எங்கே?"

"அகம் குளிர கவி புனைந்தால், கரமிரண்டும் கொள்ளாமல் பரிசள்ளிக் கொடுக்கும் மன்னன் இருக்கிறான். பொன்னுக்கோ குறைச்சல்?"

"மன்னவர் தரும் பொன்னையெல்லாம் இப்படி மண்ணாக்குவது தவறில்லையா புலவரே?"

புலவர் சிரித்தார்.

"எடியே சுந்தரி, தானமோ தருகிறான் மன்னன், புகழ்பசிக்கு கவியமுது நான் கொடுக்க, அதற்கு கூலி தருகிறான்."

"என்ன புலவரே இப்படிப் பேசி விட்டீர்கள்; மன்னவர் மீது தங்களுக்கு மதிப்பேயில்லையோ?"

"போடி கழுதை! சும்மக்கத் தெரிகிறதே தவிர, சொந்தமாக யோசிக்கத் தெரியவில்லையடி உனக்கு; அதனால்தான் கழுதையென்றேன்; ஆனால் நீ மான்! இராஜேந்திரன் போனால் இன்னொரு இராஜேந்திரன். பாராளுவோர் யாராயிருந்தால் என்னடி, பரிசள்ளித் தருவோராய் இருந்தால் போதுமடி."

"பொல்லாத புலவராக இருக்கிறீர்களே!"

"அடியே சுந்தரி இன்னும் கேளடி!" இவனை வாழ்த்திப்பாடுவேன். இவனை வென்று இன்னொருவன் வந்தால் இவனை வசைபாடி அவனை வாழ்த்துவேன்."

"வசைபாட என்ன இருக்கிறது?"

"எத்தனையோ இருக்கிறது."

"இப்போதே சுட்டிக்காட்டலாமல்லவா?"

"நிகழ்காலத் தவறை எதிர்த்து நெருப்பாக மாறினால் பிழைக்கத் தெரியாதவர்கள் என்று அர்த்தமடி சுந்தரி. எவன் முடி சூட்டிக் கொள்கிறானோ, அவனுக்கு முன்பிருந்த மன்னனை குறை கூறுவதுதான் பிழைக்கும் வழி என்று அர்த்தமடி."

"புரட்சிக்காரப் புலவரய்யா நீர்!"

"சரசம் நாடி வந்தேன் சுந்தரி; எட்டி நின்று புரட்சி பற்றிப் பேசிக்கொண்டிருப்பது ஏனடி? நெருப்பெரியுது நெஞ்சிலே; விருப்பிருக்குது உன்னிலே, பஞ்சணை விரிப்பிருக்குது அருகிலே, தீயணைக்கவா ஏன் சுந்தரி."

புலவர் பஞ்சணையில் மல்லாந்து சாய்ந்தார்.

சாய்ந்தவர் செவியில் கரவோசைகள் விழுந்தன.

"ஆசைக்கு படையலிடு என்று சொன்னால், ஓசைக்கு தாளமிடல் முறையோ? நெஞ்ச விருப்புக்கு விருந்தொன்று கேட்டால், செவிக்கெதற்கு ஓசையென்னும் விருந்தள்ளிப் போட்டாய்?"

"நன்றி அமைச்சரே! நல்ல மரத்திற்கு நன்னீர் ஊற்றுவது தவறில்லை. நச்சு மரத்திற்கு ஊற்றாதே; நன்னீரும் வீணாகும். நம் முயற்சியும் மண்ணாகும். நன்னீரின் பயன் அறியாதவர் என்று நாமும் இகழப்படுவோம் என்று புரிந்து கொண்டேன். நன்றி அமைச்சரே நன்றி!"

என்றான் இராஜேந்திரன்.

**"நன்றியை திருவள்ளுவருக்குத்தான் சொல்ல வேண்டும்; கொடுப்பதை தக்க வழியில் அளந்து கொடு என்று உரைத்தது அவர்தானே!"** என்றார் அமைச்சர்.

அமைச்சர் நினைவில் வைத்திருந்த திருக்குறள் பாடல் இதுதான்.

**"ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்**
**போற்றி வழங்கும் நெறி."**

குறள்-477. அதிகாரம்-48

## இலக்கிய நயம்

தருவது ரசிகன்

---

## சிந்தியா பதில்கள்

**புலிகள் இயக்கத்தினர் ஏனைய தமிழ் அமைப்புக்களோடு இணைந்து செயற்பட முன்வருவார்களா?**

**மு.பாஸ்கரன், குருநாகல்.**

குறைந்தது மேலும் ஒரு ஐந்து வருடத்திற்கு ஒத்திப்போடவேண்டிய கனவு.

▫▫▫

**சந்திரசுவாமியின் அற்புதம்தானாம் பிள்ளையார் பால் குடிப்பது?**

**மா.பாலாம்பிகை, மாத்தளை.**

பிள்ளையார் மட்டும்தான் பால்குடிக்கிறார் என்று செய்தியை அறிந்துவிட்டு, 'நான் பிள்ளையாரை வணங்கினேன்' என்று ஒரு போடுபோட்டார் ச.சாமி. அவர் சொன்ன பின்னர் சிவபெருமான் விக்கிரகமும் பால் குடித்தது. முதலே தெரிந்திருந்தால் அதற்கும் சேர்த்தே உரிமை கோரியிருக்கலாம் என்று ச.சாமி கவலைப்பட்டிருப்பார். அதெல்லாம் இருக்கட்டும், தூய அடியார்களுக்கு துணைநிற்கும் ஆண்டவன், சந்திரசுவாமி போன்ற தடியாசாமிகளுக்கு துணைபோவார் என்று அடியார்கள் நம்பலாமா? சுவாமி விட்ட டூப்பை சில பத்திரிகைகளும் முக்கியத்துவமளித்து வெளியிட்டது பெரிய கொடுமை.

▫▫▫

**எலிசபெத் டெய்லர் மீண்டும் மணமுடிப்பாரா?**

**எல்.என்.வாகீட், கல்முனை.**

பத்தாவது திருமண ஏற்பாடுகள் துரிதகதியில் நடப்பதாகக் கேள்வி. அநேகமாக மணமகன் ஆபரணத் தொழிலதிபர்; பெயர் ஜோய்ஸ் ஜோவ்றி.

▫▫▫

**தீர்வு யோசனைகள் எந்த நிலையில் இருக்கின்றன?**

**கே.ராஜலிங்கம், கண்டி.**

கண்டியில்தானே இருக்கிறீர்கள்? சமீபத்தில் உங்கள் பகுதியில் பெரிய பெரிய ஊர்வலமெல்லாம் நடந்ததல்லவா? தடுக்கக்கூடியவர்கள் களத்தில் இறங்கி விட்டார்கள். இனிமேல் வண்டி நகர்ந்தது மாதிரித்தான் போங்கள். (கடைசி பஸ்ஸையும் தவறவிட்டுக் கொண்டிருக்கிறார்களோ?)

▫▫▫

## சுவாமியின் அற்புதமா?

**சிவாஜி வீட்டுத் திருமணத்தில் ரஜினி கலந்து கொள்ளவில்லையே ஏன்? திருமணம் கின்னஸில் பதியப்படுமா?**

**ஆ. ரவிக்குமார், ஹட்டன்.**

நடந்தது சீமாட்டி வீட்டுக் கல்யாண மல்லவோ! கின்னஸ் புத்தகத்தில் பதியப் படுமோ என்று அம்மா வட்டாரம் எதிர் பார்த்த திருமணம், இப்போது விசாரணைப் புத்தகத்தில் பதியப்பட்டுக் கொண்டிருக்கிறது. என்றாலும் அரசியலில் இந்தமாதிரி விசாரணையெல்லாம் அடிமுடி காண முன்னரே அவுட்டாகிவிடும்.

▫▫▫

**சிந்தனை, கற்பனை-இரண்டுக்கும் உள்ள வேறுபாடு என்ன?**

**எப்.சல்மான்பாரிஸ், கஹட்டோவிட.**

பிடித்தமான பெண்ணை காதலிக்கலாம் என்று நினைப்பது சிந்தனை. காதல் கைகூடுகிறதோ இல்லையோ சிறகில்லாமலேயே பறப்பீர்களே, அப்போது வருவதுதான் கற்பனை. கொஞ்சம் பொய்யும் கலந்தால்தான் கற்பனை ரசிப்பாயிருக்கும்.

▫▫▫

**பெண்களே இல்லாத உலகம் எப்படி இருக்கும்?**

**செல்வி.த.பத்மினி, கொழும்பு-15.**

காற்றில்லாத பலூன் மாதிரி.

▫▫▫

**நான் பிடித்த முயலுக்கு மூன்றுகால் என்றால் என்ன அர்த்தம் சிந்தியா?**

**ஜி.:.ப்ரி, அக்கரைப்பற்று-06.**

நிலக்கண்ணிவெடியில் முயலுக்கு ஒருகால் போய்விட்டது. செய்தித்தணிக்கை காரணமாக நேரடியாகச் சொல்ல தயங்குகிறீர்கள் என்று அர்த்தம்.

▫▫▫

**தெய்வீகக் காதலைப் பற்றி?**

**எம்.ஐ.ஏ. ஹலீம், ஆலங்குடா.**

ஸ்ரீவள்ளி படத்தின் வீடியோ கசட் கிடைத்தால் போட்டுப்பாருங்கள்.

▫▫▫

**சிந்தியா! சிரிப்பு வராத ஒரு ஜோக் சொல்லுங்களேன்?**

**எம். டபிள்யூ.எம்.மனாஸிர், மாத்தளை.**

உங்கள் கேள்வியே போதுமே.

▫▫▫

**ரி.என்.எல். தொலைக்காட்சி ஐ.ரி.என். ஒளிபரப்பிய படங்களைத்தானே தொடர்ந்து காண்பித்து வருகிறது?**

**என்.ஸ்டெல்லா, கொழும்பு-06.**

தமிழ்பேசும் இரசிகர்களை வெறுப்பேற்றியே தீருவது என்று திட்டவட்டமாக தீர்மானித்துவிட்டது ரி.என்.எல். அதில் சந்தேகமேயில்லை.

▫▫▫

**இலங்கை-பாகில்தான் டெஸ்ட் போட்டிகளில் முரளீதரனின் பந்துவீச்சுப் பற்றி?**

**சோ.கணேசன், நுவரெலியா.**

முயலீதரன் என்று சொல்லலாம். அவ்வளவு வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறார்.

▫▫▫

**அமைச்சர் தொண்டமான் வடபகுதிக்குச் செல்லப்போவதாகக் கூறி பல வருடங்களாகின்றனவே. எப்போது செல்லுவார்?**

**வீ.ஜேக்கப், கண்டி.**

செல்லலாம் என்று முடிவெடுத்தது சரி. திரும்பி வரலாமா என்று யோசித்து முடிக்க வேண்டாமா?

---

## குறுக்கெழுத்துப் போட்டி இல—120

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | ■ | 3 |
| | ■ | 4 | | | 5 | |
| 6 | | | | ■ | | |
| | ■ | | ■ | 7 | | ■ |
| | 8 | ■ | 9 | | | 10 |
| ■ | 11 | | ■ | | ■ | |
| 12 | | | | | ■ | |

### இடமிருந்து வலம்

01. இவர் கொடுத்த வரமே பஞ்ச பாண்டவர்கள் தோன்ற உதவியது.
04. நவராத்திரி நோன்புகால மல்லவா? இவரைத் துதிக்காமல் இருக்க முடியுமா?
06. சாதகத்தைக் கெடுப்பது.
09. இளவேனிற்காலத்தில் பூக்கள் இதாகித் தான் பின் மலரும்.
11. இளைஞர்களை தம்பால் ஈர்க்க வாலைக் குமரிகள் இதனை வீசுவார்களாம்.
12. சிலருக்கு எல்லாமே இதுதான்.

### மேலிருந்து கீழ்

01. எடைபார்க்க உதவும் அளவுகோல்.
02. இந்தப்போட்டியில் பங்குபற்றும் நீங்களும் தினமுரசின்.......... தான்.
03. உதயத்தின்போது அருணனின் இது நம்முடலில் படுவது நல்லது.
05. பெண்களின் அழகைப் பளிச்சென எடுத்துக் காட்டுவது.
07. சிலருக்கு இதுவே பெரும் லாபம் தரும் தொழில்.
08. நீரில் உருவாகி நிலத்தில் வளரும் ஒரு பிராணி.
10. காலையில் இதனுள் அமிழ்ந்தெழுந்தால் அன்றையப் பொழுது ஆனந்தமாகக் கழியும்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 07.10.1995இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-120
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-118ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 கா | ஷ் | 2 மீ | ர் | ■ | 3 ஆ | ■ |
| ற் | ■ | 4 சை | ப் | 5 பி | ர | ஸ் |
| றா | 6 சு | ■ | ■ | தா | வா | ■ |
| டி | க் | ■ | 7 சா | ம | ர | ம் |
| ■ | கி | ■ | த | க | ம் | ■ |
| 8 கு | ர | க் | க | ன் | ■ | 9 வா |
| 10 சி | ன் | ன | ம் | ■ | 11 பு | கை |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 118இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்:**

1. முஹமட். நௌசாத், வெள்ளவத்தை.
2. ரி. பிரதீபன், தம்பிலுவில்.
3. திருமதி. எஸ். ஜீவரட்ணம், நீர்கொழும்பு.
4. சித்தி முர்ஹானா, புத்தளம்.
5. எம். பாஸில், மாவனெல்லை.
6. செல்வி. சித்ரா முருகையா, அவிசாவளை.
7. கந்தப்பன் பிரதீஸ்வரன், பெரியபோரதீவு.
8. செல்வி. ரிஸ்மியா மஃறூப், காலி.
9. செல்வி. சி. இந்துராணி, தலவாக்கலை.
10. எம். ராஜதுரை, வவுனியா.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம்

## தலைவாயில் கதவோரம்

உலகில் முதன் முதலில் தோன்றிய காவியங்களுள் மூத்த காவியமெனக் கொள்ளப்படுவது இராமாயணம். வட மொழியான சமஸ்கிருதம் உயர் தனி மொழியாக விளங்கிய திரேதா யுகத்தில் இக் கதையினை வால்மீகி முனிவர் யாத்ததாகக் கூறப்படுகிறது. சமஸ்கிருத மொழியில் யாக்கப்பட்ட முதல் நூலும் இராமாயணமாகும்.

இந் நூலின் நாயகனான இராமபிரான் மகா விஷ்ணுவின் அவதாரம் என்ற நம்பிக்கை பண்டுதொட்டு இன்றுவரை பரவி வருகிறது.

வட இந்தியாவிலும் தென் இந்தியாவிலும் இராமபிரானுக்கு பல பிரசித்தி பெற்ற ஆலயங்கள் உள்ளன. இராம பக்தனாக விளங்கும் அனுமனுக்கும் (ஆஞ்சநேயர்) தனி ஆலயங்கள் உள்ளன.

கர்நாடக இசையில் தியாகராயர் கிருதிகளே உயிர்நாடி எனலாம். தியாகப் பிரம்மம் என்றழைக்கப்படும் அம்மேதை இயற்றிய பாடல்கள் அத்தனையும் இராமபிரான் மீது பக்தி சிரத்தையுடன் புனையப்பட்டவையே.

மகாத்மா காந்தி அடிகளாரும் இராமனைத் தெய்வமாகவே வழிபட்டார். கோட்சேயின் குண்டுகளால் அடிபட்டுக் கீழே சாயும் போதும் ராம்... ராம்... ராம்.. என்றே அவருடைய இறுதி மூச்சுப் பிரிந்தது.

ராமா என்ற இரு எழுத்துக்களிருந்தும் எழும் ஓசை அற்புதமான தெய்வீக அதிர்வலைகளை எழுப்பும் மந்திரசக்தி படைத்தவை என்று அனுபவ ரீதியாக உணர்ந்தவர்கள் உரைக்கின்றனர்.

பாரத நாட்டில் மட்டுமல்லாமல் இலங்கை, மலாயா, இந்தோனேஷியா, இந்தோசைனா (இன்றைய கம்போடியா, லாவோஸ், வியத்நாம்) மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளிலும் சீனா, ஜப்பான், ஃபிலிப்பைன்ஸ் போன்ற தேசங்களிலும் இராமனை இறைவனாகக் கொண்டு வணங்கப்பட்டு வந்துள்ளதைக் காணலாம்.

இற்றைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட - கம்போடியாவின் அங்கோர்வாட் ஆலயத்திலுள்ள ஒன்பது பிரகாரங்களிலும் சுவர்ச் சிற்பங்களாக இராமாயண காதையின் பல கட்டங்களும் மகாபாரத கதாபாத்திரங்களும் இடம் பிடித்துள்ளன.

இந்தோனேசியாவின் தென் கிழக்குக் கோடியிலுள்ள பாலித்தீவில் வாழும் மக்கள் மத்தியில் இராமாயணக் கதை இன்றும் படிக்கப்பட்டு வருகிறது. அத்தீவில் வாழும் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்ற நடனங்கள் இராமகாதையை அடியொற்றியதே. பாலி நடனம் உலகப் புகழ் பெற்றது.

தாய்லாந்து மன்னர் பரம்பரை இன்றும் இராமர் பரம்பரை என்றே நம்பப்படுகிறது. இன்று ஆட்சி புரிபவர் ஒன்பதாவது இராமன் என்றே கூறப்படுகிறார். தலை நகரான பாங்க்கொங்கிலுள்ள அரண்மனை நூதன சாலையில் வாலி-சுக்கிரீபன் சண்டையைச் சித்தரிக்கும் 8 அடி உயரமான சிலை இன்றும் காணப்படுகிறது. இருவரும் மல்யுத்தம் புரிவதை ஒரே கல்லில் அக்காலச் சிற்பி செதுக்கியிருக்கிறான். ஒருவருடைய வாயினுள் மற்றவருடைய வாய் புகுந்து கடித்துக் கொண்டிருப்பதான பகுதியிலேயே இவ்விரு தனித்தனி உருவங்களும் ஒரே கல்லில் பொழியப்பட்டவை என்பதை அறியக்கூடியதாக இருக்கிறது.

மத்திய ஆசிய நாடுகள், குறிப்பாக எகிப்து மற்றும் பல அராபிய நாடுகளிலும் முன்பு இராமாயணத்தின் செல்வாக்கு இருந்திருக்க வேண்டும். அந்நாடுகளின் பெரும்பாலான வரலாறுகளில் 'ராமன்' என்ற உச்சரிப்பினைக் கொண்ட மன்னர்களின் பெயர்களைக் காணக் கூடியதாக இருக்கிறது.

மேற்கத்தைய நாடுகளிலும் இராமர் காதை, நன்கு பரவியிருக்கிறது. தொடர்பு சாதனங்களின் அபரிமித வளர்ச்சியால் இராமாயணம் தொலைக்காட்சி வடிவில் இன்று செல்வாக்குப்பெற்றது. ஆனால் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இராமா யணம் பல உலக மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு அந்தந்த நாட்டு மக்களிடம் மிகுந்த செல்வாக்குப் பெற்றுவிட்டது.

நமது நாடான இலங்கையில் இராம காதை தெரியாதவர் மிகக் குறைவே. இராமாயணத்துடன் இலங்கை மிக மிக நெருக்கமான தொடர்பு கொண்டுள்ளது. இராமர்காதையில் 'வில்ல'னாக-கொடிய அரக்கனாகச் சித்தரிக்கப்பட்ட மன்னன் இராவணன்-இலங்காபுரியை ஆண்டு வந்தவன். இராமனை கதாநாயகனாக- அவதாரபுருடனாக ஏற்றிப் போற்றுமிடத்து அவனுடைய எதிரியை கொடியவனாக வர்ணித்துள்ளார்கள். இருப்பினும் சிவபக்தனாகவும் அருங் குணங்கள் அமையப் பெற்றவனாகவும் இராவணனை அறிமுகப்படுத்த வால்மீகியோ கம்பரோ ஏனைய ஆசிரியர்களோ தவறவில்லை.



வால்மீகி மாமுனிவர்

### இராமாயணப் போட்டி

அடுத்த வாரம் முதல் இராமாயணத்தின் அத்தியாயங்கள் ஆரம்பமாகின்றன. ஒவ்வொரு வாரமும் வாசித்து முடித்தவுடன் உங்களிடம் ஒரு கேள்வி தரப்படும். பதிலை எழுதி அனுப்புவோரில் அதிஷ்டசாலிகளான ஐந்து பேருக்கு இலக்கிய நூல்கள் பரிசளிக்கப்படும்.

என்ன மகிழ்ச்சிதானே?

அடுத்த வாரம் போட்டியில் சந்திப்போம்.

வால்மீகி இராமாயணத்தை தமிழில் தந்த கம்பநாடர் உரிய இடங்களில் உரிய மாற்றங்களைச் செய்துள்ளார். இந்திய மொழிகள் எல்லாவற்றிலும் இராமாயணம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தமிழில் இராமர் கதையை வடிக்துரைத்த பலர் கதாபாத்திரங்களின் குணாதிசயங்களை தங்களுடைய கருத்தக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப மாற்றி அமைத்துள்ளனர்.

இராவணனையே கதாநாயகனாகவும் இராமனை ஓரளவு சீரற்றவனாகவும் அறிமுகப்படுத்தி 'இராவண காவியம்' என்றொரு நூலை புலவர் குழந்தை எழுதியுள்ளார். இராமனை அவதாரமாகக் கருதி வழிபடும் நாட்டில் அப்பாத்திரத்தை இழிவுபடுத்தும் பாங்கில் சித்தரிக்கும் நூலை சென்னை மாநில அரசு பல்லாண்டு காலம் தடை செய்திருந்தது. சென்னை மாநிலத்துக்கு 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டிய அறிஞர் அண்ணாவின் ஆட்சிக் காலத்தில் இராவண காவியத்தின் தடை நீக்கப்பட்டது.

சீதாபிராட்டியாரை இராவணனின் மகள் என்று கூறும் இராமாயணமும் உண்டு. வெறும் காம நோக்குடன் சீதையை இராவணன் கவரவில்லை. அவன் அத்தகைய கொடியவனல்ல- அருங்குணக்குன்று என்று வர்ணிக்கும் கதைகளுமுண்டு.

இராமாயணத்தில் காட்டப்பட்ட இலங்கை இன்றுள்ள இலங்கையல்ல என்றும் - முக்கியமான இலங்கை கடலினுள் அமிழ்ந்து விட்டது என்றும் கூறுவர். ஆனால் இதே இலங்கை தான் இராமாயணத்தில் இடம் பெற்ற நாடு என்று கூறுவதற்குரிய சான்றுகளையும் சுட்டிக்காட்டுவோருளர். நுவரெலியா நகருக்கு அருகேயுள்ள சீத்தா எலியாவில் சீதை அம்மன் கோவில் என்று ஒரு சிறு கோவில் இருக்கிறது. இதுதான் இராவணனால் சீதை சிறைவைக்கப்பட்ட அசோகவனம் என்று கூறுவோருமுண்டு.

தனது தாயாரின் பூசைக்காக சிவலிங்கம் ஒன்றைத் தேடிய இராவணன் திருகோணமலையில் சுயம்புவாக எழுந்தருளிய சிவலிங்கத்தைப் பெயர்த்தெடுக்க திருமலையைத் தன்வாளால் வெட்டினான். அந்த வெட்டுத்தான் 'இராவணன் வெட்டு' என்று இன்றும் இருப்பதாக திருக்கோணமலை கோணேசர் ஆலயத்தின் அருகிலுள்ள பிளந்த பாறையைக் காட்டுவோருமுண்டு.

இலங்கை தலைமன்னருக்கும் தென் இந்தியாவிலுள்ள தனுஷ்கோடிக்குமிடையில் திட்டுத்திட்டாக மணல் மேடுகள் பல கடல் மட்டத்துக்கு மேல் எட்டிப்பார்ப்பது போல் இன்றும் காணப்படுகின்றன. இராமபிரான் சீதையைச் சிறை மீட்க தனது வானரப்படைகளுடன் கடலைக்கடந்து வருவதற்காக வானரப்படைகளைக் கொண்டு அமைத்த பாலத்தின் பகுதிகளே அவை என்று கூறப்படுகிறது. இத்திட்டுக்களை 'இராமர் அணை' என்று கூறுவார்கள்.

தனுஷ்கோடியை அடுத்து இராமேஸ்வரத்திருப்பதி அமைந்திருக்கிறது. இங்குள்ள சிவலிங்கம், இராவண சங்காரம் முடிந்து இந்தியக்கரை சேர்ந்ததும் இராமபிரானால் -மணலால் அமைக்கப்பட்டு வழிபாடியற்றப்பெற்ற லிங்கம் என்று கருதப்படுகிறது.

இதேபோல் மட்டக்களப்பு அமிர்த கழியில் உள்ள மாமாங்கேஸ்வரர் ஆலய மூலவரான லிங்கமும் இராமபிரானால் அமைக்கப்பட்டது என்று நம்பப்படுகிறது. ஆலயத்துடன் அமைந்துள்ள தீர்த்தமும் 'அனுமான் தீர்த்தம்' என்றும் அழைக்கப்படுகிறது.

இராவணனின் தம்பியாகிய விபீடணன் இராமபிரானுடன் இணைந்து கொண்டான். இராவணேசனைக் கொன்ற பின்னர் விபீடணனை இலங்கை அரசனாக இராமன் அரியணை ஏற்றினான் என்பது கதை. இதே விபீடணனுக்கு இலங்கையில் களனி விகாரையிலும் தமிழ் நாடு ஸ்ரீரங்கத்திலும் இருகோயில்கள் உள்ளன.

திருச்சியிலுள்ள மலைக்கோட்டை உச்சிப் பிள்ளையாருக்கும் இலங்கை விபீடணனுக்கும் தொடர்பு ஏற்படுத்தும் கதை ஒன்றுண்டு. இராவண சம்காரம் முடிந்து அயோத்தி திரும்பிய இராமன் விபீடணனையும் தன்னுடன் அழைத்து வந்ததாகவும் பட்டாபிஷேக விழாவில் கலந்துவிட்டு இலங்கை திரும்பிய விபீடணனிடம் தான் வைத்திருந்த தங்கத்தாலான ஸ்ரீரங்க விமானத்தை இராமர் கொடுத்து அனுப்பியதாகவும் அக்கதை கூறுகிறது. வான் வழியாக தனது இரதத்தில் விபீடணன் வரும்போது சிரமபரிகாரம் செய்ய காவேரி நதிக்கரையில் இறங்கியிருக்கிறார். ஸ்ரீரங்க விமானத்தை கீழே தரையில் வைக்காமல் அருகே நின்ற ஒரு சிறுவனிடம், தான் நதியில் நீராடி வரும்வரை வைத்திருக்கும் படி கோரியிருக்கிறார்.

விபீடணர் வரும்வரை காத்திருக்க முடியாத சிறுவன் விமானத்தை காவேரிக் கரையில் வைத்துவிட்டான். கரையேறிவந்த விபீடணரால் விமானத்தைப் பிடுங்கி எடுக்க முடியாமற் போகவே சிறுவனைத் தண்டிக்க முயன்றிருக்கிறார். அச் சிறுவன் திருச்சி மலை உச்சியில் ஓடி ஏறி அமர்ந்தான். அவனுடைய தலையில் விபீடணர் குட்டியதும் அச்சிறுவனே பிள்ளையாராகக் காட்சி அளித்திருக்கிறார்.

இக் கதை ஆறு வர்ணப் படங்களாக வரையப்பட்டு மலைக் கோட்டைப் பிள்ளையார் ஆலக முன் மண்டபத்தில் இன்றும் காணப்பெறுகிறது.

உலகளாவிய ரீதியில் பரந்து பட்டுக் கிடக்கும் இராமகாதையை நம்நாட்டு இளஞ் சந்ததியினர் ஓரளவாவது தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்பதற்காகவே இராமாயணத்தை இலகு தமிழில் தொடர்ச்சியாக வழங்கும் பணியினை நாம் ஏற்றுள்ளோம்.

### வால்மீகி

திரேதாயுகத்தில் வாழ்ந்தவராகக் கருதப்படும் வால்மீகி மாமுனிவர்தான் முதன் முதலில் இராமாயண காவியத்தை உலகிற்கு அளித்தார். சகல நற்பண்புகளும் தேவாம்சமும் பொருந்திய ஒரு சிறந்த கதாபாத்திரத்தை உருவாக்க வேண்டும் என்று வால்மீகி முனிவர் கருதியபோது இராமபிரானே காவிய நாயகனாக அமையப்பெற்றான். அதுவும் மாகவிஷ்ணுவின் அவதாரமே இராமபிரான் என்றும் முனிவருடைய புலன்களுக்குத் தோன்றுகிறது.

இமயமலைச்சாரலில் ஒரு பெரிய கொள்ளைக் கூட்டத்தின் தலைவனாக வால்மீகி வாழ்ந்தான். கொலை-கொள்ளை என்பவை அவனுடைய தொழிலாக இருந்ததே தவிர, இவற்றால் பிறர் துன்பப்படுகின்றனரே...இவற்றால் பெரும் பாபமும் பழியும் ஏற்படுமே என்பவற்றையெல்லாம் அறியும் ஆற்றல் அவனுக்கிருந்ததில்லை.

இத்தகைய கொள்ளைக்கூட்டத் தலைவனை நாரத மாமுனிவர் காண்கிறார். கொலை செய்வது, பிறர் பொருளை அபகரிப்பது ஆகியவை கொடிய பாபம் என்ற உண்மையை உணர்த்துகிறார். தான் செய்யும் பாபங்களுக்குரிய பலனை தானே அனுபவிக்க வேண்டும் என்று நாரதர் கூறிய அறிவுரையினால் தன் தீய தொழிலை விட்டொழித்து தவவாழ்க்கையை வால்மீகி ஏற்கிறான்.

இதற்கிடையில் பிரம்மாவை நோக்கி தவம் செய்த இராவணேசன் சாகாவரமும் அதிக பலமும் சக்தியும் பெறுகிறான். தேவர்களாலோ முனிவர்களாலோ இறைவனாலோ கூட அழியாவரம் பெற்ற இராவணேசன் தான்பெற்ற வரத்தின் மகிமையை பரிசோதிக்க முற்படுகிறான். தேவர்களையும் முனிவர்களையும் இம்சிக்கிறான். இதனால் துன்பம் பொறுக்கமாட்டாத தேவர்கள் பிரம்மாவை அணுக, அவர் மகாவிஷ்ணுவிடம் அவர்களை அழைத்துச்செல்கிறார்.

தேவர்களாலோ முனிவர்களாலோ அழியாவரம் பெற்ற இராவணன் மனிதர்களைப் பற்றிக் குறிப்பிடவில்லை. இதனால் தானே மானிடனாக பூமியில் அவதரித்து இராவணனையும் அவனுடன் சேர்ந்து அடாவடித்தனங்களில் ஈடுபடும் அரக்கர்களையும் அழித்தொழிக்கப்போவதாக மகாவிஷ்ணு தேவர்களிடம் வாக்களித்தார். தான் எடுக்கவிருக்கும் அவதாரம் இராமாவதாரம் என்றும் குறிப்பிட்டார்.

இந்த உரையாடல்களை மறைந்திருந்து கேட்ட நாரதர் உடனே பூலோகம் விரைந்து-பந்நெடுங்காலம் தவசிலிருக்கும் வால்மீகரை அணுகுகிறார். ஒரே இடத்தில் பல வருடங்கள் அன்ன ஆகாரமின்றி தவசிலிருந்த வால்மீகரின் உடலை புற்று மூடியிருந்தது. தான் கேட்ட இரகசியத்தை எப்படியாவது வால்மீகரிடம் கூறிவிட வேண்டும் என்று துடித்த நாரதருக்கு- 'தேவ இரகசியத்தை தக்கதருணத்தில் மறந்து விடுவாய்' என்று இடப்பட்ட சாபத்தின் பயனாக-அவதாரத்தின் பெயர் வாயில் வரவில்லை. வால்மீகி முனிவர் தவமியற்றிய இடத்திலிருந்த மரா மரத்தைக் காண்கிறார். "மகாவிஷ்ணு 'மரா' அவதாரம் எடுக்கப்போகிறார்" என்று தடுமாற்றத்துடன் கூறிமுடித்தார்.

இதனையே வால்மீகி 'மரா...மரா...' என்று இடைவிடாது சொல்லிக்கொண்டேயிருக்க 'ராம... ராம...ராம' என்ற உண்மையான அவதாரநாமம் அவர் வாயில் வந்துவிட்டது.

தவம் கலைந்த வால்மீகி முனிவர் தவச்சாலை நிறுவி சீடர்களுடன் தங்கியிருந்த போது ஒருநாள் நீர் நிலையில் காலைக் கடன்களை முடிப்பதற்காகச் சென்றார். ஒரு மரக்கிளையில் கிரவுஞ்ச பட்சிகள் ஆணும் பெண்ணுமாக ஆனந்தமாக இருக்கும் வேளையில் வேடுவன் ஒருவன் தன்வில்லில் பாணம் ஏற்றி ஆண்பறவையைக் கொன்றுவிட்டான். தன் இணையை இழந்து தவித்த அப்பெண் பறவை படும் துயர் கண்ட வால்மீகி முனிவர் அம்பினை எய்த வேடுவனைச் சபித்துவிட்டார். தவவலிமையில் சிறந்த அம்மாமுனிவர் இட்டசாபத்தின் போது எழுந்த வாக்கியங்களின் ஓசைநயமும் ஒழுங்கு முறைகளும் மிகமிக அலங்காரமாக அமைந்துவிட்டன. தனது தவவலிமையின் பலனை கோபத்தால் சிதைத்து விட்ட மைக்காக முனிவர் மனம் வருந்தினார். எனினும் அப்போது-கடும் கோபத்தில் வெளிப்பட்ட வாக்கியங்கள் மாபெரும் காப்பியத்தின் அடிநாதமாக வெளிவந்தன என்பதனை முனிவர் அப்போது அறிந்திருக்கவில்லை.

வால்மீகி முனிவரின் மன வேதனையை உணர்ந்த பிரம்மதேவன் முனிவரிடம்: "மாமுனிவரே! தாங்கள் கோபத்தில் உதிர்த்த வார்த்தைகளில் தெய்வீக நாதமும் திவ்யமான சந்தமும் பொதிந்து ஒலிக்கின்றன. இதனையே தாங்கள் பாடும் இராமாவதார காப்பியத்தின் உயிர்நாடியாகவைத்து தங்கள் பணியை ஆரம்பியுங்கள்" என்றார்.

இக்காலகட்டத்தில் இராமாவதாரம் இவ்வாறுதான் அமைய வேண்டும் என்று வசிட்ட மாமுனிவரும் விசுவாமித்திர மாமுனிவரும் வால்மீகி மாமுனிவருடன் இருந்து விவாதித்து இக்காவியத்துக்கான கட்டுக்கோப்பை அமைத்தபின் இராமாயணத்துக்கான சுலோகங்களை வால்மீகி முனிவர் இயற்றிப் பாடலானார்.

வால்மீகி இராமாயணத்தின் தோற்றுவாயை ஆராயப்புகுந்த எமக்குக் கிடைத்த தகவல்களின் மூலம் பெறப்பட்ட பல கதைகளின் சாரமிது.

### கம்பநாடன்

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் வால்மீகி முனிவரால் யாக்கப்பட்ட இராமாயணம் இந்தியாவின் பல பாகங்களுக்கும் பரவியது. தமிழ்நாட்டில் பல்லவப் பேரரசு கவிழ்ந்து சோழர்காலம் ஆரம்பித்த காலத்தில் சோழப் பேரரசனொருவனுடைய வேண்டுகோளுக்கிசைந்தே கம்பநாடன் இராம சரிதையினை இயற்றினார் என்று கூறப்படுகிறது.

கம்பர் 9ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்று ஒரு சாரார் கூற ஏனையோர் 10 முதல் 13ம் நூற்றாண்டுகளின் இடைப்பட்ட காலங்களை கம்பர் வாழ்ந்த காலம் என்கின்றனர். கம்பரைப் பற்றி பல்வேறுபட்ட கதைகள் கூறப்படுகின்றன. அவருடைய பிறந்து வாழ்ந்த காலத்தை நிர்ணயிக்க முடியாதிருப்பது போலவே அவரைப்பற்றிய கதைகளின் உண்மை-மற்றும் புனைந்துரைகளை உணர முடியாதிருக்கிறது.

கம்பர்-கம்பநாட்டு அரசனின் மகன் என்றும் அந்நாடு கலகத்தால் சீரழிய ஓர் ஒச்சன் வீட்டில் தஞ்சம் புகுந்து பின்னர் சடையப்பவள்ளல் என்பவரின் தயவில் வளர்ந்தார் என்று யாழ்ப்பாணம் சதாசிவம் பிள்ளை அவர்கள் தொகுத்த 'தமிழ் இலக்கியத் திரட்டு' கூறுகிறது.

மூலவர் ஆகித்தன் என்ற பிராமணரின் மகன் கம்பர் என்று மற்றொருகதை கூறுகிறது.

ஔவையார், ஒட்டக்கூத்தர், புகழேந்தி போன்ற பெரும்புலவர் காலத்தில் வாழ்ந்தவர் கம்பர் என்றும் கூறப்படுகிறது.

யாழ். சுன்னாகத்தைச் சேர்ந்த குமாரசாமிப் புலவரின் கூற்றுப்படி கம்பர் காலம் கி.பி. 1120 முதல் 1200 வரையாகும். அகளங்க சோழனின் அவைப்புலவராக திருவேகம்பமுடையார் என்ற பெயருடன் வாழ்ந்தார் என்றும் ,இவர் வைணவ மதத்தவர் என்றும் கூறுகிறார்.

தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவழுந்தூரில் கம்பர் வாழ்ந்திருக்கிறார். சோழ, பாண்டிய மற்றும் சேரநாட்டு மன்னர்களுடனும் தொடர்பு வைத்திருந்திருக்கிறார் என்றும் பல கதைகள் கூறுகின்றன. இவற்றில் ஓரளவு நம்பிக்கை கொள்ளச் சான்றுகளுள்ளன. இறுதியில் செட்டி நாட்டிலுள்ள நாட்டரசன் கோட்டையில் இவர் இறையடி சேர்ந்தார். இன்றும் கம்பன் வீட்டுச் செட்டியார் குடும்பத்தின் பராமரிப்பில் கம்பரின் சமாதி இருப்பதைப் பார்க்க முடிகிறது.

வடமொழியில் வால்மீகி முனிவரால் யாக்கப்பட்ட இராமாயணத்தை தமிழர் தம்பண்புக்கேற்ப சிற்சில மாற்றங்களைச் செய்து 'இராமகாதை' என்ற பெயரில் யாத்து திருவெண்ணெய்நல்லூர் என வழங்கப்பெறும் திருவரங்கப் பெருமாள் (ஸ்ரீரங்கம்) சந்நிதியில் அரங்கேற்றியுள்ளார். இவ்வாலய வீதியில் ஸ்ரீரங்கநாயகி சந்நிதி அருகே கம்பர் இராமகாதை அரங்கேற்றிய மண்டபம் என்று ஒரு அமைப்பு இப்போதும் இருப்பதைக் காணலாம்.



கவிச்சக்கரவர்த்தி கம்பர்

## இராஜகுமாரன்

### எமது பணி

இராமாயணம் உலக மகாகாவியங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது. உயர்ந்த குணங்களை உடைய ஓர் உத்தமனாக இராமன் சித்தரிக்கப்பட்டுள்ளான். இலங்கை வேந்தன் இராவணனும் அரும்பெரும் குணங்களை உடைய சிவபக்தனாக விளங்கியுள்ளான்.

இராமன் தனது போர் வீரர்களாக வானரங்களை அமைத்துக் கொண்டார் என்று வர்ணிக்கப்படுகிறது. வடநாட்டு மன்னனான இராமன் வனவாசமேற்றிருந்த காலத்தில் தன் மனைவியைப்பிரிந்து தென்னாடு வந்து தான் படைதிரட்டுகிறான். இதனால் வானரப்படை என்று கூறப்பட்டது தென்னாட்டவரையே என்பதனை மறுப்பதற்கில்லை. வட நாட்டவருக்கும் தென்னாட்டவருக்குமிடையில் காணப்படும் முக அமைப்பை அடிப்படையாகக் கொண்டே 'வானரம்' என்ற வர்ணனை தென்னாட்டவரைக் குறிக்கும் பதமாக பயன்படுத்தப் பட்டிருக்க வேண்டும்.

வால்மீகி இராமாயணத்தின் மொழி பெயர்ப்பையும் கம்பராமாயாணத்தின் தனிச் சிறப்பம்சங்களையும் ஒன்று சேர்த்துச் சீராக்கி எமது சந்ததியினருக்கு அளிக்க ஆசைப்பட்டு இம்மகத்தான பணியினை ஏற்றுள்ளேன்.

இராமாயணத்தைப் பாடமுற்பட்ட கவிச்சக்கரவர்த்தி கம்பனே தனது பாயிரத்தில்,

**ஓசை பெற்று உயர் பாற் கடல் உற்று, ஒரு**
**பூசை, முற்றவும் நக்குபு , புக்கென,**
**ஆசை பற்றி அறைய லுற்றேன்-மற்று, இக்**
**காசுஇல் கொற்றத்து இராமன் கதை அரோ!**

என்று கூறுகிறான்.

"தேவர்களுக்கு அமுதத்தை அளித்த பாற்கடல் முழுவதையும் ஒரு பூனையானது தனது நாக்கினால் நக்கிக்குடித்து விடமுடியும் என்று பேராசையால் முயற்சிப்பதற்கு ஒப்பாகும்-இராமாவதாரக் கதையினை நான் கூற வந்தமை..." என்பது இதன் பொருள்.

அப்பேற்பட்ட புலவன் தன்னைப் பேராசை கொண்ட பூனையாக வர்ணிக்கப் போந்தான். இந்நிலையில் இம்மாபெரும் பணியை எத்தகைய ஆற்றலோ புலமையோ அறிவோ அற்ற துரும்பான நான் ஏற்றுள்ளேன்.

அவனருளால் அவன் தாழ் வணங்கி இந்த வான்கோழி எடுத்திருக்கும் பணி சிறப்புற ஈடேற அவனருளும் அன்பு வாசகர்களின் நல்லாதரவும் வேண்டி ஆரம்பிக்கிறேன்.

*(அடுத்த வாரம் சந்திப்போம்.)*


படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(PRO/7/95)

www.padippakam.com




அருள் ஜுவலர்ஸ்

ARUL JUWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வன்ன நகைகள்
மின்னிப் பேசுகின்றன.

436331

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


# பாரு - பாரு - உஷாரு




அம்மன் ஜுவல்

AMMAN JUWEL



புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு

332033

29 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


→ கீரிப்பிள்ளைகளின் இனத்தோடு ஒட்டியதாக இருப்பவை. ஆனால் கீரிப்பிள்ளைகளைவிட புத்திசாலிகள். இவற்றின் பெயர் 'மேற் கற்'

எப்போதும் விழிப்பாகவே இருப்பவை. வேட்டைக்குப் போனால் ஒரு மேற்கற் மரத்தில் இருந்து 'சென்றி' பார்க்கும். ஏனையவை பதுங்கி இருக்கும். கொரில்லாத் தாக்குதல் பாணிதான். எதிரி சிக்கினால் அவ்வளவுதான். தனியாக நடமாடுவதில்லை. பயங்கரமான உஷார் பேர் வழிகள். காதல் விவகாரங்களிலும் படு தாராளம். ஒரே தடவையில் 4-5 குட்டிகள் ஈனும். ஆயுட்காலம் 10 வருடம். 10 அடி ஆழமான குகைவீட்டில் தான் வாழ்க்கை. ஒற்றுமையாக வாழ்வதில் முன்னோடிகள். 20 அங்குல நீளமாக வளரும். எடை, 2 இறாத்தல்.

பாம்பு கடித்தால் 'மேற்கற்' றுகளுக்கு ஒன்றும் நேராது. விஷ எதிர்ப்பு சக்தி உடலில் இருக்கிறது. பல்லி, சிலந்தி, நட்டுவக்காலி என்பவை பிரியமான உணவு. அதிகம் காணப்படுவது தென் அமெரிக்காவில்.

# அம்பானவன்

# தரு வது லி யோ டை



→ கனடாவின் ஒட்டப்பந்தய வீரர் 'டொனோவன் பெய்லி' வயது 27. ஜமெய்க்காவில் பிறந்து தற்போது கனடாவில் வசிக்கிறார்.

ஓட்டத்தில் அம்பெனப்பாய்பவர். இவர்தான் உலகில் முதலாவது அதிவேக மனிதன். சமீபத்தில் சுவீடனில் நடந்த 100 மீட்டர் ஒட்டப்பந்தயத்தில் பெய்லி முதலாமிடத்தில் வந்தார். 9.97 செக்கன்களில் 100 மீட்டரைக் கடந்துவிட்டார். இதன் மூலம்போதைமருந்தை உட்கொண்டு பென் ஜோன்சன் கனடா விற்கு ஏற்படுத்திய களங்கத்தை பெய்லி துடைத்தெறிந்து விட்டார்.

100 மீட்டரை 9.91 செக்கன் களில் கடந்து உலக சாதனை படைத்தவர் அமெரிக்க வீரர் லெறோய்பறல். அதனையும் முறி யடித்தால் பெய்லி உலக சாதனை யாளராகிவிடுவார்.

# கட்டழகன் - கலரழகன்





கலராக இருக்கிறது பாருங்கள் குரங்கு. இதற்கு 'மாண்டிரில்' என்று பெயர். மாந்தில் இனக்குரங்குகளில் ஆண் குரங்குகளுக்கு மட்டுமே முகத்தில் வர்ணம் இருக்கும். பெண் குரங்குகளுக்கு அந்தப் பாக்கியம் கிடையாது. 28-30 அங்குல நீளமாக வளரும். வாலின் நீளம் 2-3 அங்குலம் வரை எடை 120 இறாத்தல். பெண் மட்டும் 60 இறாத்தல். (ரொம்பப் பலவீனம்) தாம்பத்திய உறவில் பயங்கரக் கட்டுப்பாடு. 33 நாட்களுக்கு ஒருமுறை மட்டுமே உறவு வைத்துக்கொள்ளும். மத்திய ஆபிரிக்காவில் அதிகம் காணப்படும். அழிந்துவரும் இனத்தில் இதுவும் ஒன்று.



← அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியில் தனது பிரியமான எதிரி ஸ்டெபிகிராபிடம் தோற்றுப் போனார் மோனிகா செல்ஸ். வெற்றிக் கனி தவறிப்போய் விட்டது. நீண்டகால ஓய்வு தடுமாற வைத்துவிட்டது. ஆனாலும் ஆட்டத்தில் மோசமில்லை. ஸ்டெபியை மற்றொரு களத்தில் சந்திக்க தயாராகி வருகிறார் மோனிகா.

# தவறிப்போன கனி



கீழே படத்தில் அந்த வீரர் அகற்றுவதுதான் நிலக் கண்ணிவெடி. கருவி கண்டுபிடித்து சொன்னவுடன் பத்திரமாக விலக்குகிறார் ஐக்கியநாடுகள் அமைதிப்படை வீரர்.

# மரணத்தை விலக்கு



# காலடியில் மரணம்

→ நிலக் கண்ணிவெடிகள் ஆபத்தானவை. காலடியில் மரணம் காத்திருக்கும். எங்கே காத்திருக்கிறது என்பது தெரியாது.

கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் படையினர் ஈடுபட்டனர் என்று செய்திகள் அறிந்திருப்பீர்கள். கண்ணி வெடியைக் கண்டறியும் கருவிதான் படத்தில் இருக்கிறது. புதைக்கப் பட்டிருந்தால் கண்டுபிடித்து சத்தம் எழுப்பும். ஒருவேளை கால்பதித்து நிற்கும் இடத்திலேயே கண்ணிவெடி இருந்தாலும் ஆபத்தில்லாமல் ஆளை விலக்கிவிடும். அதற்கேற்ப பாதம் வைக்கும் கருவி இருக்கிறது. அதில்தான் வீரர் ஏறிநிற்கிறார். ஆனாலும் யுத்த முனைகளில் வேகமாக முன்னேறும் போது இவ்வாறு அறுதலாக ஆராய நேரமிருக்காது. அதனால்தான் சிக்க வேண்டி ஏற்படுகிறது. வடக்கு-கிழக்கில் படையினரின் கண்ணிவெடிகளில் புலிகளும் சிக்கியிருக்கிறார்கள். புலிகளின் கண்ணிவெடியில் படையினரும் சிக்கியிருக்கிறார்கள். தற்போது சிங்கப்பூரில் ஒரு பாதணி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அது பாவனைக்கு வந்தால் நிலக் கண்ணிவெடித்தாக்குதல்களை ஓரளவு தவிர்க்க முடியும்.



படிப்பகம்